Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 13 சனிக்கிழமை (29.11.2014) பக்கங்கள் 20 ஓசை – 060

# போர்க்குற்ற விசாரணைக்கு அனுமதிக்கப் போவதில்லை



## மகிந்தவையும் படையினரையும் பாதுகாப்பேன் எதிரணி வேட்பாளர் மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் அவரது குடும்பத்தினரையும் யுத்தத்தில் ஈடுபட்ட படையினரையும் சர்வதேச விசாரணைகளிலிருந்து பாதுகாப்பேன் என்றும் அவ்வாறான விசாரணைகளுக்கு நான் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சர்வதேச ரீதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எந்த சவாலாக இருந்தாலும் தான் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னரும் அவருக்காக குரல் கொடுக்க போவதாகவும் சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தால், அவரை சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப் போவதாக வெளிநாட்டில் உள்ள விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்பட்ட புலம்பெயர் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

19 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பு பிரதேச சபை உறுப்பினர் அரசுடன் இணைந்தார்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை - ஆலையடிவேம்பு பிரதேச சபையின் உறுப்பினர் வைரமுத்து தியாகராஜா ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து கொண்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஆலையடிவேம்பு பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தின் போது விசேட உரையாற்றிய அவர், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்கும் வகையில் ஆளும் கட்சியுடன் இணைந்து கொள்வதாக அறிவித்துள்ளார்.

தேர்தல் மூலம் மக்களால் நேரடியாக தெரிவுசெய்யப்பட்ட வடிவேல் துஷ்யந்தன் சுகயீனம் காரணமாக உயிரிழந்த

19 ஆம் பக்கம் பார்க்க

## எம்.பி. ஆகிறார் அமீர் அலி

(கொழும்பு)



தேசியப்பட்டியல் நாடாளுமன்ற பதவியை இராஜினாமாச் செய்த ஆளும் கட்சி உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வரின் வெற்றிடத்துக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அமீர் அலி நியமிக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## ஆளும் கட்சி எம்.பி. அஸ்வர் நேற்று இராஜினாமா



(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

நேற்றைய தினம்

19 ஆம் பக்கம் பார்க்க

## எதிரணியின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்னும் தயாராகவில்லை

### கரு எம்.பி. தகவல்

(கொழும்பு)

பொது எதிரணியின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்னும் தயாராகவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

தேர்தல் விஞ்ஞாபனம் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஆகியவற்றை தயாரித்து முடிக்கும் இறுதிக்கட்டத்தில் உள்ளோம், புரிந்துணர்வு உடன்படிக்கை நிறைவேற்று அதிகார முறை நீக்கம் மற்றும் தேசிய அரசை அமைப்பது தொடர்பானதாக காணப்படும், எதிர்வரும் திங்கட்கிழமை இது கைச்சாத்தாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வேட்புமனுத்தாக்கல் செய்த பின்னரே குறிப்பிட்ட தேர்தல் விஞ்ஞாபனம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும், பொது வேட்பாளருடன் இணைந்து செயற்படவுள்ள எதிர்க்கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளைக் கவரக்கூடிய விதத்திலேயே தேர்தல் விஞ்ஞாபனம் வடிவமைக்கப்

19 ஆம் பக்கம் பார்க்க

## சமயாசமய ஊழியர்கள் 18 பேருக்கு நேற்று நியமனம்



(யாழ்ப்பாணம்)

இளைய சமூகம் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்வதற்கும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவுமே நாம் வேலைவாய்ப்புகளை வழங்கி வருகின்றோம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற வைபவத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைய இளைய சமூகம் வேலைவாய்ப்பில்லாத நிலையில் பல்வேறுபட்ட இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதுடன், வாழ்வாதாரத்தையும் நம்பிக்கையுடன் முன்னெடுக்க முடியாத அவலம் எதிர்கொள்ளப்படுகின்றது.

இந்நிலையில்தான் நாம் அரசுடனான நல்லுறவின் ஊடாக வேலைவாய்ப்புக்கள் மட்டுமன்றி மக்களின் வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் வகையிலான செயற்திட்டங்களை

19 ஆம் பக்கம் பார்க்க

## இரு வாரத்தில் மட்டும் யாழில் 407 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கடந்த இரு வாரங்களாக இடம்பெற்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் 407 பேர் கைதுசெய்யப்பட்டதாக யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.டி.விமலசேன தெரிவித்தார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்தியத்தில் அடித்துக் காயப்படுத்திய 69 பேரும், சூழலை அசுத்தமாக வைத்திருந்த குற்றச்சாட்டில் 12 பேரும், வீதி விபத்துக்களில் 9 பேரும், துன்புறுத்தியதாக ஒருவரும், ஏனைய குற்றங்களுக்காக 33 பேரும், சந்தேகத்தின் பேரில் 55 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 52 பேரும், களவு தொடர்பில் 13 பேரும், குடித்துவிட்டு கலகம் விளைவித்த 11 பேரும், மது போதையில் வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்த 26 பேரும், அனுமதியின்றி பழைய இரும்பு கொண்டு சென்ற 2 பேரும், இராணுவ சீருடை வைத்திருந்த ஒருவரும், பொது இடத்தில் மது அருந்திய 6 பேரும், கொள்ளையுடன்

19 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் ஆணையாளர் வெளிநாடு பயணம்


(கொழும்பு)

தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதியே தேர்தல் ஆணையாளர் நாடு திரும்பவுள்ளார்.

தேர்தல் ஆணையாளரின் வெளிநாட்டு விஜயம் காரணமாக,

19 ஆம் பக்கம் பார்க்க



# உணர்ச்சிப் பேச்சு அபிவிருத்திக்கு உதவாது மக்கள் மனதறிந்து சேவை செய்யவேண்டும்

## மாகாண சபை உறுப்பினர் தவநாதன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

ஒரு அமைச்சராலும் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் இரண்டு மாகாணசபை உறுப்பினர்களும் யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் மக்கள் மேம்பாட்டுப்பணியில் ஒரு வீதத்தையேனும் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மற்றும் பல அமைச்சர்கள் உட்பட 30 மாகாணசபை உறுப்பினர்களையும் கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரால் மேற்கொள்ளமுடியவில்லை என ஈ.பி.டி.பி. யின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரத்தில் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆரம்பித்துவைத்து நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

மக்களின் அதிக வாக்குகளைப் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களால் மேடைகளில் ஆக்ரோசமாக பேசவும் நாடாளுமன்றத்தில் உணர்ச்சி பொங்க உரையாற்றுவதற்கும் மட்டுமே முடியும்

மக்களின் மேம்பாட்டுக்காகவும் பாதிக்கப்பட்ட மக்களை அப்பாதிப்பிலிருந்து மீட்டெடுப்பதற்காகவும் எதையுமே செய்ய முடியாது. ஏனெனில் அதற்கான முயற்சியும் ஊக்கமும் செய்ய வேண்டும் என்ற மன உணர்வும் அவர்களிடம் இல்லை.

வட்டக்கச்சியில் மூன்று பிரதேச சபை உறுப்பினர்கள் இணைந்து பொது நூலகம் ஒன்றை அமைத்து வருகின்றார்கள் அந்த செயற்பாட்டை நாம் வரவேற்கின்றோம்.

ஆனால் வட்டக்கச்சியை வசிப்பிடமாகக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினரால் இப்பிரதேச மக்களுக்கு எதையுமே செய்யமுடியவில்லை. அந்த அளவுக்குத்தான் மக்கள் மீதான பற்றும் தேசப்பற்றும் அவரிடம் உள்ளது என தவநாதன் மேலும குறிப்பிட்டார்.

இந்நிகழ்வுகளில் இராமநாதபுரம் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர், வன்னியர் சிங்கம் வெற்றிப்பாதை சன சமூக நிலையத்தலைவர் சீலன், பொருளாளர் கருணாநிதி உப செயலாளர் தங்கேஸ்வரி மற்றும் கலைச்சுடர் சனசமூக நிலைய செயலாளர் கோமதி அதன் உபதலைவர் கதிர்காமநாதன், பொருளாளர் சுபாஸ்கரன் மற்றும் இராமநாதபுரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி சறோஜாதேவி கிராம அபிவிருத்திச்சங்க செயலாளர் சின்னத்தம்பி ஆகியோரும் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் மக்களும் கலந்துகொண்டனர்.

# போக்குவரத்து பாதிக்கும் அளவிற்கு வரணி மாசேரி வீதி அமைந்துள்ளது

## - அதிகாரிகள் பாராமுகம்

(வரணி)

வரணி மாசேரி சைவப்பிரகாச வித்தியசாலைக்கு செல்லும் வீதி மிக மோசமான நிலையில் குண்டும் குழியுமாக பயணிக்க முடியாதவாறு வெள்ள நீர் தேங்கியுள்ளது.

பிரயாணிகள், வாகனங்கள், கால்நடையாகச் செல்வோர் மற்றும் பாடசாலை மாணவர்கள் இவ்வீதியால் இடையூறுகளை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக பாடசாலை மாணவர்கள் இவ் அசுத்த நீரில் பயணித்து தமது காலணிகள் நனைந்தவாறு பாடசாலைக்குச் செல்கின்றனர்.

இவ்வீதியூடாக கிராம அலுவலர் அலுவலகம், முன்பள்ளி, பாடசாலை, பனை அபிவிருத்திச் சங்கம் போன்ற நிறுவனங்களுக்கு முக்கிய தேவைகளுக்காக குறித்து மக்கள் பயணிக்க வேண்டியுள்ளது. எனவே உரிய அதிகாரிகள், மக்கள் நலன் கருதி இவ் வீதியை உடன் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது. (150)

# கிளிநொச்சியில் இன்று கருத்தமர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட சட்ட உதவி ஆணைக்குழுவினால் கிராம மட்ட அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கான சட்டம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் குறித்த உறுப்பினர்கள் மற்றும் பிரதிநிதிகளைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (77)



**நயினாதீவைச் சேர்ந்த தபால் ஊழியரான முத்துக்குமார் புனிதநாதன் மற்றும் ஆசிரியரான சிவஞானம் ஸ்ரீஞானேஸ்வரன் ஆகியோர் கடந்த 26 ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வைத்து மாவட்ட நீதிபதி செ.லெனின்குமார் முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்துகெள்வதைக் காணலாம்.** (21)

# மானிப்பாய் மத்திய சந்தையில் விலை அதிகம்; நுகர்வோர் விசனம்

(சுன்னாகம்)

மானிப்பாய் மத்திய சந்தையில் மரக்கறிகளின் விலை ஏனைய குடாநாட்டுச் சந்தைகளிலும் பார்க்க அதிகரித்து காணப்படுவதாக மானிப்பாய் பகுதி நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனைவிட குறிப்பாக மானிப்பாய் ப்குதி கடைகளில் கூட நியாயமான விலையில் மரக்கறிகள் விற்பனை செய்யப்படுவதாகவும், சந்தைகளிலேயே மரக்கறிகள் விலை குறைவாக விற்கப்படவேண்டிய நிலையில் இச்சந்தை வியாபாரிகள் மரக்கறிகளை கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதால் தாம் கஷ்ட நிலையை எதிர்நோக்குவதாக நுகர்வோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை மருதனார் மடம், திருநெல்வேலி மற்றும் சுங்கானைச் சந்தைகளில் மரக்கறிகளின் விலையிலும் பார்க்க இச்சந்தையில் 3 மடங்கு விலை அதிகரிப்பில் மரக்கறிகள் விற்பனை செய்யப்படுவதாக சுட்டிக்காட்டும் நுகர்வோர் இத்தகைய செயற்பாடு கொள்ளையடிப்பதற்கு ஒப்பானது எனத்தெரிவிக்கின்றனர். (66)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் ரீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

**இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

(இலுப்பையடிச் சந்தி அருகாமை)

021 222 8680,
077 592 5088.

(C/3589)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

சுதுமலை தெற்கில் ஒரு புதிய கல் வீடும், சகல வசதிகள் கொண்ட இன்னொரு வீடும் காணியுடன் விற்பனைக்குண்டு. பென்சன் பெறுவோர், அரச வைத்தியசாலைகளில் பணிபுரிவோர்க்கு சகாய விலைக்கு கொடுக்கப்படும். தரகர் வேண்டாம். **தொடர்பு:- க.சீவறட்ணம், சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு.**

(R/379)


# 24 இலட்சம் நிதி மோசடி; பொலிஸார் வலை வீச்சு

வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்புவதாகக் கூறி பண மோசடி செய்து தலைமறைவாகியுள்ள பெண் ஒருவரைத் தேடி பொலிஸார் வலை வீசியுள்ளதாக யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவரிடம் 24 இலட்சம் ரூபா பெற்று மோசடி செய்துள்ள பிரஸ்தாப பெண் குறித்து விசேட குற்றங்களுக்கான பொலிஸ் பிரிவில் முறையிட்டதையடுத்து பொலிஸார் இப்பெண்ணை தேடி வருகின்றனர். (இ)

# புதிய பாடத்திட்ட செயலமர்வு நாளை

(வலிகாமம்)

தரம் 10 சைவ நெறிக்கு 2015 ஆம் ஆண்டு புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள பாடத்திட்டம் தொடர்பான செயலமர்வு வலிகாமம் கல்வி வலய பாடசாலை ஆசிரியர்களுக்கு நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி செயலமர்வு உடுவில், தெல்லிப்பளை, கோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நாளை காலை 8 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ளது.

2015 ஆம் ஆண்டு தரம் 10 இல் சைவநெறி கற்பிக்கும் ஆசியரியர்களை மேற்படி செயலமர்வில் பங்குபற்ற ஆவண செய்யுமாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (06)


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் **1113** — திகதி **27.11.2014**

வெற்றி எண்கள்: **18 20 64 65** — ஆங்கில எழுத்து: **T**

**ஜக்பொட் பரிசு ரூ. 4,57,08,640/= வெல்லப்படவில்லை**

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 4,57,08,640/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 10 | 50,000/= | ரூ. 5,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 280 | 1,000/= | ரூ. 2,80,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 523 | 1,000/= | ரூ. 5,23,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11903 | 60/= | ரூ. 7,14,180/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6097 | 40/= | ரூ. 2,43,880/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 156988 | 20/= | ரூ. 31,39,760/= |
| ஆங்கில எழுத்து | 22901 | 20/= | ரூ. 4,58,020/= |

**வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 68,58,840/=**

**எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 46,015,320/=**

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.12.01 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**அபிவிருத்தி லொத்தர் சபை**

(C/3588)

யாழ்.சமூக செயற்பாட்டு மையம்
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
பெண்களின் முன்னேற்றத்திற்காய் ஆண்களின் கரங்களும் ஒன்றுபட்டு சமத்துவமான சமுதாயத்தினை உருவாக்குவோம்.
JSAC
16
2014

# மீன்பிடி அபிவிருத்தி வேலைத்திட்டம் இவ் வருடம் முன்னெடுக்க ஏற்பாடு


(யாழ்ப்பாணம்)

யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தால் யாழ்.மாவட்ட மீன்பிடி அபிவிருத்தி தொடர்பில் 12 வேலைத்திட்டங்கள் இவ்வருடம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள பிரதிப் பணிப்பாளர் நடராசா கணேசமூர்த்தி, நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை தெரிவித்தார்.

12 வேலைத்திட்டங்களில் 8 வேலைத் திட்டங்கள் நிறைவுபெற்றுள்ளதுடன், மேலும் 4 வேலைத்திட்டங்கள் தற்போது இடம்பெற்று வருவதுடன், அவை இவ்வருடத்துக்குள் நிறைவடையும்.

நிறைவுபெற்ற 8 வேலைத்திட்டங்களும் மீனவர்களுக்கு தளபாட உபகரணங்கள் வழங்கும் வேலைத்திட்டங்கள் ஆகும். அத்துடன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 4 வேலைத்திட்டங்களும் கட்டட நிர்மாணம் தொடர்பான வேலைத்திட்டங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஓவியக் கூடத்தின் நிறைவு நிகழ்வு



திருமறைக் கலாமன்றத்தின் ஓவியக்கூடம் நிறுவப்பட்டு முதல் ஆண்டு நிறைவு பெறுவதை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சிறப்பு நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இலக்கம், 15, றக்கா வீதி யாழ்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலாமுற்றத்தில் நடைபெறவுள்ளது.

மூத்த ஓவியர் மு.கனகசபை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிறப்பம்சமாக ஜேர்மன் நாட்டின் மியூனிச் நகரிலுள்ள சிற்ப- ஓவியக்கூடம் பினக் கொத்தேக் டேர் மொடேர்ணே பற்றி காணொளியுடனான விளக்கவுரை இடம்பெறும், இதனை திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளார் வழங்கவுள்ளார். இந்நிகழ்வில் ஓவிய ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு திருமறைக் கலாமன்றத்தினர் கேட்டுள்ளனர்.

# வவுனியாவில் தொடர்மழை 703 குடும்பங்கள் பாதிப்பு



(வவுனியா)

வவுனியாவில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழை காரணமாக 703 குடும்பங்களைச் சேர்ந்த 2440 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளார் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 642 குடும்பங்களைச் சேர்ந்த 2258 பேரும், வவுனியா வடக்கில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரும், வவுனியா தெற்கில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 138 பேரும், செட்டிகுளத்தில் 14 குடும்பத்தைச் சேர்ந்த 41 பேரும் என 703 குடும்பங்களைச் சேர்ந்த 2440 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

வவுனியாவின் விளக்குவைத்த குளம், புதியவேலர் சின்னக்குளம், சமணங்குளம் ஆகிய பகுதிகளில் தற்காலிக நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டு 76 குடும்பங்களைச் சேர்ந்த 277 குடும்பங்கள் தங்க வைக்கப்பட்டுள்ளன.


இவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டு வருவதுடன் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த சில நாட்களாக பெய்துவரும் கடும் மழை காரணமாக வவுனியா குளம் வான் பாய்கிறது. இதனால் பூந்தோட்டம் பாதையூடான போக்குவரத்தும் பாதிப்படைந்துள்ளது.

தாழ் நிலப் பகுதிகளில் வெள்ள நீர்மட்டம் அதிகரித்து வீடுகளுக்குள்ளும் வெள்ள நீர் புகுந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# பதில் சொல்லக் கடமைப்பட்டோர் - 05

## (பகுதி - 4)




**தமிழ்ப் புத்திஜீவிகள், அரசியல் அறிஞர்கள், ஆய்வாளர்கள், கடுந்தேசியப் பற்றாளர்கள் ஆகியோரிடம் கேட்கப்படும் கேள்விகளின் தொடர்ச்சி....**

31. ஒவ்வொரு தேர்தலின்போதும் மக்களுக்குப் பொய்யான வாக்குறுதிகளே வழங்கப்படுகின்றன. முன்னர் ஒரு காலம் அடுத்த தேர்தல் தமிழீழத்தில்தான் என்று சொல்லப்பட்டது. வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளாகப் போகிறது. இடையில் இனப்பிரச்சினைக்கு இந்தியா ஒரு தீர்வைப் பெற்றுத்தரும் என்று கூறினார்கள். இப்பொழுது சர்வதேச சமூகம் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும். இதற்கு தமிழ்மக்களின் ஒற்றுமையைக் காட்ட வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், தமிழ்க்கட்சிகளும் தமிழீழ அபிமானிகளும் தமிழ்த்தேசியவாதிகளும் ஒற்றுமைப்படவில்லையே. இதைப்பற்றிய உங்கள் பதிலை முன்வைக்க முடியுமா?

32. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அரசியற் கட்சியாகப் பதிவு செய்ய முடியாது என்று மாவை சேனாதிராஜாவும் சம்பந்தனும் சொல்லியிருக்கிறார்கள்ளு பதிவு செய்ய வேண்டும் என்று தமிழரசுக்கட்சியல்லாத ஏனையவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். புத்திஜீவிகள், அபிப்பிராய உருவாக்கிகள், சிந்தனையாளர் குழாம், பல்கலைக்கழக சமூகத்தினர், மாணவர் ஒன்றியத்தினர், ஆயர் இல்லங்கள், வெகுசன அமைப்புகள் போன்றவற்றின் நிலைப்பாடு என்ன? இதை ஏன் இதுவரையில் நீங்கள் பகிரங்கப்படுத்தவில்லை? எதற்காக இந்த விடயத்திலும் நீங்களெல்லாம் கள்ள மௌனம் சாதிக்கிறீர்கள்?

34. தமிழ் மக்களின் அரசியல் என்பது ஒற்றைப்படைத்தன்மையாக – ஒரு கருத்து நிலைப்பட்டதுதானா? அதாவது கறுப்பு–வெள்ளை என்ற வகையிலானதா? அதில் பன்மைத்துவத்துக்கும் ஜனநாயகத்துக்கும் இடமில்லையா? மாற்றுக்கருத்தாளர்களும் மாற்றுச் சிந்தனையாளர்களும் செயற்படுவதற்கான இடம் ஒரு போதும் தமிழ் அரசியல் கலாச்சார வெளியில் வழங்கப்பட மாட்டாதா?

10. தனியே யாழ்ப்பாணத்தமிழர்களும் சில தமிழ் ஊடகங்களும் மட்டும் தமிழ்த்தேசியக் கருத்தாக்கத்துடன் இன்னும் எவ்வளவு காலத்துக்கு நின்று பிடிக்க முடியும் என்று கருதுகிறீர்கள்? இதற்கு அப்பால் தமிழ்த்தேசியத்தை இலங்கையின் பிற பிரதேசங்களில் உள்ள மக்கள் எவ்வாறு கொண்டிருக்கப்போகிறார்கள்? குறிப்பாக மலையக மக்கள். அத்துடன் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலுமாகச் சுமார் ஐந்து லட்சம் மக்கள் வரையில் உள்ளனர். இவர்களைக் குறித்து உங்கள் நிலைப்பாடு என்ன?

35. மலையக அரசியல் கட்சிகள் மற்றும் தலைவர்களுடன் நீங்கள் எப்போதாவது கலந்துரையாடியிருக்கிறீர்களா? அவர்களும் தமிழ்பேசும் மக்கள் என்பதையும் அவர்களும் சிறுபான்மைத்தேசிய இனத்தினர் என்பதையும் ஏற்றுக்கொள்கிறீர்களா? அந்த மக்களிடம் நீங்கள் எத்தகைய வேலைத்திட்டங்களையும் தொடர்பாடலையும் மேற்கொண்டுள்ளீர்கள்?

7. மலையகத்தில் இருந்து இன வன்முறைகளால் இடம்பெயர்ந்து வந்து வடக்கில் பல லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றி இதுவரையில் நீங்கள் அறிந்தவைகள் என்ன? அவர்கள் திட்டமிட்ட முறையில் யாழ்ப்பாணச் சமூகத்தினரால் புறக்கணிக்கப்பட்டு வருகிறார்களே என்பதையிட்டு நீங்கள் கொண்டிருக்கும் வருத்தம் என்ன? இந்தப் புறக்கணிப்பை மாற்றுவதற்கு நீங்கள் எடுத்து முயற்சிகள் என்ன?

36. முஸ்லிம் மக்கள் அமைப்புகள், கலாச்சாரவாதிகள், படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள், கட்சிகள், மதப்பிரமுகர்கள் போன்றோருடன் நீங்கள் கொண்டிருக்கும் உறவு பற்றிச் சொல்லுங்கள்? அதன் சாதக பாதக நிலை களையும் இந்த உறவாடலில் நீங்கள் பெற்ற அனுபவங்களையும் வெளிப்படுத்துங்கள்?

33. புலம்பெயர் நாடுகளில் பல அணிகளாக பிரிந்து போயிருக்கும் தமிழ்ச்சக்திகளை அரசியல் சக்திகளாகவும் நல்லதோர் லொபிகளாகவும் மாற்றுவதற்கு ஏன் நீங்கள் முயற்சிக்கவில்லை? போரிலே பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை உள்ளிட்ட வடக்குக் கிழக்கின் போர் நடந்த பகுதி மக்களின் வாழ்நிலைக்கு உதவும் திட்டத்தைப் பற்றி இதுவரையில் பேசி உரிய ஒழுங்குகளைச் செய்திருக்கிறீர்களா?

12. தமிழ் மக்களுக்கான அதிகாரங்கள் கிடைத்தால் அது முஸ்லிம்களுக்கும் யாழப்பாணத்துக்கு வெளியே உள்ள சமூகங்களுக்கும் பாதிப்பை உண்டு பண்ணும். எப்போதும் யாழ்ப்பாண மேலாதிக்கமே இருக்கும் என்பதையிட்டு உங்கள் பதிலென்ன?

இது போல பல கேள்விகள் உள்ளன. இந்தக் கேள்விகளுக்கான பதில்களை நீங்கள் தெளிவாகச் சொல்ல வேண்டிய பொறுப்பும் இந்தக் கேள்விகளில் சுட்டிக்காட்டப்பட்ட ஏனைய சமூகங்களின் பிரச்சினைகள், உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவற்றுக்குத் தீர்வு காண வேண்டிய கடப்பாடும் அறிஞர் பெருமக்களாகிய உங்களுக்கு உண்டு.

இதைவிடுத்து, ஒய்வு நேரத் தேசியம் பேசிகளாகத் தயவு செய்து நீங்கள் இருக்கக் கூடாது. இது எமது தயவான வேண்டுதல்.

கட்டாயப்படுத்திப் புகுத்தப்படும் அறிவு மனதில் பதியாது.
பிளேட்டோ

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## நடுநிலைச் சிந்தனையுள்ளவர்களா நாம்?

தமிழ் ஊடகங்கள் பலவும், மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு பெருகி வருவதாகவும், தீய சக்திகள் அவரை அண்டவிடக்கூடாது, நல்ல சக்திகளோடு இணைந்தால் நாட்டை அவர் காப்பாற்றுவார் என்றும் எழுதிவருகின்றன.

குறிப்பாக, அடிப்படைவாதக் கட்சிகளின் தயவை மைத்திரி உதறிவிட வேண்டும் என்றும், அவர்கள் தயவோடு ஆட்சிக்கு வந்தால், தமிழர்களின் பிரச்சினையை அவர் தீர்ப்பது சாத்தியமற்றுப் போய்விடலாம் எனவே அவர் கவனமாக இருக்க வேண்டும் என்றும் கூறுகின்றன.

அதாவது, தமிழ் ஊடகங்கள் தங்களின் வழக்கப்படி சிங்களத் தலைவர்கள் திருந்தி நடப்பதற்குத் தங்கள் மேலான அறிவுரைகளைப் பாந்தமாக வழங்கி வருகின்றன.

இவர்கள் எழுதுவதைப் பார்த்தால், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மைத்திரி ஆவலோடு உள்ளார் என்பது போலவும், வேறு தீயசக்திகள்தான் அவரைக் கெடுத்துவிடப் போகின்றன என்று பதற்றமுறுவதாகவும் தெரிகிறது.

இத்தனைக்கும் இனப்பிரச்சினை ஒன்று இங்கிருப்பதாக எதிரணி பொது வேட்பாளர் இதுவரை எங்கும் வாய்திறக்கவில்லை. "எனது வெற்றிக்குப் பின்னர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட எவர் மீதும் யுத்தக் குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கு இடமளியேன்" என்ற அவரது வீரசபதத்தைத்தான் தெற்கின் ஊடகங்கள் தெரியப்படுத்துகின்றன.

போர்க்குற்ற விசாரணையை சர்வதேசம் உறுதியாக மேற்கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், மைத்திரியின் இந்தக் கருத்துக் குறித்த தங்களது சிறு அதிருப்தியைத் தன்னும் வெளியிடவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர்களான ரணில், சஜித் போன்றோர் வெளியிட்டு வரும், இவர்களைச் சங்கடத்தில் ஆழ்த்தும் கருத்துக்களையும் காதில் விழுந்ததாகக் காட்டிக்கொள்வதில்லை.

மாறாக, தங்கள் ஊடகங்கள் மூலம், மைத்திரி வந்தால் இங்கு மாற்றம் வரும்; தமிழ்ப் பிரச்சினைக்குத் தீர்வு வரும் என்ற நம்பிக்கையையே மறைமுகமாக தமிழ் மக்களிடம் ஏற்படுத்தி வருகிறார்கள்.

இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு வாக்குப்போட்டு வெற்றிபெற வைத்தால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வரும் என்று கூட தமிழ் மக்களை நம்பச் சொன்னவர்களல்லவா இந்தத் த.தே.கூ. தம்பிரான்கள்!

அடுத்த மாதம் இந்த நாட்டுக்கு யார் தலைவராக வரப்போகிறார்கள் என்று அறிவதற்கான தேர்தல் நடைபெறவிருக்கிறது. பிரச்சினைகளோடு வாழும் மக்களினது அரசியல் தலைமை என்ன செய்ய வேண்டும்?

நம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இருவரிடமும் உள்ள திட்டங்களைப் பகிரங்கமாக வைக்கும்படி கேட்டிருக்க வேண்டுமல்லவா? அதில் ஒப்பீட்டளவில் யார் நமக்கு அதிக சாதகமான வாக்குறுதிகளை அளித்திருக்கிறாரோ அவருக்கு வாக்களிக்கும்படிதானே தமிழ் மக்களிடம் சொல்ல வேண்டும்?

இவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்? எவரிடமும் எதையும் கேட்கத் துப்பில்லாத இந்தத் தலைமையை வைத்துக் கொண்டு தமிழர்கள்தான் என்னத்தைக் காணமுடியும்?

இந்த லட்சணத்தில் நமது ஊடகங்கள் வேறு, அடிப்படைவாதிகளிடமிருந்து விலகுங்கள் என்று மைத்திரிக்கு 'அட்வைஸ்' பண்ணுகிறார்கள். அதை அப்படியே எடுத்துக்கொள்வதாக இருந்தால் அவர் முதலில் இந்த ஊடகங்களிடமிருந்தும் த.தே.கூ.வினரிடமிருந்தும் அல்லவா அவர் விலகி ஓட வேண்டும்.

இவர்களது எழுத்துக்களையும் பேச்சுக்களையும் தமிழ் நினைப்புக்கு அப்பால் நடுவு நிலைமை மனதோடு ஆற அமர வாசித்தும் கேட்டும் வாருங்கள்... நாம் கூறுவது தெள்ளென எல்லோருக்கும் புரியும்.

- ஆசிரியர்



## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

"நாகரிகத்தின் வேர் காடுகள்தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் தலைசிறந்த கருத்துகள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது."

—இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)

# செஞ்சிலுவை சங்க நிதியுதவியில் விதைதானியங்கள் வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அம்பாள்புரம் கிராமத்திலுள்ள 200 விவசாயிகளுக்கு 11 இலட்சம் ரூபாய் பெறுமதியான விதை தானியங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் நிதியுதவியில் இந்த விதை தானியங்கள் கடந்த 23 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளன.

விதை தானியங்களாக நிலக்கடலை, உழுந்து, பயறு, நெல் ஆகியவை வழங்கப்பட்டுள்ளதுடன், அவற்றை பயிரிடும் நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டு இறுதியிலும், இந்த ஆண்டும் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவிய கடும் வறட்சி காரணமாக தானிய செய்கைகள் அழிவடைந்தன.

இதனால், விவசாயிகளால் விதை தானியங்களை பெற முடியாத சூழ்நிலையேற்பட்டது. இந்நிலையில், தற்போது விதை தானியங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

# ஐ.தே.க.வில் சேகு இஸ்ஸதீன் இணையவுள்ளதாக அறிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் சேகு இஸ்ஸதீன், ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளார். அத்துடன் அவர், அக்கட்சியின் பிரதான பேச்சாளராக செயற்படவுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம் காங்கிரஸில் இருந்து விலக்கப்பட்ட பின்னர் 1996ஆம் ஆண்டில் ஐ.தே.க எம்.பி.யாக சேகு இஸ்ஸதீன் நியமிக்கப்பட்டார். அதன் பின்னர், சந்திரிகா அரசாங்கத்திலும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திலும் தேசியப் பட்டியல் எம்.பி.யாக நியமிக்கப்பட்ட இவர், பிரதியமைச்சர், அமைச்சராகவும் பணியாற்றினார்.

வடக்கு கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் பதவி வகித்த காலத்தில் மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவராகவும் செயற்பட்டார். முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தவிசாளராகவும் சேகு இஸ்ஸதீன் பணியாற்றியிருந்தார்.

இறக்காமம், மதினாபுரத்தில் உள்ள அவரது வாசஸ்தலத்தில் ஐ.தே.க முக்கியஸ்தர்கள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அதன் பின்னர் மேற்படி முடிவை எடுத்ததர்கவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் சிறுபான்மைச் சமூகங்களின் அபிலாஷைகளை அடைவதற்கான பாரிய தடைக்கல்லாக மட்டுமன்றி நாட்டை சர்வாதிகார ஆட்சிக்கு இட்டுச் செல்லவும் வழிவகுக்கும் எனும் மர்ஹூம் அஷ்ரஃபின் காலத்தில் இருந்தே சுட்டிக்காட்டி வந்ததாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# சுன்னாகம் கிணறுகளில் ஓயில் கலப்பு வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். சுன்னாகம் பகுதியில் கிணறுகளில் ஓயில் கலப்பதால் மக்கள் பல்வேறு பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவித்து தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கின் விசாரணை மல்லாகம் நீதிமன்றத்தினால் நேற்று முன்தினம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.

மல்லாகம் நீதவான் எஸ்.சதீஸ்கரன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சுன்னாகம் மின்சார சபையின் கழிவு ஓயில் அந்தப் பகுதியிலுள்ள கிணறுகளில் கலப்பதால், மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதுடன், நோய்களுக்கு இலக்காக நேரிட்டுளளதாகவும் தெரிவித்து பிரதேச மக்கள் சார்பாக 11 பேர் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தனர்.

வடக்கு மக்களின் வாழ்க்கை முறையை சீர்குலைத்து, மின்சார விநியோகத்தை செயலிழக்கச் செய்யும் நோக்குடன் இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளதாக பிரதிவாதிகள் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி வசந்த டி பெர்னாண்டோ வாதத்தை முன்வைத்துள்ளார்.

சுன்னாகம் மின்சார சபையுடன் இணைந்து செயற்படும் தனியார் நிறுவனம் அமைந்துள்ள இடத்தில் முன்பிருந்த எண்ணெய்த் தாங்கி வெடித்துச் சிதறியதாலேயே கிணறுகளில் எண்ணெய் கலப்பு ஏற்பட்டுள்ளதாகவும் பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

ஆயினும் மனுதாரர்கள் சார்பாக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்யசிங்கம், பிரதேச கிணறுகளில் எண்ணெய் கலப்பு காணப்படுவதால மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை கவனத்திற் கொண்டு, குறிப்பிட்ட நிறுவனங்களை சிறிது காலத்திற்கு நிறுத்தி வைப்பதுடன், அது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டுமென நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தார்.

இரண்டு தரப்பு வாதங்களையும் செவிமடுத்த மல்லாகம் நீதிமன்ற நீதவான் எதிர்வரும் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

## விதை நெல் விநியோகம் இன்றும் பதிவு செய்யலாம்

(சாவகச்சேரி)

கடந்த வருடம் வறட்சியால் நெல் அழிவுக்குள்ளானவர்களுக்கான விதை நெல் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளதால் கல்வயல் விவசாய அமைப்பு பயனாளிகளை பதிவுகளை மேற்கொள்ளுமாறு கல்வயல் விவசாய சம்மேளனத்தின் செயலாளர் கா.வேதநாயகம் தெரிவித்தார்.

நேற்று தொடங்கிய இந்தப் பதிவு நடவடிக்கைகளை இன்றும் மேற்கொள்ளலாமெனவும் செயலாளரின் வீட்டில் இவ் விதை நெல் வழங்கலுக்கான பதிவுகள் இடம்பெறும் என்பதால் பாதிப்படைந்த பயனாளிகளை தவறாது பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் விசேட பணிப்புரைக்கமைய இவ்வாறு பயிர் அழிவுக்குள்ளான விவசாயிகளுக்கு விதைநெல் விநியோகிக்கப்படவுள்ளது. (இ)

மிகைப்படுத்தாமல் சொல்வதானால் மைத்திரிபால சிறிசேனவின் பிரசாரம் இதுவரை அதன் சரியான அரசியல் பாதையில் செல்ல வில்லை. திரு.சிறிசேனவின் அரசியல் பாதையின் தவறுகள் அல்லது மாறாக திரு.சிறிசேன தெரிவு செய்து பின்பற்றிவரும் அரசியல் பாதை, நிறுவனத்துக்கு - சகோதரத் துவத்துக்கு - ஒரு ஆபத்தான பாதையை திறக்கிறது. ஒரு எதிர் சீர்திருத்தம் ஒன்றைத் தொடங்க முற்படும்போது மைத்திரிபாலவின் எழுச்சியினால் திறந்து வைத்த பெறுமதிமிக்க அரசியல் இடை வெளியை அது முடக்குவதுடன் பாதுகாப்பதற்காக இராணுவத்தை தலையீடு செய்ய அழைக்க நேரிடலாம்.

திரு.சிறிசேனவின் ஜனாதிபதி ஆட்சி முறையை நூறு நாட்களுக்குள் ஒழிக்கும் வாக்குறுதியில் பொருத்தம் எங்கும் தென்படவில்லை. அது சர்க்கஸ் பார் விளையாட்டில் மறுபுறத்தில் தாங்கிப் பிடிக்க ஒரு பங்காளர் இல்லாமலும் கீழே ஒரு பாதுகாப்பு வலை இல்லாமலும் காற்றில் போடும் ஒரு குத்துக் கரணம் போன்றது. அது (ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட) குடியரசு ஒன்றில் அடிப்படை மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதைப் பற்றி முன்மொழியவில்லை மற்றும் அது வெளிப்புறமாக திணிக்கப்பட்ட அரசியலமைப்பு ஒன்றுக்கு உருவாக்கப்பட்ட கட்சியை வயதாகி சக்கர நாற்காலியில் அடங்கிப்போன அவரது தாயிடமிருந்து கைப்பற்றினார். அது எவ்வளவு கடினமானது?

இரண்டாவதும் மற்றும் முக்கியமானதும் அந்த நேரத்தில் ஜனாதிபதி போட்டியில் அவரது பிரதான போட்டியாளரான காமினி திசாநாயக்கா புலிகளின் தற்கொலைக் குண்டுதாரி ஒருவரினால் கொல்லப்பட்டார். வலிமையான காமினி திசாநாயக்கா அந்தப் போட்டியில் தொடர்ந்து நின்றிருப்பாரானால் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஜனாதிபதித் தேர்தலில் ஒருபோதும் வென்றிருக்க முடியாது.

மகிந்த ராஜபக்ஸவை போல கட்சியில் வழக்கமான உயர்வுகள் மற்றும் உட்கட்சி போராட்டங்களை சந்தித்து திரு. விக்கிரமசிங்க ஐதேக தலைவராகவோ மற்றும் எதிர்க்கட்சி தலைவராகவோ வரவில்லை. அவரும்கூட தற்போதுள்ள தன்னுடைய நீண்டகால அரசியல் பதவியை அடைந்திருப்பது ஐதேக தலைவர்களான பிரேமதாஸ, காமினி, லலித், ரஞ்சன் போன்றவர்களை வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்ச்சியாக படுகொலை செய்தபடியால்தான்.

மாறாக, மகிந்த ராஜபக்ஸ உயர் நிலையை அடைவதற்குத் தேவையான கடும் பணியினை சிறப்பாக ஆற்றியிருந்தார். மற்றும் ஒருமுறை பழைய கொழும்பின் உயரடுக்கினைச் சேர்ந்த வல்லமை மிக்க மூர்க்கமான எதிரியாக இருந்த இரண்டு தற்செயல் தலைவர்களை தோற்கடித்தது அவரது சாதனை என்றே சொல்லவேண்டும்.

மகிந்த ராஜபக்ஸ மக்களின் உள்ளப் போக்கினை புரிந்து கொண்டு பேசுபவர். அவர் பொதுமக்களின் உளவியல் தோற்றத்தை படித்தறிபவர். சரியான இடத்தில் குறி தவறாமல் அடிப்பதின் மூலம் அவர் இன்னமும் வெற்றி பெற்று வருகிறார்.

மைத்திரிபால சிறிசேனவும் இதேபோலச் செய்திருக்கலாம். அவரால் இன்னமும் செய்யமுடியும். ஆகக் குறைந்தது அந்த நீண்ட பயணத்தை அவரால் ஆரம்பிக்க முடியும். ஆனால் அவர் தோற்றுப்போன ஒரு முன்னாள் ஜனாதிபதி மற்றும் ஒரு முன்னாள் பிரதமர் ஆகியோரின் மதியீனம், பேராசை, மற்றும் கிறுக்குத்தனம் காரணமாக சட்ட அரசியலமைப்பு என்னும் கண்ணிவெடி புதை நிலத்தில் தடுமாறி விழுந்துவிடக் கூடாது.

பரந்த அளவில் மிகையான இந்த இரண்டு அரசியல்வாதிகளும்தான் திரு. மைத்திரிபால சிறிசேனவின் மூலோபாய வியூகங்களையும் மற்றும் அரசியல் மேடையையும் வடிவமைக்கிறார்கள்.

மண்ணின் மைந்தனும் கண்ணியம் மிக்க மனிதருமான திரு.சிறிசேன அவர்கள், எனக்கு வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த மற்றொரு மைத்திரிபாலவை நினைவூட்டுகிறார். மைத்திரிபால சேனநாயக்கா, இலங்கை ஒருபோதும் கண்டிராத சிறந்த மிதமான முற்போக்குவாதியான பிரதமராக அல்லது ஜனாதிபதியாக அவர் இருந்திருப்பார் அவரை அப்படி ஆகவிடாமல் செய்த பெருமை பண்டாரநாயக்காமார்களையே சேரும்.

நான் 68ம் ஆண்டில் செக்கோஸ்லாவியாவில் நடந்த பிராக் வசந்த தலைமுறையை சேர்ந்தவன். மற்றும் திரு. சிறிசேன, மற்றொரு அலெக்சாண்டர் டுப்செக் ஆகவோ அல்லது இரண்டு தசாப்தங்களுக்குப் பிறகு அவருக்கு சமமாக மாறிய முன்னாள் சீனப் பிரதமர் சௌ சியாங் ஆகவோ ஆவதை நான் விரும்பவில்லை. திரு.சிறிசேனவை தியாகம் செய்ய முடியாது.

நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் தினமான டிசம்பர் 8 க்கு முன்னதாக மைத்திரிபால மீள் மூலோபாயம், மீள் நிலைப்பாடு, மீள் நோக்கு மற்றும் மீள் கட்டமைப்பு என்பனவற்றை மேற்கொள்ள வேண்டும். அவர் தன் சொந்த வேர்களை தட்டியெழுப்பி, தனக்கு உண்மையாக, தனது உண்மையான சொந்தக் குரலில் பேசவேண்டும்.

எதிர்க்கட்சி அரசியலுக்குள் நுழைவ்தற்கும் மற்றும் வேட்பாளராக நியமனம் பெறுவதற்கும் சந்திரிகா அவருக்கு அனுசரணை வழங்கியிருக்கலாம், ஆனால் அவர் இப்போது பிரபுத்துவ மருத்துவிச்சியை விட்டு விலகி தனது சொந்தப் பாதையில் நடை பயில வேண்டும், தனது சொந்த மனிதருக்காக வெளிப்பட வேண்டும். மக்களின் மனிதரான மைத்திரிபால சிறிசேன மக்களுக்காக ஒரு புதிய இலங்கையை வழங்க வேண்டும், அது மக்களினால் மக்களுக்காக இருக்க வேண்டும்.

# பொன்சேகா எதிர்கொண்டவற்றை சிறிசேனவும் சந்திக்க நேரிடலாம்

கலாநிதி. தயான் ஜயதிலக கட்டுரையிலிருந்து

**கூட்டு எதிரணியின் விரைவான வழியில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்கும் முயற்சி உண்மையில் அரசியலமைப்பின் அதிகாரங்களைத் தாண்டியது. சுயாதீனமான வலிமை குறைந்த ஒரு உச்ச நீதிமன்றத்தின் முன் இத்தகைய அரசியீலமைப்பு சாகசங்கள் நிகழ்த்தும் பொது வேட்பாளர் இலக்கம்: 2க்கு, சில காலங்களுக்கு முன்னர் யுத்த வெற்றி வீரர் ஜெனரல் சரத் பொன்சேகா எதிர்கொண்ட கோரமான வரையறைகளை சந்திக்க நேரிடலாம்.**



அதன் திறனையும் பின்னோக்கி நகர்த்துகிறது.

அரசியல் பாதையின் தவறுகளில் தீவிர மூலோபாயமிக்க தவறாக உள்ளது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை விரைவாக ஒழிப்பதாக எதிர்க்கட்சி வேட்பாளர் வழங்கியுள்ள வாக்குறுதி தான். ஒரு அரசியலமைப்பை சீர்திருத்தம் செய்ய அல்லது இல்லா தொழிக்க இரண்டு வழிகள் உள் ளன. ஒன்று அரசியலமைப்பு வழி முறை மற்றது மேலதிக அரசியலமைப்பு.

மைத்திரிபாலவின் அரசியலமைப்பு மாற்றம் பற்றிய நூறு நாள் திட்டம் அரசியலமைப்பு நடவடிக்கையின் கட்டமைப்புக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. அது மேலதிக அரசியலமைப்பு. உண்மையில் அரசியலமைப்புக்கு விரோதமானது. நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு உரிய அரசியலமைப்பு பாதையின்படி அதை நிறைவேற்ற நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை, உச்ச நீதிமன்றத்தின் அனுமதி மற்றும் ஒரு சர்வசன வாக்கெடுப்பு என்பன தேவையாக உள்ளன.

தற்போதுள்ள அரசியலமைப்புக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எந்த ஒரு நகர்வும் அரசியலமைப்புக்கு விரோதமான வழிகளாகும், இது உச்ச நீதி மன்றத்தில் ஒரு சவாலை கிளப்பிவிடும். பாகிஸ்தானைப்போல திட்டமிட்ட வீதி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைத் தூண்டிவிட்டு அதன் உச்சக்கட்டமாக அரசியலமைப்பை எதிரான ஒரு எழுச்சியுமல்ல.

எனவே, கூட்டு எதிரணியின் விரைவான வழியில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்கும் முயற்சி உண்மையில் அரசியலமைப்பின் அதிகாரங்களைத் தாண்டியது. சுயாதீனமான வலிமை குறைந்த ஒரு உச்ச நீதிமன்றத்தின் முன் - தலைமை நீதியரசருக்கு எதிரான குற்றவியல் தண்டனை மூலம் துல்லியமாக அத்தகைய எதிர்பாராத நிகழ்வுகளுக்காக அது ஏற்கனவே சிதைவடைந்துள்ளது - இத்தகைய அரசியலமைப்பு சாகசங்கள் நிகழ்த்தும் பொது வேட்பாளர் இலக்கம்: 2இக்கு சில காலங்களுக்கு முன்னர் யுத்த வெற்றி வீரர் ஜெனரல் சரத் பொன்சேகா எதிர்கொண்ட கோரமான வரையறைகளை சந்திக்க நேரிடலாம்.

இதற்கிடையில் குறைப்பிரசவமான இந்த அரசியலமைப்பு புரட்சியின் உண்மையான சிற்பி பாதுகாப்பாக லண்டனுக்கோ அல்லது பரீசுக்கு வெளியே உள்ள எழில் கொஞ்சும் இடத்துக்கோ திரும்பிவிடுவார்.

முட்டாள்தனமான இந்த 100 நாள் ஒழிப்புத் திட்டம் மற்றும் திரு.சிறிசேனவின் அரசியல் மேடை என்பன சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க மற்றும் அவரது அறிவற்ற போலி அறிவாளி எடுபிடிகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று தெளிவாகத் தெரிகிறது. சந்திரிகா மற்றும் ரணில் ஆகியோர் அவர்களுடைய எதிராளிகளான ஆளும் சகோதரர்களுடன் ஒப்பிடுகையில் தனித்தோ அல்லது ஒருமித்தோ விவேகமுள்ள அரசியல் புத்திசாதுர்யமான பெரிய உலுக்கல்களை ஏற்படுத்தக் கூடியவர்களல்ல.

சந்திரிகா எப்படி ஜனாதிபதியானார்? முதலில் அவர் தனது தந்தையால் மாறாக பிரபாகரனின் தற்கொலை குண்டுதாரியின் தலையீட்டால் சந்திரிகாவுக்கு, அரசியல் அனுபவமற்ற சட்டத்தரணியான காமினியின் விதவையான மனைவி சிறிமாவை எதிர்கொள்ள வேண்டி நேர்ந்தது, சிறிமாவை ஒரு வேட்பாளராக நிற்கும்படி அழுத்தம் கொடுத்தபோது அவர் ஐதேக வின் ஒரு அங்கத்தவராகக்கூட இருக்கவில்லை. சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க இரண்டு தவணைகள் ஜனாதிபதியாக இருந்தார், ஏனென்றால் ஐக்கிய தேசியக் கட்சியானது படுகொலை அலையில் அகப்பட்டு தள்ளாடி தலைமையற்ற நிலையில் இருந்தது மற்றும் திரு. ரணில் விக்கிரமசிங்க அதற்கு தலைமையேற்றிருந்தார்.

**திரு.சிறிசேனவின் நூறு நாட்களுக்குள் ஒழிக்கும் வாக்குறுதியில் பொருத்தம் எங்கும் தென்படவில்லை. அது சர்க்கஸ் பார் விளையாட்டில் மறுபுறத்தில் தாங்கிப்பிடிக்க ஒரு பங்காளர் இல்லாமலும் கீழே ஒரு பாதுகாப்பு வலை இல்லாமலும் காற்றில் போடும் ஒரு குத்துக்கரணம் போன்றது.**

# தேர்தல் விஞ்ஞாபனம் டிசம்பர் 10இல் வெளிவரும்

## பொது எதிரணி அறிவிப்பு

"பொது எதிரணியின் தேர்தல் விஞ்ஞாபனம் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. இதில் பொதுவேட்பாளரான மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் கைச்சாத்திடுவர்." என அரசிலிருந்து எதிரணியில் இணைந்த முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தல், நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறும் ஆட்சிமுறையை உருவாக்குதல்,தேர்தல் முறைகளில் மாற்றம் ஏற்படுத்தல் என்பன உள்ளிட்ட மேலும் பல முக்கிய விடயங்கள் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறும் அமைச்சரவையையும், அமைச்சரவைக்குப் பொறுப்புக்கூறும் பிரதமரையும் உருவாக்குவதுடன், அமைச்சரவையின் பிரதானியாக பிரதமர் செயற்படுவார். இதனூடாக புதிய அரசியல் கலாசாரமொன்றை உருவாக்கவுள்ளோம்" - என்றார்.

# பிராந்திய வலய நாடுகளிடையே பாதுகாப்பு விடயத்தில் புரிந்துணர்வு

## வலியுறுத்தும் பாதுகாப்புச் செயலர்



பாதுகாப்பு விவகாரங்களில் பிராந்திய வலய நாடுகளுக்கு இடையில் புரிந்துணர்வு அவசியம் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

தென் ஆசிய மற்றும் தென் கிழக்காசிய நாடுகளுக்கு இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிராந்திய வலய நாடுகளுக்கு நிலவும் புரிந்துணர்வின்மையை களைய வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் பாரியளவிலான குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தனர் என குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோத நிதிக் கொடுக்கல் வாங்கல்களின் ஊடாக பாரியளவில் ஆயுதக் கொள்வனவு உள்ளிட்ட குற்றச் செயல்களில் புலிகள் ஈடுபட்டதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் மூலம் உள்நாட்டு தீவிரவாதம் எவ்வாறு பிராந்திய வலயத்தையும் உலக நாடுகளையும் பாதித்தது என்பதனை கண்டறிந்து கொள்ள முடிந்ததாகத் தெரிவித்துள்ளார்.

எல்லா வகையிலான பய[illegible]ரவாதமும் இல்லாதொழிக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# மைத்திரி போட்டியிட்டாலும் மகிந்தவிற்கே வெற்றிவாய்ப்பு

## தயான் ஜயதிலக தெரிவிப்பு



பொது வேட்பாளராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன போட்டியிட வந்தாலும், இன்னும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கே வெற்றிக்கான வாய்ப்புக்கள் இருப்பதாக அரசியல் ஆய்வாளர் கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

கிராம மட்டத்தில் மக்களுக்கு மிகவும் சமீபமாக இருந்து நீண்டகாலம் அரசியல் புரிந்த வரலாறுள்ளவர் தான் மைத்திரிபால சிறிசேன. இவர் பொது அபேட்சகராக வந்ததனால் அரசியல் நிலைவரம் போட்டித்தன்மையுள்ளதாக மாறியுள்ளது என்பது உண்மைதான்.

இப்படியான ஒருவரின் வருகையினால் எதிர்க் கட்சி வெற்றி பெற்றது என்றோ, மஹிந்த ராஜபக்ஷ தோல்வியுற்றார் என்றோ கருதமுடியாது. இருப்பினும் போட்டியொன்று உருவாகியுள்ளது. இல்லாமல் இருந்த அரசியல் மாற்றம் ஒன்றின் தேவை தற்பொழுது வெகுவாக உணரப்படுகின்றது எனவும் பி.பி.சி.சிங்கள சேவைக்கு அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

# பொதுபலசேனா ஆதரவளிக்காமை வருத்தமடையாத மைத்திரி



பொதுபலசேனாவின் ஆதரவு கிடைக்காமை கவலையளிக்கவில்லை என எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்த லில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவிற்கு ஆதரவளிப்பதாக பொதுபல சேனா அறிவித்துள்ளது.

பொதுபல சேனா இயக்கத்து டன் பேச்சுவார்த்தை நடத்த நினைத்து கூட பார்க்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுபல சேனாவின் ஆதரவு தமக்கு தேவையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுபல சேனா இயக்கம் யாருக்கு சொந்தமானதோ அங்கேயே சென்றுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

# ரணசிங்க பிரேமதாசவின் மகன் கொள்கைகளிலிருந்து மாறார்

## என்கிறார் சஜித்



(கொழும்பு)

நான் ரணசிங்க பிரேமதாச என்ற சிறந்த மனிதரின் மகன் என்பதனை மக்கள் மறந்து விடக்கூடாது. கொள்கைகளிலிருந்து மாறக்கூடியவர்கள் அல்ல. எனவே அரசாங்கத்தின் போலிப் பிரச்சாரங்களுக்கு மக்கள் ஏமாந்து விடக் கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாச விரக்தியில் இருப்பதாக பிரச்சாரம் செய்யப்படுகின்றது.

தேர்தலில் தோற்றுவிடுவோம் என்ற பீதி காரணமாக அரசாங்கம் இவ்வாறு பிரச்சாரம் செய்கின்றது.


ஆளும் கட்சியின் பலர் எதிரக கட்சியில் இணைந்து கொள்ள ஆர்வம் காட்டி வருகின்றனர். அரசாங்கத்தின் சார்பில் குரல் கொடுப்பவர்களைப் பாருங்கள்.

அவர்களின் முகங்களில் தோல்வியின்அச்சம் புரையோடியுள்ளது. அவர்களின் அகத்தில் உள்ள அச்சம் முகத்தில் வெளிப்பட்டுள்ளது.

சிங்கங்களைப் போன்று இருந்தவர்கள் இன்று திக்கு திசை அறியாது நிலை குலைந்துள்ளனர்.எனது தனிப்பட்ட கருத்து எதுவென்றாலும், ஐக்கிய தேசியக் கட்சி கூட்டாக இணைந்து எடுத்த தீர்மானத்திற்கு [illegible] ஆதரவு வழங்குவேன்.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கி, நிறைவேற்று அதிகார பிரதமராக ரணில் விக்ரமசிங்கவை பதவியில் அமர்த்துவோம் என தெரிவித்துள்ளார்.

# 37 இலங்கை புகலிடதாரிகளை திருப்பி அனுப்பிய ஆஸி. கடற்படை



அவுஸ்ரேலியாவிற்கு சட்டவிரோதமாகச் சென்ற போது, இந்தோனேசியக் கடற்பரப்பில் வைத்து அவுஸ்ரேலியக் கடலோரக் காவற்படையால் கைது செய்யப்பட்ட 37 இலங்கையர்கள் நேற்று முன்தினம் இலங்கை கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த நவம்பர் முதலாம் திகதி 37 இலங்கை அகதிகளுடன் சென்ற படகு ஒன்று இந்தோனேசியாவுக்கு அருகே அவுஸ்ரேலிய கடலோரக் காவற்படையால் தடுக்கப்பட்டது.

மிகவும் இரகசியமான முறையில் தடுத்து வைத்திருந்த இந்தப் படகை அவுஸ்ரேலியக் கடலோரக் காவற்படை, இலங்கை கடற்படையிடம் ஒப்படைத்துள்ளது.

இலங்கை கடற்படையினர் இவர்களை நேற்று முன்தினம் இலங்கைக்கு கொண்டு வந்து, பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவர்களில் 13 சிங்களவர்களும், 23 தமிழர்களும், ஒரு புறங்கியரும் அடங்குவர். ஒன்பது மாதம் தொடக்கம் 10 வயதுக்கு இடைப்பட்ட ஆறு சிறுவர்களும் இதில் அடங்கியுள்ளனர்.

இந்தப் படகில் பிடிபட்ட தமிழர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸ் தெரிவித்துள்ளது.


# காங்கேசன் கடற்படைத்தளத்தில் முன்னாள் பிரதம நீதியரசர் சரத்

(கொழும்பு)

முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என்.சில்வா காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள கடற்படை இல்லத்தில் தங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிப்பதற்கான எதிரணியின் முயற்சிகளில் முக்கிய பங்கை வகித்து வருபவர் சரத் என்.சில்வா.

அவர் கடற்படையின் இல்லத்தில் தங்கியிருப்பது பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.



சரத் என் சில்வாவுடன் போதைப் பொருள் எதிர்ப்பு முகவரகத்தின் தலைவர் பேராசிரியர் அர்ஜுன் டி சில்வாவும் காங்கேசன்துறையிலுள்ள கடற்படை இல்லத்தில் தங்கியுள்ளதாக, பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

கடற்படை இல்லத்தில், ஜனாதிபதி மூத்த இராணுவ அதிகாரிகள், மற்றும் அவர்களின் விருந்தினர்கள் மாத்திரமே தங்குவதற்கு அனுமதிக்கப்படுவது வழக்கமாகும்.

எனினும், அங்கு தங்குவதற்கு சரத் என்.சில்வா கடற்படைத் தலைமையகத்தின் அனுமதியைப் பெற்றுள்ளதாக, பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## முகமாலை வடக்கு வீதி புனரமைப்பு எப்போது?

பச்சிளைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட முகமாலை வடக்கு கிராமத்துக்கான வீதி நீண்ட காலமாக எவ்வித புனரமைப்பும் இன்றி மிகமோசமாக சேதமடைந்துள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது பெய்துவரும் மழையினால் இவ்வீதியில், வெள்ள நீர் தேங்கிக் காணப்படுவதுடன் இவ்வீதியால் செல்வோர் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

குண்டும் குழியுமாக காணப்படும் இவ்வீதியை புனரமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (37)

## புனரமைப்பின்றி காணப்படும் புவனேஸ்வரி அம்மன் ஆலய வீதி

(அச்சுவேலி)

இடைக்காடு புவனேஸ்வரி அம்மன் ஆலயத்திற்குச் செல்லும் பாதையானது சமநிலை அற்று சில இடம் பள்ளமாகவும் சில இடம் மேடாகவும் காணப்படுவதால் ஆலயத்திற்குச் செல்வோர் பல்வேறு கஷ்டத்தின் மத்தியில் செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒடுங்கிய பாதையாகக் காணப்படும் இந்த பாதையின் நடுவே புற்கள் முளைத்துக் காணப்படுவதுடன் வீதியின் பள்ளமான பகுதிக்குள் வெள்ள நீர் தேங்கி நிற்கின்றது. இதனால் மழை பெய்யும் வேளைகளில் சேறும் சகதியுமாக இந்தப் பாதை காணப்படுகின்றது. இதனால் ஆலயத்திற்குச் செல்வோரின் புடவைகளும் அழுக்கடையும் நிலையில் உள்ளதாகவும் மேலும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்த ஆலயத்திற்கு காலை மாலை பூசை வழிபாடுகளைக் காணச் செல்லும் பக்த அடியார்கள் இந்தப் பாதை இவ்வாறு காட்சியளிப்பதால் அவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே, மேற்படி பாதையினை புனரமைப்புச் செய்யுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

## கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் 50ஆவது நினைவு தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு பெரியார் அமரர் வீரசிங்கம் அவர்களின் 50 ஆவது நினைவு தினம் எதிர் வரும் 5ஆம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டக் கூட்டுறவு சபைத் தலைவர் தி. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வட மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், இலங்கை தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் டபிள்யூ லலித் ஏ. பீரிஸ், யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் வரவேற்புரையை யாழ். மாவட்ட கூட்டுறவு சபைப் பணிப்பாளர் மு. ஜெகதேவன் வழங்கவுள்ளதுடன் மாறிவரும் சமூக நிலையில் அதிக நெருக்கடிக்குட்படுபவர்கள் வாலிபார்களா? வயோதிபர்களா? என்னும் தலைப்பில் செஞ்சொற் செல்வர் இரா. செல்வ வடிவேல் தலைமையில் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து சிறந்த சங்கங்கள் கௌரவிப்பு, பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கல், பரிசில் வழங்குதல் என்பன இடம்பெறவுள்ளன.

# குடிநீரால் பரவும் நோய்கள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு அவசியம்

### சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

குடிநீரால் பரவும் நோய்கள் யாழ். மாவட்டத்தில் அதிகரித்துள்ள நிலையில் அவற்றிலிருந்து மக்களைப் பாது காப்பதற்கு சுகாதாரமிக்க குடிநீர்த் தேவையின் அவசியம் குறித்து போதியளவில் தெளிவுபடுத்தப்பட வேண்டும் என ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழான பணிகளின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கும் போது,

இலங்கையிலுள்ள 22 மாவட்டங்களில் குடிநீரால் பரவும் நோய்கள் அதிகம் உள்ள ஆபத்தான மாவட்டமாக யாழ். மாவட்டமே காணப்படுவதாக யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். ஆனால் மக்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்கள் ஏற்படுத்தப்படவில்லை பொறுப்பு வாய்ந்தவர்கள் அதனை மேற்கொள்ள முன்வராமை ஆச்சரியமளிக்கிறது.

யாழ்ப்பாணத்திற்கான பாதுகாப்பான சுகாதாரமிக்க குடிநீர்த் தேவையின் அவசியம் குறித்து போதியளவில் தெளிவுப்படுத்தப்படவில்லை. இந்த நிலைமை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிடுவது போன்று யாழ்ப்பாண மக்களை மிகவும் மோசமான பல்வேறு ஆபத்தான நோய்த்தாக்கங்களுக்கு கொண்டு சென்றுள்ளது. இந்த நிலைமையினை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது.

யாழ்ப்பாணத்திற்கான பாதுகாப்பான குடிநீரின் அவசியம் மிகவும் கண்டிப்பாக வலியுறுத்தப்படுகிறது. வடக்கு மாகாணத்தில் பெருமளவு மக்கள் வாழ்கின்ற மாவட்டமான யாழ் மாவட்டத்தின் குடிநீர் இலங்கையில் உள்ள ஏனைய மாவட்டங்களை விட ஆபத்தானதாக இருப்பது என்பது இங்குள்ள மக்களின் ஆரோக்கியமான வாழ்க்கையினை ஆபத்துக்குள்ளாகி வருகிறது. எனவேதான் யாழ்ப்பாணத்திற்கான சுத்தமான குடிநீரின் அவசியம் குறித்து அனைவரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்றார்.

## வன்முறை ஒழிப்பு தினம்

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிக்கும் தேசிய தினம் அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் அணிவகுப்புடன் அனுஷ்டிக்கப்பட்டது.

குறிப்பாக, பெண்களுக்கு எதிராக வீடுகளில் தொழில் ஸ்தாபனங்களில் இடம்பெறும் அனைத்து விதமான வன்முறைகளுக்கும் எதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து முல்லை மாவட்ட நீதிபதி மாணிக்க வாசகர் கணேசராஜா முன்னிலையில் கலந்தாலோசனை நடைபெற்றதுடன் சட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது. (170)



பிரிட்டிஷ் பிஸ்னஸ் கல்லூரியின் முத்தமிழ் விழாவின்போது...

## சீரற்ற வடிகால் வாய்களால் குடியிருப்புகளுக்குள் வெள்ளம்

### சிரமப்படும் கரைச்சி பிரதேச மக்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராமங்களில் வெள்ளநீர் வழிந்தோடுவதற்கு ஏற்ற வகையில் வடிகால் வாய்கள் சரியான முறையில் சீர்செய்யப்படாமையால் வெள்ளநீர் தாழ்வான பகுதிகளில் தேங்கிக் காணப்படுவதாகவும் இதனால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இம்மாவட்டத்தின் ஏ-9 வீதியை அண்மித்த பகுதியிலுள்ள கிராமங்களிலேயே இந்த அவலநிலை காணப்படுவதாகவும் இதனால் அப்பகுதி கிராம மக்களே அதிகளவில் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

கிராமங்களிலுள்ள உள்ளக வீதிகள் புனரமைக்கப்பட்டபோதிலும் நீர் வழிந்தோட முடியாது வெள்ளநீர் தாழ்வான பகுதிகளில் குறிப்பாக, குடியிருப்புக்களுக்குள்ளும் கிணறுகளிலும் தேங்குவதால் மக்கள் சுகாதார சீர்கேட்டிற்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதாகவும் குறிப்பாக டெங்குத் தொற்று ஏற்படும் அபாயம் காணப்படுவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கரைச்சி பிரதேச சபை மற்றும் சுகாதாரப் பிரிவினர் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (77)

## தொடர் திருட்டில் ஈடுபட்ட நபர் வவுனியா பொலிஸாரால் கைது

(வவுனியா)

வவுனியா, மன்னார், திருகோணமலை போன்ற பகுதிகளில் பல்வேறு பெயர்களைப் பயன்படுத்தி, வீடுகளை வாடகைக்குப் பெற்று அங்கு குடியிருந்து தொடர் திருட்டுக்களில் ஈடுபட்ட ஒருவரை தாம் நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.டீ.பீ.ஜெயதிலக தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா, வெளிக்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெல்லி 125 ரக மோட்டர் சைக்கின் பாகங்கள் கழற்றிச் செல்லப்பட்டமை தொடர்பில் குறித்த வீட்டு உரிமையாளரால் கடந்த 10 ஆம் திகதி வவுனியா பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட போது குறித்த பொருட்களை வேறு ஒரு மோட்டர் ஸைக்கிளுக்கு பொருத்திய நிலையில் தாண்டிக்குளம் பகுதியில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த மோட்டார் சைக்கிளை வைத்திருந்த நபர் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் தோணிக்கல், வெளிக்குளம், யேசுபுரம், ஆகிய பகுதிகளில் நடைபெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்பு இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து குறித்த நபர் தற்காலிகமாக இருந்த வீட்டை சோதனையிட்ட போது அங்கு திருடப்பட்ட பல பொருட்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன. இவர் திருகோணமலை, மன்னார் உள்ளிட்ட பகுதி களிலும் திருட்டில் ஈடுபட்டவர் என்பதும் பல பெயர்களைப் பயன்படுத்தியுள்ளார் ஏன்பதுவும் இவர் மீது நீதிமன்றில் வழக்குகள் பல உள்ளன என்றும் தெரிய வந்துள்ளதாகவும் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

# இலங்கை வீரர்களும் ஹியூஸிற்கு அஞ்சலி

தலையில் பந்து பட்டதால் உயிரிழந்த அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த இளம் கிரிக்கெட் வீரர் பிலிப் ஹியூக்ஸுக்கு இலங்கை வீரர்கள் அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

இதன்படி இன்று சனிக்கிழமை கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டு மைதானத்தில் இங்கிலாந்துக்கு எதிராக நடைபெறவுள்ள இரண்டாவது ஒருநாள் போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னர் இலங்கை வீரர்கள் பிலிப் ஹியூக்ஸுக்கு மரியாதை செலுத்தும் முகமாக இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

மேலும் துக்கத்தை கடைப்பிடிக்கும் முகமாக கறுப்புப் பட்டி அணியும் கோரிக்கை நிலுவையில் உள்ளதாக, இலங்கை கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.

போட்டி நடுவரிடம் இருந்து முறையான அனுமதிக்காக காத்திருப்பதாக, இது குறித்து ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் பிலிப் ஹியூஸின் அகால மரணம் தொடர்பில் அவரது குடும்பத்தாருடன் வருத்தத்தைப் பகிர்ந்து கொள்வதாக இலங்கை கிரிக்கெட் சபை செயலாளர் நிஷாந்த ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூர் போட்டி ஒன்றின் போது பவுன்சர் பந்து தலையில் பயங்கரமாக தாக்கியதில் கோமா நிலைக்குச் சென்ற, 25 வயதான அவுஸ்ரேலியாவின் இளம் வீரர் பிலிப் ஹியூஸ் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

இதனால் வீரர்கள், இரசிகர்கள், நிர்வாகிகள் கடும் அதிர்ச்சி அடைந்தனர். வைத்தியசாலைக்கு வந்திருந்த டேவிட் வோர்னர், மத்யூ வேட், பிராட் ஹடின் உள்ளிட்ட வீரர்கள் துக்கம் தாங்காமல் அழுதனர்.

வைத்தியசாலைக்கு முன்பு திரண்டிருந்த இரசிகர்களும் கண்ணீர் விட்டனர். பிலிப் ஹியூக்ஸ் உடலுக்கு வீரர்கள், அவர்களது குடும்பத்தினர், இரசிகர்கள் அஞ்சலி செலுத்தினர்.



சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் அவுஸ்ரேலிய தேசிய கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டது. சிட்னி மைதானத்தில் வெளியே பிலிப் ஹியூக்ஸ் படம் வைக்கப்பட்டது. அதற்கு பொதுமக்கள் மலர்கள் வைத்து அஞ்சலி செலுத்தினர்.



பவுன்சர் பந்து தலையில் பட்டத்தில் ஹியூஸ் உயிரிழந்த செய்தி கேட்டு அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணித் தலைவர் கிளார்க் கதறி அழுவதையும், ஹியூஸின் பெற்றோரையும், பவுன்சர் பந்தை வீசிய சீன் அப்போட் அழுது கொண்டே மருத்துவமனையிலிருந்து வெளி-யேறுவதனையும் காணலாம்.

# விளையாடும் மன நிலையில் இருக்கமாட்டார்கள் வீரர்கள்

## கூறுகிறார் கவாஸ்கர்

பிலிப் ஹியூஸ் மரணத்தை அடுத்து இந்தியா-அவுஸ்ரேலியா மோதும் முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடும் மனநிலையில் வீரர்கள் நிச்சயம் இருக்கமாட்டார்கள் என சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

விளையாடுவது என்பது கடினம். இன்னும் ஒரு வாரம் இருக்கிறது. ஆனாலும் எந்த வீரரும் விளையாடும் எண்ணத்தில் இருக்க மாட்டார்கள். ஒருவருக்கும் விளையாடுவதற்கான மனநிலை இருக்காது.

நியூசவுத்வேல்ஸ்-தெற்கு அவுஸ்ரேலியா போட்டி கைவிடப்பட்டது. ஆகவே முதல் டெஸ்ட் போட்டியை இரத்துச் செய்வதா வேண்டாமா என்பது பற்றி இரண்டு நாடுகளின் கிரிக்கெட் சபைகளே கலந்து முடிவெடுக்க வேண்டும்.

பிலிப் ஹியூஸ் மரணம் ஆழமான துயரங்களை ஏற்படுத்துகிறது. எந்த ஒரு விளையாட்டு வீரர் பற்றியும் இத்தகைய செய்தியை எவரும் கேட்க விரும்ப மாட்டார்கள்.

அதுவும் பாதுகாப்பு கவசம் அணிந்திருந்தும் இது நடந்துள்ளது. இது ஒரு விபத்து, ஹியூஸ் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள். அவுஸ்ரேலிய கிரிக்கெட் சகோதரர்களுக்கும் எனது ஆழ்ந்த் வருத்தங்கள்.

எந்த ஒரு வீரரும் மற்றய வீரர் இவ்வாறு அடிபட்டு சாய்வதை விரும்ப மாட்டார்கள். பவுன்சர் வீசிய சான் அபாட் நிச்சயம் மனம் உடைந்திருப்பார். அவருக்கு இது மிகவும் கடினமான நேரம், கிரிக்கெட் அவுஸ்ரேலியா அவருக்கு கவுன்சிலிங் வழங்குவதன் மூலம் நல்ல காரியத்தை செய்துள்ளது. அது மட்டுமல்ல நியூசவுத்வேல்ஸ் அணி வீரர்கள் அனைவருக்குமே கவுன்சலிங் தேவைப்படும்.

ஹெல்மெட் தயாரிப்பாளர்களை குறைகூறி பயனில்லை. இதற்கு முன்னர் ஹெல்மெட்டில் பந்துகள் பட்ட தருணங்கள் உண்டு, ஆனால் யாருக்கும் ஆபத்தான காயங்கள் ஏற்பட்டதில்லை. ஆனாலும் ஹெல்மெட் தயாரிப்பாளர்கள் முழு ஆராய்ச்சியில் ஈடுபட்டு மேலும் பாதுகாப்பான கவசிங்களுக்கு திட்டமிடுவர் என்பது உறுதி.

கிரிக்கெட் என்பது அபாயகரமான ஆட்டம் என்று யோசிக்கவே முடியாது, அப்படி யோசித்தால் பெவிலியனில் உட்கார்ந்திருக்க வேண்டியதுதான்.

காயத்தைக் கண்டு அஞ்சியிருந்தால் நான் வேகப்பந்து வீச்சாளர்களையே விளையாடியிருக்க முடியாது. அபாயம் இருப்பதாக நான் உணர்ந்ததில்லை. என்னைப் பொறுத்த வரை கிரிக்கெட் என்ற ஒரு ஆட்டத்தை விளையாடுவதை நான் பெரும் மகிழ்ச்சியாக கருதினேன். ஆனால் கொஞ்சம் வலி இருக்கத்தான் செய்யும் என்பதும் எனக்கும் தெரியும் என்றார்.

# பரிந்துரை

உலக கிண்ண கிரிக்கெட் தொடருக்கு பங்களாதேஷ் அணிக்கு, மஸ்ரபா மொர்டாசாவை தலைவராக நியமிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் தலைவர் நஸ்முல் ஹசன் அவரது பெயரை பரிந்துரை செய்துள்ளார்.

சிம்பாப்வே அணிக்கு எதிரான ஒருநாள் தொடரின் போது, மொர்டாசா பங்களாதேஷ் ஒருநாள் அணிக்கு தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்தத்தொடரில் பங்களாதேஷ் அணி 3-0 என்ற கணக்கில் தொடரை முழுமையாக வென்றிருந்தது.

இதனை அடுத்து அவரையே உலக கிண்ணத்துக்கான பங்களாதேஷ் அணிக்கான தலைவராகவும் தொடரச் செய்ய வேண்டும் என்று, பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# திடீரென மோசமடைந்த பீலேயின் உடல் நிலை

கால்பந்து ஜாம்பவான் பீலேயின் உடல்நிலை திடீரென மோசம் அடைந்துள்ளது.

பிரேசில் கால்பந்து அணியின் முன்னாள் கப்டன் பீலே, (74) மூன்று முறை உலக கோப்பை வென்ற அணியில் இடம் பெற்ற பெருமைமிக்க இவர், ஒட்டு மொத்தமாக 1,363 போட்டிகளில் 1,281 கோல்கள் அடித்து சாதனை படைத்துள்ளார். சமீபத்தில் சிறுநீரகத்தில் கற்களை அகற்ற சத்திர சிகிச்சை மேற்கொண்டார்.

பின் சிறுநீரக பாதையில் கிருமி தொற்று ஏற்பட, பிரேசிலின் சாவ் பாலோவில் உள்ள அல்பேட் ஐன்ஸ்டீன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இவரது உடல்நிலை நேற்று முன்தினம் திடீரென மோசமடைந்தது.

இதையடுத்து சிறப்பு பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

இது குறித்து மருத்துவமனையின் செய்தி தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், பீலே அவசர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்படவில்லை. அவரை தொடர்ந்து கண்காணிக்கும் பொருட்டு சிறப்பு பிரிவில் வைக்கப்பட்டுள்ளார் என்றார்.

# திருமண பந்தத்தில் இணைகிறார் முர்ரே

பிரிட்டன் டென்னிஸ் வீரரான ஆண்டி முர்ரே தனது 9 ஆண்டு கால தோழியான கிம் சியர்சை திருமணம் செய்து கொள்ளப் போவதாக அறிவித்துள்ளார்.

ஸ்கொட்லாந்தில் உள்ள டன்பிளேனில் முர்ரேவின் இல்லத்தில் வசிக்கும் குடும்பத்தினரிடம் அவர் இந்த செய்தியை தெரிவித்துள்ளார்.

அவரது 83 வயது பாட்டியான ஷிர்லி எஸ்கைய்னிடம் இவ்விடயத்தை தொலைபேசியில் தொடர்பு கொண்டு முர்ரே கூறியபோது, திருமணத்திற்கான நேரம் வந்துவிட்டது என்று அவர் நகைச்சுவையுடன் கூறியுள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய ஷிர்லி, நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்துள்ளோம். கிம் மிகவும் அன்பான பெண் என்று கூறியுள்ளார்.

அவரது தாத்தா ராய் கூறுகையில், ஆண்டி தொலைபேசியில் எங்களை அழைத்து கிம்மிடம் தனது விருப்பத்தை கூறியதாக தெரிவித்தார் என்று கூறியுள்ளார்.

கடந்த 2013ஆம் ஆண்டு நடைபெற்ற விம்பிள்டன் டென்னிஸ் போட்டியிலும், 2012ஆம் ஆண்டு நடைபெற்ற யு.எஸ். ஓபன் டென்னிஸ் போட்டியிலும் முர்ரே கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது.

# பெருகும் ஆறுதல்கள்

பிலிப் ஹியூஸிற்கு பவுன்சர் வீசிய நியூசவுத் வேல்ஸ் பந்துவீச்சாளர் சீன் அப்போட் துயரார்ந்த மனநிலையில் இருப்பதால் அவருக்கும் ஆறுதல்கள் குவிகின்றன.

ஒரு புறம் பிலிப் ஹியூஸ் மரணம் ஏற்படுத்திய சோகம், அதிர்ச்சியினால் அவரது குடும்பத்தினருக்கு அனுதாப மழை பொழிய, பவுன்சர் வீசிய சீன் அபோட்டிற்கும் ஆறுதல்கள் பெருகியுள்ளன.

சமூக வலைத்தளங்களில் முற்றிலும் உடைந்து போன சீன் அப்போட்டிற்கும் கிரிக்கெட் வட்டாரத்திலிருந்து ஆறுதல்கள் குவிந்து வருகின்றன.

அபோட் வீசிய பவுன்சரை ஆடிய போது பிலிப் ஹியூஸின் பின் மண்டையை பந்து தாக்கியதால் ரத்தப் போக்கு ஏற்பட்டு அவர் மரணமடைந்தார்.

அன்றைய தினத்தில் பிலிப் ஹியூஸ் நிலைகுலைந்து விழுந்த போது அவர் அருகில் மிகுந்த வேதனையோடு அவருக்கு உதவ வந்தவர் சான் அபாட்.

அபோட் செயிண்ட் வின்செண்ட் மருத்துவமனைக்கு வந்து பிலிப் ஹியூஸ் குடும்பத்தினரை சந்தித்தார். அவர் மருத்துவமனைக்கு வந்த போது கப்டன் மைக்கல் கிளார்க் அவருடன் நீண்ட நேரம் பேசி ஆறுதல் கூறினார். பிலிப் ஹியூசின் சகோதரி மீகனும் சான் அபாட்டிற்கு மன ஆறுதல் அளித்தார்.

நிச்சயம் அபோட்டிற்கு ஹியூஸின் மரணம் பெரிய துர்கனவாகவே அமைந்திருக்கும். அவருக்கும் ஆறுதல் அளிக்க கிரிக்கெட் உலகம் கடமைப்பட்டுள்ளது என்று கிரிக்கெட் அவுஸ்ரேலியா தெரிவித்துள்ளது.

இதனிடையே முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் பிலிப் ஹியூஸ் மரணத்திற்கு அஞ்சலி குறிப்பு வெளியிட்டதோடு, பவுன்சர் வீசிய அபோட்டிற்கும் தங்கள் ஆதரவை தெரிவித்துள்ளனர்.

# கட்டார் அணிக்கு; ஹட்ரிக் கிண்ணம்



வளைகுடா கோப்பை கால்பந்து தொடரில் கட்டார் ஹட்ரிக் கிண்ணம் வென்றுள்ளது.

கடந்த புதன்கிழமை சவுதி தலைநகர் ரியாதில் பரபரப்பாக இடம்பெற்ற போட்டியில் சவுதி அணியை எதிர்த்து விளையாடிய கட்டார் அணி இறுதி ஆட்டத்தில் 2-1 என்ற கணக்கில் வென்றதன் மூலம் வரலாற்றில் மூன்றாவது முறையாகவும் வெற்றியீட்டியுள்ளது.

## அரசாங்க ஊழியர்களுக்கு கடன் அடிப்படையில் வீட்டுத்திட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வீடமைப்பு அதிகார சபையினால் அரச ஊழியர்களுக்கென கடன் அடிப்படையில் வீட்டுத்திட்டம் வழங்கப்படவுள்ளது.

இந்த வீட்டுத்திட்டத்தை பெற விரும்பும் அரச ஊழியர்கள் விண்ணப்பங்களை மாவட்ட செயலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் பல அரச ஊழியர்கள் வீட்டுத்திட்ட வசதியின்றி உள்ள நிலையில் அவர்களுக்கு கடன் அடிப்படையில் வீட்டுத்திட்டத்தை வழங்கும் வகையில் இத்திட்டம் செயற்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (77)

## வீதி விபத்துக்களை தடுக்கும் வகையில் சாரதிகளுக்கு பயிற்சி வழங்கப்பட வேண்டும்

### மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் 54 இலட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டு 51 இலட்சம் வானங்கள் தற்போது வீதிகளில் செல்கின்றன. இவற்றைச் செலுத்த 29 இலட்சம் சாரதி அனுமதிப்பத்திரங்களே வழங்கப்பட்டுள்ளன. அதிலும் தினமும் வாகன விபத்துக்களால் 5 - 6 பேர் வரையில் உயிரிழக்கின்றனர்.

அந்தவகையில் விபத்துக்களை தடுக்கும் வகையில் பயிற்சிகளை வழங்குவோருக்கும், சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவோருக்கும் சிறந்த பயிற்சிகள் வழங்கப்படவேண்டும். என மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகம் எஸ்.எச். ஹரிச்சந்திர தெரிவித்தார்.

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள யாழ். மாவட்டக் காரியாலய திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது 200 இலட்சம் மக்கள் வாழ்கின்ற நிலையில் 54 ஆயிரம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்ற வகையில் சராசரியாக 4 பேருக்கு ஒரு வாகனம் என்ற ரீதியில் உள்ளது.

தற்போது யாழ்.குடாநாட்டில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவோர் தொகை அதிகரித்துள்ளது. அந்தவகையில் விபத்துக்களைத் தடுக்கும் வகையில் சாரதி பயிற்சியாளர்களும் அனுமதிப்பத்திரம் பெறுவோரும் சிறந்த பயிற்சிகளை பெற வேண்டும்.

கடந்த மாதத்தில் மட்டும் 50 ஆயிரம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல் 4 இலட்சம் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. ஒப்பீட்டளவில் வாகனங்களின் எண்ணிக்கையில் பாரிய



அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையால் சாரதி அனுமதிப்பத்திரம் பெற வேண்டியநிலை ஏற்படுகின்றது.

இதற்காக கொழும்புக்கு செல்லவேண்டியது இல்லை. இங்கேயே விரைவாக பெற்றுக் கொள்ளக் கூடியவகையில் நவீனமயப்படுத்தப்படுகின்றது.

வாகனப்பதிவுகளில் மோட்டார் சைக்கிளுக்கான பதிவுகள் மட்டும் இங்கு மேற்கொள்ளக் கூடியதாக தற்போது உள்ளது. எதிர்காலத்தில் அனைத்து வாகனங்களுக்குமான பதிவுகளை இங்கு மேற்கொள்ளக் கூடிய சேவைகள் விரிவுபடுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## 'நீங்காத நினைவுகள்' நூல் அறிமுகவிழா

ஐ.தி.சம்பந்தனின் "நீங்காத நினைவுகள்" (ஓர் அனுபவ வரலாற்றுப் பதிவு) நூலின் அறிமுகவிழா இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார்.

ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், வாழ்த்துரையை இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா எம்.பி., வெளியீட்டுரையை யாழ். பல்கலைக் கழகத்தின் ஆங்கிலத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி வீரமங்கை யோகரட்ணம், ஆய்வுரையை கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் வழங்குவர். (48)

## 12 ஆவது அமர்வு

இலங்கை இளைஞர் நாடாளுமன்றத்தின் 12 ஆவது அமர்வு இடம்பெற்று வருகிறது.

நேற்று ஆரம்பமான அமர்வு இன்றும் மகரகம யூத்மத்தியஸ்தானத்தில் இடம்பெறவுள்ளது. இவ் அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டம் சம்பந்தமாக "2015 வரவு செலவுத் திட்டத்தில் நாட்டினை அபிவிருத்தி செய்ய இளைஞர்களுககான ஒதுக்கீடு" சம்பந்தமாக விவாதங்கள் இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்வுகளில் விருந்தினர்களாக இளைஞர் அபிவிருத்தி திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டளஸ் அளகப்பெரும, மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(48)

## முரசின் இன்றைய பலன்



(29.11.2014 சனிக்கிழமை)

ஐய வருஷம் கார்த்திகை மாதம் 13 ஆம் திகதி.
சப்தமி / சித்தாமிர்தம்.
அவிட்ட நட்சத்திரம் முற்பகல் 07.04 வரை. பின் பூரட்டாதி.
இராகு காலம் 09.13 - 10.43 வரை. சுபநேரம் 03.13 - 04.43 வரை.

**ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | தொழில் முன்னேற்றத்துக்கு புதிய திட்டத்தை செயற்படுத்த எண்ணுதல், பொருட் கொள்வனவிற்காக திடீர் பயணம் ஏற்படலாம். |
| ரிஷபம் | எதிர்பாராது சுபகாரியம் ஏற்பட்டதால் மகிழ்ச்சியடைதல், பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவரல். |
| மிதுனம் | சுபகாரியம் இனிதாக முடியும் என்ற நம்பிக்கை இருத்தல், பணவரவு கைக்கெட்டுதல். |
| கடகம் | நோயினைக் குணப்படுத்த தெய்வஸ்தலத்துக்கு செல்லல், புதிய அறிமுகத்தால் அபாய கட்டம் ஏற்படலாம். |
| சிம்மம் | புதிய முயற்சியை ஒத்தி வைத்தல், பணத்தைப்பெறுகையில் கணக்கிட்டுப் பெறுவது நன்று. |
| கன்னி | அனுசரித்துப்போவதால் முரண்பாடு விலகும், பணம் கைக்கு கிடைக்க வாய்ப்பு. |
| துலாம் | பயணத்தின்போது மிகவும் விழிப்பாக இருங்கள், இடமாற்றச் செய்தி பதகளிப்பை ஏற்படுத்தும். |
| விருச்சிகம் | உதவி செய்ய வெளிக்கிட்டு அவமானம் ஏற்படல், நண்பர்கள் மத்தியில் உறவு கெடும் வாய்ப்பு. |
| தனுசு | செயல்களில் அவதானமாக இருக்கவும், துன்ப நிலை ஏற்படும். |
| மகரம் | பெற்றோரின் கட்டாயத்தால் விவாகத்திற்கு சம்மதித்தல், புத்திர பாக்கியம் கிட்டல். |
| கும்பம் | மேலதிகாரிகளுடன் சுமுக உறவைப்பேணுங்கள், காலாவதியான பொருள் கைக்குவந்து சேரும் அபாயமுண்டு. |
| மீனம் | போட்டிகளில் பங்கு பற்றி பரிசில், பாராட்டுப் பெறுதல், அரசு வேலை கிட்டியதால் மகிழ்ச்சியில் திளைத்தல். |

## வேலணை பிரதேச செயலகத்தின் கலாசார விழாவும் கௌரவிப்பும்

(வேலணை)

வேலணை பிரதேச செயலகம் நடாத்தும் கலாசார விழா எதிர்வரும் 4 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீஷன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினைச் சேர்ந்த திருமதி.உஷாசுபலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

இவ்விழாவில் தீவகம் தெற்கு பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து கலைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களை கௌரவிப்பதுடன் "கலைவாரிதி" என்ற சிறப்புப்பட்டத்தினையும் சிறப்பு விருந்தினராக வருகை தரவுள்ள அரச அதிபர் வழங்கிவைக்கவுள்ளார். மேலும் தீவகம் தெற்கு பிரதேசத்தினை பிரதிபலிக்கும் விதத்தில் "தென்தீபம்" என்ற பெயரில் மலர் ஒன்றும் வெளி யிட்டுவைக்கப்படவுள்ளன. கலைகலாசார விழாவினையொட்டி தீவக மட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாண வர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதுடன் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (05)

## இந்துமாமன்றத்தின் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் 59 ஆவது பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத்தின் ஒவ்வொரு அங்கத்துவ சங்கங்களினாலும் தெரிவு செய்யப்பட்ட பேராளர்கள் அனைவரையும் இப்பொதுக் கூட்டத்துக்கு தவறாது சமுகமளிக்குமாறு மன்றத்தின் செயலாளர் மு.கதிர்காமநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.



மரம் நடுகை தினத்தை முன்னிட்டு இலங்கை வங்கி வட்டுக்கோட்டை சங்கரத்தை கிளையினால் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கிய மரக்கன்றை சங்கத்தலைவர் க.சி. தவராசாவுடன் கால்நடை சங்கப் பணியாளர்களும் இணைந்து சங்க காணியில் நாட்டிவைப்பதைக் காணலாம்.

# சொன்னார்கள்...

### போர்க்குற்ற விசாரணையை அனுமதிக்க மாட்டோம்

ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி வெற்றி பெற்றால் நாட்டின் தற்போதைய தலைவர் மற்றும் படையினர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்களுக்கு கொண்டு செல்லப்படுவார்கள் என்ற பிரசாரம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நடைபெறவிருப்பது தேசிய தேர்தலொன்றே தவிர சர்வதேச தேர்தலொன்றல்ல. அதற்கும் சர்வதேச நீதிமன்றத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி வெற்றி பெறுமானால், அரச தலைவர்களை படையினரை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வோம் என்று யாராவது கனவு காண்பார்களாயின் அது ஒரு போதும் நிறைவேறாது.

நாட்டை விற்கும் கூட்டம் நாங்கள் அல்ல. நாட்டையோ அரசை நிர்வகித்த தலைவர்களையோ அல்லது படையினரையோ நாம் ஒரு போதும் காட்டிக் கொடுக்கமாட்டோம். எதிரணியின் பிரதான கட்சியான ஐ.தே. கட்சியின் பிரதித்தலைவர் என்ற ரீதியில் இதை நான் உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன்.



அது மட்டுமல்ல எதிரணி ஆட்சியில் சர்வதேச ரீதியில் எஞ்சியுள்ள விடுதலைப் புலிகளை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**- பாராளுமன்றத்தில் சஜித் பிரேமதாஸ**

### போனவர்கள் திரும்பி இங்குதான் வரவேண்டும்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து காலத்துக்குக் காலம் வெளியே சென்றவர்களும் உள்ளே வந்தவர்களும் உள்ளனர். பலரது பைல்கள் என்னிடமுள்ளது. நான் அவற்றை மேலே எடுப்பதில்லை. எனினும் கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கல்லெறியக்கூடாது.

எமது கட்சியிலிருந்து கட்சிச் செயலாளர்கள் எத்தனையோ பேர் போகின்றார்கள் வருகின்றார்கள் அதற்குக் குறைவில்லை. மூன்று செயலாளர்கள் போய் திரும்பி வந்துள்ளார்கள். அவர்களது பெயரை நான் குறிப்பிடப் போவதில்லை. இது சகலரும் அறிந்ததே.

இங்கிருந்து போய் அங்கு எதிர்பார்த்தது நடக்காவிட்டால் மீண்டும் இங்குதான் வரவேண்டும். ஒன்றாக இருந்து ஒன்றாக உண்டு குடித்துவிட்டு இரவில் அப்பமும் சாப்பிட்டுவிட்டு காலையில் கட்சியை விட்டு விட்டுப் போய் முதுகில் கத்தியால் குத்துவது சரியா? என்று உங்கள் மனதைத் தொட்டு சொல்லுங்கள். இப்படிச் செய்பவர்களுக்கு நாட்டை ஆட்சிசெய்ய முடியுமா?

சந்திரிகா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை 52 பேராக வீழ்ச்சியடைய செய்தார். நான் அதனை 121 ஆக முன்னேற்றியுள்ளேன். 160 பேர் எமது பக்கம் பாராளுமன்றத்தில் உள்ளனர். சிலர் போயுள்ளார்கள். நாம் எப்போதும் கதவைத் திறந்தே வைத்துள்ளோம். இது சலூன் கதவு போன்றது. எவரும் போகலாம் வரலாம். இப்போது மட்டுமல்ல. அன்று சி.பி.டி. சில்வா என்ன செய்தார்? அதுவும் பொலனறுவை மாவட்டத்திலிருந்துதான். ஸ்ரீமாவுக்கு வாலைக் காட்டினார். காலையில் அவருடன் பால்சோறு சாப்பிட்டுவிட்டு போனவர்தான் அவரும்.



**- அநுராதபுரத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ**

### த.தே.கூவினர் பதற்ற சூழலை உருவாக்கவே முற்படுகின்றனர்

ஒருகாலகட்டத்தில் எமது மாணவர்கள் நிம்மதியாகக் கல்வி கற்க முடியாமலும் வளங்கள் இல்லாத நிலையிலும் தமது கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தனர்.

ஆனால், இன்று ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலைகளுக்கான வளங்களை அரசு தந்துள்ளது. இதனடிப்படையில் தான் கடந்த ஆண்டு ஏனைய மாகாணங்களை விடவும் வடமாகாணம் கல்வி நிலையில் முன்னேற்றம் கண்டுள்ளது.

கடந்தகால தவறான அரசியல் தலைமைகளால் எமது மாணவர்களின் கல்வி நிலை பாரிய அளவில் வீழ்ச்சி கண்டிருந்த போதிலும், தற்போது முன்னேற்றம் கண்டுள்ள நிலையில், எதிர்காலத்தில் கல்வி நிலையில் மேலும் முன்னேற்றம் காண வேண்டும்.

கிடைக்கின்ற வாய்ப்புகளை சுயலாபத்திற்காக சுயலாப அரசியல் வாதிகள் பயன்படுத்தியதின் காரணமாகவே, எமது மக்கள் துன்ப துயரத்தைச் சந்தித்தார்கள். அதுமட்டுமன்றி, மீண்டும் ஒரு பதற்றமான சூழலை உருவாக்கவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீண்டும் முயற்சித்து வருகின்றார்கள். எதிர் காலத்தில் மக்கள் அதற்கு ஒருபோதும் இடம்கொடுக்கமாட்டார்கள். இது விடயம் தொடர்பில் மக்கள் தற்போது உணரத் தொடங்கியிருக்கின்றார்கள்.

அதுமட்டுமன்றி, வடமாகாண சபைக்கென அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மக்களுக்குச் சென்றடைவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தடையாக இருக்கின்றார்கள். மக்கள் அது குறித்தும் அதிருப்தியடைந்திருக்கிறார்கள்.



**- யாழ்ப்பாணத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா**

### சர்வதேச சதிக்கு எடுபடாமல் ஜனாதிபதி முறைமை நீக்குவோம்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நாங்கள் இரண்டு விடயங்களை கருத்திற்கொண்டு செயற்படுகின்றோம். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தேர்தலில் வெற்றிபெற வைப்பதுடன் அதன் பின்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குதல் ஆகிய இரண்டு விடயங்களை நோக்கமாகக்கொண்டே செயற்படுகின்றோம்.

எமது நாட்டில் தமது ஆதிக்கத்தை செலுத்துவதற்கு சர்வதேச சக்திகள் முயற்சித்துவருகின்றன. அதற்கு நாம் இடமளிக்க முடியாது. ஜனநாயக சக்திகள் அனைத்தும் எமது முகாமிலேயே உள்ளன. ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான எதிர்க்கட்சியில் இல்லை.

இந்த நாட்டில் யுத்தம் முடிவடைவதற்கு காலனித்துவ வாதிகள் விரும்பவில்லை. எமது நாட்டின் மீது பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் தோற்கடிக்க முயற்சிக்கின்றனர். சர்வதேச சதி முயற்சிக்கு எதிராக நாங்கள் முன்நிற்கவேண்டும்.



அதேசமயம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். இதனை அரசாங்கத்தின் உள்ளே இருந்தவாறு. ஐ.ம.சு.முன்னணி அரசாங்கத்தின் ஊடாகவே இதனை நீக்க முடியும். அதற்காக நாங்கள் போராடுவோம்.

**- அமைச்சர் வாசுதேவ நாணயக்கார**

### நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பது நல்லதல்ல

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிப்பதை உலமா கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக அதில் உள்ள அதிகாரங்கள் சில நீக்கப்பட வேண்டுமென்பதே எமது நிலைப்பாடாகும்.

அரசுடன் இருந்த முன்னாள் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன எதிரணியுடன் இணைந்துள்ளார். ஆனால் முஸ்லிம்களுக்கெதிராக பேரினவாதிகள் பாரிய பல அநியாயங்களை செய்த போது இவரும் ஜாதிக ஹெல உறுமயவும் வாய்மூடி கை கட்டி வேடிக்கை பார்த்தார்கள் என்பதை நாம் மறக்க முடியாது.

அவரும் மற்றவர்களும் ஜனாதிபதியுடனான முரண்பாட்டின் காரணமாகவே அவரோடு முறுகிக்கொண்டு வெளியே வந்துள்ளனரே தவிர இந்த ஆட்சியில் சிறுபான்மை மக்கள் அனுபவிக்கும் துன்பங்களை கருத்திற்கொண்டு வெளியேறவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எம்மைப் பொறுத்தவரை நிறைவேற்று அதிகார முறை மூலமே சிறுபான்மை மக்களுக்கான தீர்வை ஓரளவு கிடைக்கப்பெற முடியும் என்பதில் உறுதியாக இருக்கிறோம்.



எதிரணி ஆட்சிக்கு வந்தால் பொது பல சேனா இவர்களுடன் இணைய வந்தால் நிச்சயம் அவர்களையும் இணைத்துக் கொள்வார்கள் என்பதை எம்மால் உறுதியாக கூற முடியும்.


ஆகவே முஸ்லிம்கள் எடுத்தவுடனே மைத்திரிக்கு ஆதரவு என்று சிந்திக்காமல் நாங்கள் அனைவரும் ஒற்றுமைப்பட்டு எமது பெறுமதி மிக்க வாக்குகளை காட்டி நமது உரிமைகள் தேவைகளை ஒப்பந்தமாக முன்வைத்து அது ஏற்கப்படும் நிலையிலேயே நமது ஆதரவை தர முன்வரவேண்டும்.

**- உலமா கட்சித் தலைவர் அப்துல் மஜீத்**

---

ஒரு கிராமத்துக்கு வந்த ஒரு சாமியார், அங்கு தரையில் துண்டை விரித்துச் சில சீட்டுகளைப் பரப்பினார்.

## சொர்க்கத்துக்கான நுழைவுச்சீட்டு



கூட்டம் கூடியது. அப்போது அவர், "பக்தர்களே... உங்களுக்கு மாபெரும் நற்செய்தி! இதோ என்னிடம் பாவமன்னிப்புச் சீட்டுகள் விற்பனைக்கு உள்ளன. ஒரு சீட்டு நூறு ரூபாய் மட்டுமே... நீங்கள் இதுவரை எவ்வளவு பாவம் செய்திருந்தாலும், இதைக் கொண்டு போனால்... உங்களுக்கு சொர்க்கத்தில் இடம் கிடைக்கும். இது சொர்க்கத்துக்கான நுழைவுச் சீட்டு" என்று கூவினார்.

அதைப் பார்த்த பலரும் போட்டி போட்டுக் கொண்டு சொர்க்கத்திற்கான நுழைவுச் சீட்டை வாங்கினர்.

சாமியாரிடம் பணம் சேர்ந்து கொண்டே இருந்தது. சாமியார் கடைசியாக, "என்னிடத்தில் இன்னொரு சீட்டும் உள்ளது. நீங்கள் இனி செய்யப் போகும் பாவத்தையும் மன்னிக்கக் கூடிய அந்த சீட்டின் விலை இருநூறு ரூபாய்" என்று சொல்லி அதையும் விற்றுப் பணத்தைச் சேர்த்தார்.

சாமியார் புறப்பட நினைத்த சமயத்தில் அங்கு ஒருவன் வந்தான். அவன் சாமியாரிடம் இரண்டு சீட்டுகளையும் வாங்கினான். பின்னர் சாமியாரிடம் கத்தியைக் காட்டி மிரட்டினான். சாமியார் சேர்த்த பணத்தையெல்லாம் வாங்கிக் கொண்டு ஓடத் தொடங்கினான்.

அப்போது சாமியார், "திருடனே உனக்கு நரகம்தான்..." என்று சாபம்விட்டார்.

அவன் ஓடிக் கொண்டே, "சுவாமி, நான்தான் இனி செய்யப் போகும் பாவத்திற்கான இருநூறு ரூபாய் சீட்டையும் உங்களிடம் வாங்கிவிட்டேனே... உங்கள் சாபம் பலிக்காது..." என்றான்.

அந்த போலிச் சாமியார் திகைத்து நின்றார்.

---

## வாகனம்

✸ வண்டியை எடுக்கும்போது வாகன [illegible]ம், சாரதி அனுமதிப் பத்திரம், [illegible]சூரன்ஸ் உங்கள் அடையாள [illegible] ஆகியவற்றை ஒருமுறை பார்த்துக் கொள்ளுங்கள்.

✸ வண்டி ஓட்டுவது மறக்காமலிருக்க எப்போதெல்லாம் முடிகிறதோ, அப்போதெல்லாம் வண்டியை ஓட்டிப்பார்ப்பதும் அடிக்கடி அந்த வாகனத்தை ஓட்டிச்செல்வதும் அவசியம்.

✸ டூ-வீலராக இருந்தால் ஹெல்மெட்டும், காராக இருந்தால் சீற்பெல்ட்டும் அணிவது அவசியம்.

✸ வண்டியை எடுப்பதற்கு முன்பு எரி பொருள் இருக்கிறதா, ரயர் நல்ல நிலையில் இருக்கிறதா, பிரேக் பிடிக்கிறதா என சரிபார்ப்பது மிகவும் அவசியம்.

✸ தனியே வாகனம் ஓட்டிச்செல்லும்போது கண்டிப்பாக செல்போனை எடுத்துச் செல்லவும்.

✸ அறிமுகமில்லாத யாருக்கும் லிஃப்ட் தரவேண்டாம்.

# 3 ஆயிரம் கி.மீ. பறக்கும் வண்ணத்துப் பூச்சிகள்!

– தே.ஜெயபாலன் –

வண்ணத்துப்பூச்சி, வண்ணாத்திப்பூச்சி, பட்டுப்பூச்சி, பட்டாம்பூச்சி - இவையெல்லாம் நாம் அன்றாடம் உச்சரிக்கும் பெயர்கள். ஆனால், பட்டுப்பூச்சியும், பட்டாம்பூச்சியும் ஒன்றல்ல. பட்டு நூல் தயாரிக்க உதவும் உயிரினம்தான் பட்டுப்பூச்சி, மற்றது பட்டாம்பூச்சி அல்லது வண்ணத்துப் பூச்சியாகும்.

வனங்களில் யானை இனம்தான் தனது உணவைத் தேடியும், இணையைத் தேடியும் கொரிடோர் எனப்படும் வலசைப் பாதையில் ஆண்டுதோறும் குறிப்பிட்ட சில மாதங்களுக்கு பயணித்து விட்டு திரும்பும். ஆனால்; இந்த வண்ணத்துப் பூச்சிகளும் உணவுக்காக வலசைப் பாதை அமைத்துள்ளன என்ற தகவல் ஆராய்ச்சியாளர்களுக்கே புதிராகவும் உள்ளது.


இதில் மொனார்க் வகையிலான வண்ணத்துப் பூச்சிகளின் உலகின் பிரபலமான வலசைப் போதல் நிகழ்ச்சி கனடா மற்றும் அமெரிக்காவிலிருந்து மெக்சிகோ வரை ஆண்டு தோறும் இலையுதிர் காலங்களில் நடைபெறும் நிகழ்வாகும்.

வண்ணத்துப்பூச்சிகள் தமது அழகினால் நம்மை மகிழ்வூட்டும் உயிரினமாக மட்டுமல்லாமல் சூழ்நிலை மண்டலத்திலும் பல்வேறு நன்மைகளைச் செய்கின்றன. தாவரங்களின் அயல் மகரந்தச் சேர்க்கைக்கு உதவுவதோடு, பறவைகள், ஊர்வன மற்றும் சிறு உயிரினங்களுக்கும் உணவாகவும் பயன்படுகின்றன.

உயிர் களைக்கொல்லியாகவும் இவை இருப்பதால் சூழ்நிலை மண்டலத்தில் உணவுச் சங்கிலி மற்றும் உணவு வலையில் முக்கிய பங்காற்றுகின்றன.

மரபு பொறியியல் சோதனைக்காகப் பயன்படும் வண்ணத்துப் பூச்சிகள் வனங்களின் செழுமையை யும் தாவரங்களின் செழுமையையும் தெரிவிக்கின்றன. சூழ்நிலை மண்டலத்தில் ஏற்படும் சீர்கேட்டை உணர்த்துகின்றன. அத்துடன் சில வகை வண்ணத்துப் பூச்சிகள் சூழ்நிலை மற்றும் இருப்பிட மாற்றம் மற்றும் தட்பவெப்பநிலை மாற்றம் ஏற்படும்போது வேறு இடங்களுக்குப் பெயர்ந்து சென்று அந்த சூழ்நிலை மாற்றத்தை மக்களுக்கும் தெரிவிப்பதோடு, சூழ்நிலை மாசுபடுதலை கணக்கிடவும் உதவுகின்றன.

உலகில் சுமார் 16 ஆயிரத்துக்கும் அதிகமான வண்ணத்துப் பூச்சி வகைகள் உள்ளன. சில வகையான வண்ணத்துப் பூச்சிகள் 3,000 கி.மீ. தொலைவுக்கு அப்பாலும் பறந்து செல்லும் திறன் படைத்தவையாகும். அத்துடன் சில வகையிலான வண்ணத்துப்பூச்சிகள் சூழ்நிலைக் கேற்ப தமது வண்ணத்தையும் மாற்றிக்கொள்ளும் திறனும் படைத்தவையாகும்.



ஆனால், தற்போது சுற்றுச்சூழல் சீர்கேடு, வன அழிப்பு, காட்டுத்தீ, உணவுத் தாவரங்கள் அழிப்பு, இருப்பிட அழிப்பு, மோசமான தட்பவெப்பநிலை, இயற்கை எதிரிகள் மற்றும் விவசாயிகள் அதிக அளவில் பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவதும் வண்ணத்துப் பூச்சிகளின் அழிவுக்குக் காரணமாக உள்ளது.

வண்ணத்துப் பூச்சிகளைப் பாதுகாப்பது நமது தலையாய கடமையாகும். விவசாயத்திற்கு இயற்கை பூச்சிக்கொல்லி மருந்துகளை மட்டுமே பயன்படுத்துதல், வண்ணத்துப் பூச்சிகளுக்கான பூங்காக்களை அதிகரித்தல், வண்ணத்துப் பூச்சிகளைக் குறித்த செய்திகளைத் தெளிவுபடுத்துதல் ஆகியவற்றுடன் அனைத்து வனச்சரணாலயங்கள் மற்றும் பூங்காக்களிலும், வண்ணத்துப் பூச்சிகளுக்கான பிரத்யேக தோட்டம் அல்லது பூங்காக்களை உருவாக்கினால் அவற்றைப் பாதுகாக்க முடியும்.

---

✷ வாகனம் பழுதனால் அந்த இடத்துக்கே வந்து சரி செய்துகொடுக்கும் கராஜ் அல்லது திருத்துனரின் செல் நம்பர்களை எப்போதும் உங்கள் கைவசம் வைத்திருக்க வேண்டும்.

✷ வண்டி ஓட்டிக் கொண்டிருக்கும்போது உங்கள் கவனத்தை சிதறடிக்கும் விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையாக இருங்கள். உதாரணத்துக்கு வழி கேட்பவர்கள், சிக்னலில் பொருள்கள் விற்பவர்கள் இத்யாதி.


✷ வண்டி ஓட்டும்போது செல்·.போனில் பேசுவதை கட்டாயம் தவிர்க்கவும். எத்தனை அவசரமான அழைப்பாக இருந்தாலும் பாதுகாப்பான ஓர் இடத்தில் வண்டியை நிறுத்திவிட்டுப் பேசுவதே நல்லது.

✷ கண்டகண்ட இடங்களில் உங்கள் வாகனத்தை நிறுத்திவிட்டுப் போக வேண்டாம். வண்டியை பார்க் செய்யும் போது எக்காரணம் கொண்டும் செல்·.போனில் பேசுவதைத் தவிருங்கள்.



## ...ம் ஓட்டுபவர்களுக்கான குறிப்புகள்...

---



# "இந்தாங்கோ அண்ணை தலை மிளகாயை அரைச்சு விடுங்கோ..."

## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

கேக்கிறவன் கேணையனாக இருந்தால் எருமைமாடு ஏரோப்பிளேன் ஓட்டுமாம். தமிழ்க் கேணையர்கள் பலர் நிறைஞ்சிருக்கிறதாலைதான் மாவையண்ணை போலை ஆக்கள் தலையிலை நல்லாய் மிளகாய் அரைக்கினம் பாருங்கோ.

அகிம்சைப் போர் எண்டு கதையளந்தவர் இப்ப அதை விட்டிட்டு தெற்கின்ரை முற்போக்குச் சக்திகளோடை சேர்ந்து மகிந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பப் போறாராம். சொந்த வீட்டிலை இருக்கிற திராணியோ, தமிழ்த் தேசாபிமானமோ இல்லாமல் இரவல் இந்திய வீட்டிலை குடியிருக்கிற மாவை மகிந்தவை வீட்டுக்கு அனுப்பப் போறனெண்டு சொல்லுறதைக் கேக்க உங்கள் ஒருத்தருக்கும் சிரிப்பு வரேல்லையே? வராது. வந்தால் நீங்கள் அசல் வடக்குத் தமிழனாய் (பனங்கொட்டை) இருக்கேலாது.

தமிழரசுக் கட்சி ஆரம்பிச்ச காலத்திலையிருந்து முற்போக்குச் சக்திகளோடை இவைக்கு எந்தத் தொடர்பும் இருந்ததில்லை. சொல்லப் போனால் இடதுசாரிக் கொள்கையுடைய முற்போக்குச் சக்திகள் இவையின்ரை எதிரியளாய்த்தான் இருந்தவை.

பல்கலைக்கழகமே வேண்டாம் எண்டு இவை ஒற்றைக்காலிலை நிண்டு சன்னதம் ஆடேக்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை இடதுசாரி முற்போக்கு சக்தியளே அமைக்கக் காலாய் இருந்தவை. சுதந்திரக் கட்சி ஆட்சியிலை இருந்த காலத்திலை இந்த முற்போக்குச் சக்தியளே அரசாங்கத்தோடை இணைஞ்சிருந்தவை. சனங்களுக்கும் ஏதோ கிடைக்கச் செய்தவை. அரசாங்கத்தின்ரை பொருளாதாரக் கொள்கையே அதுக்குப் பிரதான காரணம்.

அதோடை இலங்கை எண்ட சிறிய நாட்டிலை பிரிவினை எண்டதை அவை ஆதரிக்கேல்லை. வர்க்கப் பிரச்சினை எண்டதுக்கே முக்கியத்துவம் குடுத்தினை. தொழிலாளர் வர்க்கம் எண்ட வகையிலை இன, மத, மொழி பேதமற்று எல்லாத் தொழிலாளர்களையும் ஒண்டாகவே பாத்தினை.

இது சிங்கள "வேலக்காரர்களை" வீட்டு வேலைக்கும், உள்ளூர் சாதி "குறைஞ்ச" சனத்தை தோட்ட வேலைக்கும் வைச்சிருந்த தமிழரசு அப்புக்காத்துக்களுக்கு அடுக்குமோ? எல்லாரையும் சமமாய்ப் பாக்கிற இடது முற்போக்குக்காரங்களை விட்டு வைக்கலாமோ?

எனவே, அப்ப ஆயுதம் தூக்கின பெடியளிட்டைச் சொல்லி அதிலை கொஞ்சப் பேரைப் போட்டுத் தள்ளிச்சினம். முக்கிய தலையளைப் போட்டுத் தள்ளி, மற்றவையை வாயை மூட வச்சு ஒரு மாதிரியாய் முற்போக்கை முடக்கி வச்சிருந்தினை.

போனது போகட்டும். காலம் போகேல்லை. இப்பவும் தமிழருக்கு மேலும் உரிமையள் கிடைக்க வேணும் எண்டு நம்பிற இடதுசாரியள் நிறைய இருக்கினை. லங்கா சமசமாஜக் கட்சி, நவசமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிசக் கட்சி எண்டு ஒருபக்கம் இடதுசாரியள் இருக்கினை. மற்றப் பக்கம் எழுத்தாளர்கள், கலைஞர்கள், பல்கலைக்கழகத்தவர், பத்திரிகையாளர் எண்டு பலரும் இருக்கினை. பல்வேறு ஜனநாயக அமைப்புக்களும் இருக்குது.

ஆனால் இதுகளோடையெல்லாம் தொடர்பு வச்சிருக்க தமிழரசுக் குஞ்சுகள் தயாராயில்லை. அப்பிடிக் கூட்டுச் சேருறதெண்டால் அடுத்த நாள் சூரியன் மேற்கிலைதான் உதிக்கும் பாருங்கோ!

அப்ப மாவையண்ணை எந்த முற்போக்கு சக்தியளோடை இணைஞ்சு மகிந்தவை வீட்டுக்கு அனுப்பப் போறாராம். அவை ஆரெண்டு பார்த்தால் ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஜாதிக ஹெல உறுமய, அதோடை சரத் பொன்சேகாவின்ரை கட்சி, மற்றது பொது பலசேனா. இவைதான் மகிந்த அரசுக்கு எதிராகக் குரல் குடுத்து வாற முற்போக்குச் சக்தியள். மூலதன முற்போக்குச் சக்தியள் அல்லாட்டில் முதலாளித்துவ முன்னேற்ற சக்தியள் எண்டுதான் இவையைச் சொல்லலாம்.

தமிழற்றை உரிமையள் கிடைக்கிறதுக்காக இவையோடைதான் மாவை இணைஞ்சு செயற்படப் போறாராம். எப்பிடியும் தேர்தல் முடிஞ்சவுடனை யாழ்ப்பாணத்தைப் பிடிச்சதுக்கு இராணுவத் தளபதிக்கு வீரவாள் குடுத்த சந்திரிகாவும், தமிழரைக் கையறு நிலைக்குக் கொண்டு வந்த யு.என்.பி. ரணிலும், சிங்களவருக்கு மட்டுமே இந்த நாடு சொந்தம் எண்டு சொல்லுற அத்துரலிய ரத்தின தேரரும், பிரிவினைக்கு இடமில்லை எண்டு சொல்லுற அனுரகுமார திசாநாயக்கவும், முள்ளி வாய்க்காலிலை முடிச்சு வச்சது நான்தான் எண்டு சொல்லுற சரத் பொன்சேகாவும் இணைஞ்சு தமிழற்றை உரிமையளை அதுதான் தமிழீழத்தை – தங்கத் தட்டிலை வச்சு மாவையண்ணையிட்டைக் குடுக்கப் போகினை.



அதுக்காகத்தான் இந்த முற்போக்கு சக்தியளோடை மாவை இணையப் போறாராம்.

எல்லாம் கலிகாலந்தான்.


உண்மையிலை சூரியன் மேற்காலை உதிக்கத்தான் போகுது போலை. இதை மற்றச் சனங்களைப் போலை நானும் நம்பத்தான் வேணும். ஏனெண்டால் நானும் பனங்கொட்டைத் தமிழன். இல்லையெண்டால் துரோகி எண்ட பேரோடையல்லே என்ரை சீவன் போகும். இந்தாங்கோ தலையைத் தாறன். என்ரை தலையிலையும் மிளகாயை அரைச்சு விடுங்கோ மாவையண்ணை.

# புதிர்ப்போட்டி இல. 17


• வித்தியாசமான உருவின் கீழ் கோடிடுக


01

(i) (ii) (iii)


02

(i) (ii) (iii)


• இரண்டு கூட்டங்களாக ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் சரியான விடையின் கீழ் கோடிடுக

03.

(i) A,C,F, உம் B,D,E (ii) A,B,C உம் D,E,F (iii) A,E,F உம் B,C,D


04.

(i) A,C,B, உம் D,E,F (ii) E,F,C உம் A,B,D (iii) A,D,F உம் B,C,E


• வினாக்குறி வந்துள்ள இடத்தில் வரும் விடையைக் கண்டு கீறிடுக

05.

(i) 3
(ii) 2
(iii) 1


06.

(i) 7 (ii) 5 (iii) 9


• புள்ளிக்கோடு உள்ள இடத்தில் வரும் விடையைக் கண்டு கீறிடுக

07.

(i) 22
(ii) 32
(iii) 42


08.

(i) 36
(ii) 76
(iii) 84

• வித்தியசமான உருவின் கீழ் கீறிடுக

09.

(i) (ii) (iii) (iv)

10

(i) (ii) (iii) (iv)


• தரப்பட்ட தகவலை நன்கு அவதானித்து விடை தருக

11



 இதன் பெறுமானம் என்ன?

I) 5 II) 4 III) 2

12 .தரப்பட்ட படத்தில் கறுப்பு நிறமாக காணப்படும் இடத்தினூடாக மறுபுறம் வரை உடைத்தால் எத்தனை கற்கள் கழட்டப்படும்.




I) 10 II) 15 III) 5

## அனுப்பவேண்டிய முகவரி

புதிர்ப்போட்டி இல: -------
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

• தரப்பட்ட கணிதச் செய்கையை நன்கு அவதானித்து கேட்கப்படும் வினாவுக்குரிய சரியான விடையைக் காண்க.



13 . ○ இன் பெறுமானம் என்ன?

(I) 5 (II) 6 (III) 7



14 . ▯ இன் பெறுமானம் என்ன?


(I) 12 (II) 10 (III) 8




15. △ இன் பெறுமானம் என்ன?

(I) 5 (II) 4 (III) 3

16.படத்தில் வெட்டி அகற்றப்பட்ட இடத்தில் வரும் விடையைக் கண்டு கீறிடுக


(i) (ii) (iii)

• புள்ளிக்கோட்டில் வரும் விடையைக் கண்டு கீறிடுக


17.


(I) 9 (II) 70 (III) 60

18. (I) 9 (II) 18 (III) 12

| | | |
|---|---|---|
| 8 | 55 | 7 |
| 5 | 44 | --- |


19. ஏதோ ஒரு இயல்புக்கு ஏற்ப ஒழுங்கு படுத்தினால் வரும் விடையின் கீழ் கோடிடுக


(i) A:D, B:C, E:F (ii) A:C, B:D, E:F (iii) F:C, B:E, D:A


• ஆரம்பத்தில் உள்ளவை அனைத்தையும் கொண்ட உருவின் கீழ் கோடிடுக


20.


(i) (ii) (iii) (iv)

21.

(i) (ii) (iii) (iv)

• ஆரம்பத்தில் தரப்பட்டவற்றை மேலிருந்து பார்க்கும் போது கிடைக்கும் சரியான உரு எதுவெனக் கோடிடுக


22.

(i) (ii) (iii)


23.

(i) (ii) (iii)


24.

(i) (ii) (iii)

இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும் அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு படங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.


• புள்ளிக்கோட்டில் வரும் சரியான விடையின் கீழ் கோடிடுக


25

(i) 19
(ii) 22
(iii) 25

26

(i) 16
(ii) 12
(iii) 20

27 (I) 6 (II) 10 (III) 8


• முதலில் தரப்பட்ட இரண்டு படங்களையும் ஒன்றின் மீது ஒன்றுவைக்கும் போது கிடைக்கும் அமைப்பின் கீழ் கோடிடுக

28

(i) (ii) (iii)

29

(i) (ii) (iii)

## சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- க.கோபிகா
தரம் :- 6
பாடசாலை:- கிளி/பாரதிவித்தியாலயம்.

பெயர் :- த.துவாரகா
தரம் :- 10
பாடசாலை:- யா/ வேம்படி மகளிர் கல்லூரி.

பெயர் :- ச.ஜதுசன்
தரம் :- 7
பாடசாலை:- யா/மத்தியகல்லூரி.

பெயர் :- தே.கவிதா
தரம் :- 5
பாடசாலை:- யா/அத்தியார் இந்துக்கல்லூரி.

### விண்ணப்பதாரரின் விபரம்

முழுப்பெயர் :- ------------------------
பாடசாலை :- ------------------------
கல்வி கற்கும் தரம் :- ------------------------
வீட்டு முகவரி :- ------------------------
தொ.பேசி இலக்கம் :- ------------------------

## சென்றவார விடைகள்

### புதிர்ப்போட்டி 16-1
1) 2 2) 4 3) 3

### புதிர்ப்போட்டி 16-2
1) 1 2) 3 3) 4 4)3 5)2

### புதிர்ப்போட்டி 16-3
1) 1 2) 3

### புதிர்ப்போட்டி 16-4
1) 2 2) 3

## மணிவிழா நிகழ்வு

யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் சி.சிவலிங்கத்தின் மணிவிழா நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் ச.வேலழகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு யாழ். பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை பேராசிரியர் ப.புஷ்பரட்ணம், நல்லூர் கோட்டக்கல்விப்பணிப்பாளர் அ.அகிலதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சரஸ்வதி வித்தியாலயத்தின் தமிழ்த்தின விழாவும் கௌரவிப்பும்

வேலணை வங்களாவடியில் உள்ள சரஸ்வதி வித்தியாலயத்தின் தமிழ்த்தின விழாவும் 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவித்து பரிசில்கள் வழங்கும் விழாவும் எதிர்வரும் 3ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் கல்லூரியின் முதல்வர் திருமதி நந்தினி பாலசுப்பிரமணியம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக தீவக கல்விவலய பணிப்பாளர் த. ஜோன் குயின்ரஸ் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வேலணை பிரதேசசபையின் தவிசாளர் சி.சிவராசா, வேலணைக்கல்விக்கோட்ட அதிகாரி எஸ்.சிவானந்தராசா தீவக கல்விப்பணிப்பாளர் அலுவலக உதவிக்கல்விப்பணிப்பாளர் ச.பாஸ்கரன், கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் திருமதி இந்திராணி சிவதாஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். கல்லூரி மாணவர்களினது கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (05)

# சமூக சேவைகள் அமைச்சினால் சுயதொழில் நன்கொடை

(கிளிநொச்சி)

சமூக சேவைகள் அமைச்சினால் தனி ஒரு பெற்றோரைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு சுயதொழில் வழங்கும் திட்டத்தின் கீழ் இவ் ஆண்டில் இதுவரை நாடெங்கும் 538 குடும்பங்களுக்கு 60 87 000 ரூபாவை சுயதொழில் நன்கொடையாக வழங்கியுள்ளது.

பாடசாலை செல்லும் மாணவர்களைக் கொண்ட வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களே இந்த சுயதொழில் நன்கொடையைப் பெற முடியும்.

இந்த சுயதொழில் நன்கொடையைப் பெற கணவனை இழந்த பெண் உள்ள குடும்பம்,அல்லது மனைவியை இழந்த ஆண் உள்ள குடும்பம், கணவனால் கைவிடப்பட்ட பெண் தலைமை குடும்பம், கணவன் காணாமற போன நிலையிலுள்ள பெண் தலைமை தாங்கும் குடும்பம் என்பவை தகுதியானது.

இதற்கு விண்ணப்பிக்க விரும்பும் ஒருவர் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் தொடர்பு கொண்டு உரிய விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்க முடியும்.

இச் சுயதொழில் நன்கொடை சுயதொழிலின் தன்மையைப் பொறுத்து 10 000 ரூபா முதல் 25000 ரூபா வரை வழங்கப்பட்டு வருகிறது.

இதனைக் கொண்டு வாழ்வாதார முயற்சிகளை மேற்கொண்டு வருவாயீட்டி பிள்ளைகளின் கல்விக்கு உதவ முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(90)

# கருவி சமூகவள நிலையத்தினால் நடாத்தப்பட்ட மாற்றுவலுவுடையோர் தின போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு நடாத்திய கட்டுரை, கவிதை, சிறுகதை, ஓவியப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு (நேற்றைய தொடர்ச்சி)

சிறுகதைப்போட்டி -பொது

மாலாதேவி மதிவதனன் (மங்குனியன் வளவு,அளவெட்டி), மதனரூபி பாரதிதாசன் (மகாத்மா வீதி, அல்வாய்), நவகுமாரன் கிருத்திகா 17/15 பண்டாரக்குளம் மேற்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்).

ஓவியப்போட்டி

கு.மீரா (யா/இணுவில் இந்துக் கல்லூரி), இ.விதுஷன் (யா/இணுவில் இந்துக் கல்லூரி),கு.மாதங்கி (யா/இணுவில் இந்துக்கல்லூரி)

பொது

இ.பரந்தாமன் இணுவில்,மேற்கு இணுவில்), நவரட்ணம் குபேரமூர்த்தி செல்வம் மெக்கானிக், (நரசிங்கர் கோவிலடி, இணுவில் மேற்கு), இ.அமிர்தவர்சினி மங்களவாசா (இணுவில் மேற்கு, இணுவில்)

(முற்றும்)

# இராமாவில் முருகன் கோவில் வீதியில் தொடர்மழையால் தேங்கும் வெள்ளம்

## மக்கள் விசனம் தெரிவிப்பு

(கொடிகாமம்)

கொடிகாமம் இராமாவில் பகுதியில் தற்போது பெய்துவரும் அடைமழையினால் வீதிகளில் வெள்ள நீர் தேங்கிக் காணப்படுவதாகவும் இதனூடாக பயணத்தை மேற்கொள்ளும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கிவருவதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சியாக பெய்யும் கன மழையால் இராமாவில் முருகன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள ஏ-9 வீதியின் இரு மருங்கிலும் வெள்ள நீர் தேங்கி காணப்படுவதாகவும் இதனால் பெரிய வாகனங்கள் பயணிக்கின்ற போது துவிச்சக்கர வண்டிகளில் செல்வோர் மற்றும் பாதசாரிகள் மீது வெள்ள நீர் அடித்துச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பாடசாலை மாணவர்களும் அலுவலகங்களுக்கு செல்வோரும் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்படும் அதேவேளை இவ்வீதிக்கு அருகாமையிலுள்ள வடிகான்கள் புனரமைக்கப்படாமையே வீதியில் வெள்ள நீர் தேங்கிநிற்பதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (14)



சர்வதேச மட்டத்தில் மலேசியாவில் நடைபெற்ற விவாதப்போட்டியில் 3ஆம் இடத்தினைப் பெற்றுக்கொண்ட தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணியினரைக் காணலாம். (93)

# வாரம் ஒரு காரம்

## மகிந்த - மைத்திரி மோதலில் சத்தியவான் சம்பந்தன் எந்தப்பக்கம்?...



ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பிற்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்கவை தவிர வேறொரு எதிரணி வேட்பாளர் போட்டியிடும் பட்சத்தில் அவரை நாம் ஆதரிப்போம். என அறிக்கைவிட்ட சம்பந்தன் இன்று யாரை ஆதரிப்பதென்று அமைதியாக சிந்திக்க வேண்டுமாம்.

இதன் பின்பேனும் சத்தியவான் சம்பந்தன் எந்தப்பக்கம் என்பது மக்களிற்குப் புரியவில்லையாயின் மந்தபுத்தி மாந்தர்கள் தான் நாமெல்லாம்.

உருவம் தெரியாமல் அருவுருவத்தில் சில காரியங்களைச் சாதித்துச் செல்வதில் சம்பந்தர் வித்துவம் படைத்தவர். அன்று பொது வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் ஐக்கிய தேசியக்கட்சி குழம்பிப்போய் இருக்கின்றதென்று நினைத்து, மேலும் குட்டையைக்குழப்பி ஆளும் கட்சிக்கு மறைமுகமாக ஆதரவுவழங்க வேண்டும் என்பதற்காக ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் நாம் ஆதரவளிக்க மாட்டோம் என அறிக்கைவிட்டார். அப்போது இவரிற்கு பொது வேட்பாளராக வரப்போகின்றவர் தமது குடும்பத்தின் குல விளக்கு என்பது தெரியவில்லை.

ரணில் விக்கிரம சிங்கவை ஆதரிக்க வேண்டாம் என்கின்ற பெயரில் மாற்றுத் தெரிவின் மூலம் தமிழ் மக்களை அரசுக்கு ஆதரவு வழங்குங்கள் என்று சொல்லாமல் சொல்லலாம் எனத் திட்டமிட்ட சம்பந்தரிற்கு எதிர்பாராத திருப்பு முனையொன்றை ஐ.தே.கட்சி கொடுத்துள்ளது. இனியென்ன செய்வது? என்று சிந்தித்த சம்பந்தருக்கு மீண்டும் சிறகடிக்க சரத் பொன்சேகாவின் ஜாதகம் கிடைத்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரித்ததன் விளைவினை தற்போது நாம் அனுபவித்துக் கொண்டு இருக்கின்றோமாம் என்று காய் நகர்த்தல் கச்சிதமாய் தொடங்கிவிட்டது. அவசரப்படத் தேவையில்லையாம் புத்திஜீவிகள் மற்றும் பொது மக்களிடம் புத்திமதி கேட்டறிந்து அறிக்கைவிடப் போகின்றாராம்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக வடக்குக் கிழக்கில் உள்ள மாகாண சபை உறுப்பினர்கள் பிரதேச சபை உறுப்பினர்களிடம் கருத்துக் கேட்டறிய உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

எப்படியிருக்கு எங்கப்பன் செயற்பாடு? எடுக்கப் போகும் பொது முடிவில் தனக்கு மாத்திரம் சம்பந்தமில்லை தமிழ் தரப்பினர் அனைவரும் சேர்ந்தெடுத்த முடிவு என நியாயப்படுத்த நிழற்படங்கள் இப்ப இருந்தே தயாரிக்கின்றார்.

அன்று ஜெனிவாப் பிரசாரத்தில் கூட்டமைப்பு பங்கெடுக்கவில்லை இது பற்றி முடிவெடுக்க அப்போது பொது வாக்கெடுப்பு வைத்து மக்களைக் கேட்டீர்களா?.... மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என மக்களைக் கேட்டீர்களா?.. தற்போது ரணிலை ஆதரிக்கமாட்டோம் என அறிக்கை விடும் போது மக்களைக் கேட்டீர்களா?...

தற்போது எதற்காக இந்த நாடகம்?... நீங்கள் இழைக்கும் மக்கட்துரோகத்தை மக்களின் முடிவென்ற பெயரில் அரங்கேற்றப் போகின்றீர்களா?... நல்லாவே இருக்கின்றது நாட்டிய நாடகம்.

இது ஒரு புறமிருக்க, கடந்த திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் யாரை ஆதரிப்பதென்ற பொது முடிவினை இறுதியில் தலைவர் சம்பந்தர் மாத்திரமே வெளியிடுவார். வேறு எவரும் இது தொடர்பாக கூட்டமைப்பின் சார்பில் கருத்துத் தெரிவிக்கக் கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளாராம்.

மீண்டும் ஓர் துரோகம் அரங்கேறும் அறிகுறி தென்படவில்லையா?....

எட்டிக்குப் போட்டி என்பதற்கப்பால் நிதானமாக இந்த விடயம் தொடர்பாக சிந்திக்க வேண்டும். பொறுத்த கட்டங்களில் எமது தமிழ் தலைவர்கள் செய்த துரோகங்களால தான் அன்று தொட்டு இன்று வரை தமிழர் அரசியல் ஓர் ஸ்திரமற்ற நிலையில் இருக்கின்றது.

இணக்க அரசியல் மூலம் எம் மக்களிற்கான தேவைகளைப் பூர்த்தி செய்து ஸ்திரமான தீர்வை வென்றெடுப்பதற்கும் இஷ்டமில்லை. காரணம் இடையில் சுயலாப அரசியல் சுருண்டு விடுமோ!... என்கின்ற பயம். அதேவேளை அரச எதிர்ப்பை ஆதாரப்படுத்தி அரசியல் நடாத்தும் நீங்கள் உங்களை நம்பி வாக்களித்த மக்களிற்கு நாணயமாக இருக்கின்றீர்களா?.... என்றால் அதுவும் இல்லை.

பொறுத்த நேரங்களில் அரசு போடும் பிச்சைக்கும் ஆசை... வெளிப்படையாக அரசை எதிர்த்து மக்களை மண்டியிட வைக்கவும் ஆசை... எங்கு போய் முடியப் போகின்றதோ தெரியாது உங்களை நம்பிய தமிழர் வாழ்வு.



## பிரதி அமைச்சர் காதருக்கு தொலைபேசி மூலம் அச்சுறுத்தல்

சுற்றாடல்துறை பிரதியமைச்சர் அப்துல் காதர், தமக்கு இனந்தெரியாத ஒருவர் தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுத்ததாக கூறி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இந்த தொலைபேசி அழைப்பு மேற்கொள்ளப்பட்டதாக அவர் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கொள்ளுப்பிட்டியில் தான் தங்கியிருந்த வீட்டுக்கே இந்த அழைப்பு வந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் குறித்த அழைப்பு மேற்கொள்ளப்பட்ட தொலைபேசியின் இலக்கங்களை சேவை வழங்குநர்களிடம் இருந்து பெறுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## பலஸ்தீன ஒருமைப்பாடு ஐ.நா.தினம் கொழும்பில்

சர்வதேச பலஸ்தீன ஒருமைப்பாட்டுக்கான ஐக்கிய நாடுகள் தினம் இன்று சனிக்கிழமை கொழும்பில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பி.ப. 400 மணிக்கு கொழும்பு 7, சுதந்திர சதுக்க வாசிகசாலை சேவை கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தில் இலங்கை பலஸ்தீன ஒருமைப்பாட்டுக் குழுவின் இணைத் தலைவர்களான சிரேஷ்ட அமைச்சர் அதாவுட செனவிரட்ன மற்றும் முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோர் தலைமை தாங்கவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது

## மன்னாரில் தொடரும் மழையால் கிராமங்களுக்குள் புகுந்தது கடல்

### 5658 பேர் இடம்பெயர்வு



மன்னார் மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக, 1,428 குடும்பங்களைச் சேர்ந்த 5,658 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் இடம்பெயர்ந்துள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் என்.ஏ.சி.முஹமட் றியாஸ் தெரிவித்தார்.

மன்னார் பிரிதேச செயலாளர் பிரிவில் 758 குடும்பங்களைச சேர்ந்த 2903 பேரும், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேரும், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 658 குடும்பங்களைச் சேர்ந்த 2,714 பேரும் இவ்வாறு பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் என்.ஏ.சி.முஹமட் றியாஸ் தெரிவித்தார்.

இந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 5 மணியளவில் கடல்நீர் பல கிரா மங்களுக்குள் உட்சென்றமையினால் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். உப்புக்குளம் தெற்கு, கோந்தைப்பிட்டி கிராமத்தினுள் கடல்நீர் புகுந்துள்ளமையினால் அக்கிராமத்தில் வசிக்கும் 45 குடும்பங்களைச் சேர்ந்த 150 பேர் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

இக்கிராமம் கடல் நீரினால் மூழ்கியுள்ளது. இக்கிராம மக்கள் உப்புக்குளம், கோந்தைப் பிட்டி பள்ளிவாசலில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதேவேளை பள்ளிமுனை 41 வீட்டுத்திட்டம், பள்ளிமுனை 49 வீட்டுத்திட்டம், பள்ளிமுனை 50 வீட்டுத்திட்டம் ஆகிய கிராமங்களிலும் கடல் நீர் புகுந்துள்ளமையினால் 140 குடும்பங்களைச் சேர்ந்த 600 பேர் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ளனர். இந்த மக்கள் பள்ளிமுனையில் உள்ள பொது மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.


இதேவேளை, சௌத்பார் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் கடல்நீர் புகுந்துள்ளமையினால் 105 குடும்பங்களைச் சேர்ந்த 515 பேர் இடம்பெயர்ந்து சௌத்பார் பொது மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு உலர் உணவு பொருட்களை மன்னார் பிரதேச செயலகம் வழங்கி வருகின்றது. அதேவேளை ஜீவபுரம், கிருஸ்ணபுரம், சாந்திபுரம் ஆகிய கிராம மக்களும் இடம் பெயர்ந்துள்ளனர். இதேவேளை தலைமன்னார் பியர், எருக்கலம் பிட்டி மேற்கு கிராம மக்களின் இயல்பு நிலையும் பாதிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களை மன்னார் பிரதேச செயலாளர் கேவசந்த குமார், வடமாகாண சபை உறுப்பினர் ஞானசீலன் குணசீலன், மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜநத றொட்ரிகோ, மன்னார் நகர சபை தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், மன்னார் நகர சபை உறுப்பினர்களான இ.குமரேஸ், மெரினஸ் பெரேரா, என்.நகுசீன் ஆகியோர நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இதேவேளை மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு கிராமத்தில 120 குடும்பங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் இடம் பெயர்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## அடையாளம் காணப்படாதுள்ள தேசிய அருங்காட்சியக திருடர்கள்



தேசிய அருங்காட்சியகத்தினுள் திருடர்கள் நுழைந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எவரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்..

அருங்காட்சியகத்தின் புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டிருந்த 74 பேரின் விரல் அடையாளங்கள் பகுப்பாய்விற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்த திருட்டு சம்பவம் தொடர்பில் அருங்காட்சியகத்தினுள் நான்கு கைவிரல் அடையாளங்களும், மற்றுமொரு தடயமும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

பகுப்பாய்விற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள விரல் அடையாளங்களுடன் இந்த விரல் அடையாளங்கள் பொருந்தாவிடின், அருங்காட்சியகத்தின் ஏனைய தரப்பினரின் கைவிரல் அடையாளங்களை பெற்றுக் கொள்ள நேரிடும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.


கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினரும், கறுவாத் தோட்ட பொலிஸாரும் கூட்டாக இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## இலவச விசா

இந்திய கேரளா மாநிலத்திலுள்ள சபரிமலை ஐயப்பன் ஆலயத்திற்கு யாத்திரை மேற்கொள்ளும் ஐயப்ப பக்தர்கள் விசா பெற்றுக்கொள்வதற்கான இலகு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது அந்த வகையில் பக்தர்கள் யாழ் மாவட்ட செயலகத்திலுள்ள இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று யாழ் இந்திய துணைத் தூதரகத்தினூடாக இலவச விசாவிற்கு விண்ணப்பிக்க முடியும் என யாழ். மாவட்ட அரசாங்க அதி[illegible] தெரிவித்துள்ளார்.

## மன்னாரிலுள்ள நீர்த்தாங்கியை அகற்றும் நடவடிக்கை ஆரம்பம்

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள சுமார் 60 வருடங்கள் ,பழைமை வாய்ந்த சிதைவடைந்த நிலையில் காணப்படும் அதியுயர் நீர்த்தாங்கியை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



குறித்த நீர்த்தாங்கியை அகற்றுவது தொடர்பில் கடந்த 5 ஆம் திகதி புதன்கிழமை மன்னார் நகர சபையில் விசேட கலந்துரையாடல் ஒன்று நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், நகர சபை உறுப்பினர் மெரினஸ் பெரேரா, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை அதிகாரிகள், இலங்கை மின்சார சபை அதிகாரிகள், அரச, தனியார் போக்குவரத்துச் சங்க அதிகாரிகள், வீதி போக்குவரத்துப்பிரிவு பொலிஸார் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த நீர்த்தாங்கியை அகற்றுவதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை மன்னார் நகர சபையுடன் இணைந்து ஒப்பந்தகாரர்களை நியமித்து குறித்த நீர்த்தாங்கியை அகற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த பணி ஒப்பந்தகாரர்களிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் கடந்த திங்கட்கிழமை குறித்த பணிகள் ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த பணி சுமார் ஒரு மாத காலத்தினுள் முடிவடையவுள்ளது. தற்போது மழை பெய்து வருகின்றமையினால் நீர்த்தாங்கி உடைக்கும் பணிகள் .மந்த கதியில் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டிலுள்ள இலங்கையர் வாக்களிக்க முறையான திட்டம்

### தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

நாடுகடந்து பணிபுரியும் பல இலட்சம் இலங்கையர்களை வாககளிக்கச் செய்யும் முறையான திட்டமொன்று அரசியலமைப்பிற்கிணங்க நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அவசியமென தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தேர்தல்கள் திணைக்களம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவித்த அவர், அரசியலமைப்பிற்கிணங்க முறையான வேலைத் திட்டமொன்று இதற்கு அவசியமெனவும் கூறியுள்ளார்.

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர் முறையாக வாக்களிப்பது தொடர்பில் நாம் கட்சிகளினதும் சிவில் அமைப்புகளினதும் ஆலோசனைகளைக் கோரியிருந்தோம்.

எவரிடமிருந்தும் பதில் வரவில்லை. அரசியலமைப்பின் மூலம் இதற்கொரு முறையான திட்டம் முன்வைக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். தேர்தல் செயலகத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர மாநாட்டின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே தேர்தல்கள் ஆணையாளர் இவ்வாறு தெரிவித்தார்.

## இன்று நடைபெறாது

பிரிட்டிஷ் கவுன்சின் ஆதரவுடன் யாழ்ப்பாண பொது நூலகத்தில் இன்று நடைபெறவிருந்த சிறுவர்களுக்கான கதைசொல்லும் நிகழ்வு நடைபெறமாட்டாதெனவும், இந்த நிகழ்வு எதிர்வரும் டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி நடைபெறுமெனவும், ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# க.பொ.த(சா/த) மாணவர்களுக்கான முன்னோடிப்பரீட்சை
# G.C.E. (O/L) Examination model Paper

**வரலாறு - I** **ஆசிரியர்:-மதிவதனன்**

1) வரலாற்றுக்கும் புவியியலுக்கும் இடையிலான தொடர்பினை வெளிப்படுத்தும் கூற்றாவது,
   1) காலத்திற்குக் காலம் நிலநடுக்கம் ஏற்படல்.
   2) சூறாவளிக்காற்றும் மழையும் கிடைத்தல்.
   3) சர்வசன வாக்குரிமையின் மூலம் நாட்டின் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தல்.
   4) மலையகம் போர்த்துக்கேயரதும் ஒல்லாந்தரதும் ஆக்கிரமிப்புக்கு உட்படாமை.

2) இலங்கையின் வரலாற்றினை அறிய உதவும் செவிவழி இலக்கிய மூலாதாரமாவது,
   1) நாட்டார் பாடல்கள் 2) வம்சக் கதைகள்
   3) சிகிரியாக்கவிதைகள் 4) மகாகாவியம்

3) பதுத்தளைத்தூண் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம்
   1) முடிசூட்டு விழா 2) சமகால வர்த்தகம்
   3) ஆராமை நிர்வாகம் 4) பிராமணரது கல்வி

4) வேதங்களில் குறிப்பிடப்படாத விடயமாவது
   1) கடவுளரின் திருவுருவங்கள் பற்றிய விடயம்
   2) விவசாயத்துடன் இணைந்த வாழ்க்கை முறை பற்றியது
   3) இருக்கு யசுர், சாம, அதர்வம் பற்றியது.
   4) பௌத்த, தர்ம வேலைகள் நடைபெறும் முறைகள்.

5) பதினாறு பெரும் ஆரியக்குடியேற்றம் அல்லாதது
   1) மகதம் 2) டில்லி 3) கோசலை 4) அவந்தி

6) கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் அனைத்துடனும் தொடர்புடைய மன்னன்
   A - குப்த பேரரசின் நிர்வாகி
   B - கவிஞன்
   C - சங்கீத வித்துவான்
   D - நீலராஜன், விஸ்னு எனும் மன்னர்களை வெற்றி கொண்டவன்.
   1) சந்திரகுப்தன் 2) 11 ஆம் சந்திரகுப்தன்
   3) சமுத்திரகுப்தன் 4) குமாரகுப்தன்

7) வேத காலத்தில் இலங்கையின் மனித வரலாற்றில் மனித வாழ்க்கைக் குட்படாத இடம்
   1) தம்புள்ளை குகை 2) பட்டதொம்பே குகை
   3) கிதுள்கல பெலிலேன குகை 4) அத்னகொட அலுலேன

8) மன்னரது முறையான முடிசூட்டு விழாவிற்கு அவசியமான பொருட்கள் புராதன காலத்தில் அழைக்கப்பட்ட முறை
   1) அரசவம்ச பொருட்கள் 2) அரச பரிவட்டப் பொருட்கள்
   3) அரச பாவனைப் பொருட்கள் 4) திவ்ய ஆபரணங்கள்

9) இலகம்பகர்ண வம்சத்தின் முதல் மன்னன்
   1) வசபன் 2) வலகம்பா
   3) துட்டகைமுனு 4) கவன்தீசன்

10) அனுராதபுர யுகத்தின் முதல் மன்னனும் இறுதி மன்னனும்
   1) பண்டுகாபயன் - V ஆம் மகிந்தன்
   2) விஜயன் - IV ஆம் மகிந்தன்
   3) பண்டுகாபயன் - IV ஆம் சேனன்
   4) பண்டுகாபயன் - I ஆம் விஜயபாகு

11) மகாசேன மன்னனை சிறப்பாக அழைக்கும் பெயர்
   1) மின்னேரித் தெய்வம் 2) மினிப்பே தெய்வம்
   3) காவல் தெய்வம் 4) சமன் தெய்வம்

12) அனுராதபுர இராசதானியின் பிரதேசங்கள் பிரிக்கப்பட்டிருந்த முறை
   1) ராசரட்டை, தக்கிணதேசம், ரோகணதேசம், மலயரட்டை
   2) ருகுணு, மாயரட்டை, பிகிரட்டை
   3) உத்தரபஸ்ஸ, தக்கினபஸ்ஸ, பிராசினபஸ்ஸ, பஸ்சிமபஸ்ஸ
   4) வடக்கு, கிழக்கு, மத்திய

13) அனுராதபுர காலத்தில் செனவிரத்ன என அழைக்கப்பட்டவர்
   1) யுவராஜன் 2) பிரதம அமைச்சர்
   3) புரோகிதன் 4) சேனாதிபதி

14) குளத்தின் அணைக்கட்டின் உட்புறத்தில் கருங்கற்களை நிரப்பி அமைக்கப்படும் அமைப்பு என்ன பெயரால் அழைக்கப்படும்?
   1) சுருங்கை 2) அலைதாங்கி
   3) கலிங்கற்தொட்டி 4) கலிங்கல்

15) தம்பதெனிய இராசதானி காலத்தில் புனித தந்ததாதுவையும் பாத்திர தாதுவையும் பிரதிட்டை செய்த இடம்
   1) கண்டியின் செங்கடகல மலைப்பகுதி
   2) கேகாலை பெலிலேன பகுதி
   3) பொலனறுவை கல்விகாரை
   4) களனி விகாரை

16) திரச, மயூர சந்தேச காவியங்கள் எழுதப்பட்ட காலம்
   1) தம்பதெனிய காலம் 2) யாப்பகூவ காலம்
   3) குருநாகல் காலம் 4) கம்பளை யுகம்

17) தம்பதெனிய யுகத்தில் எழுதப்பட்ட காவியங்கள்
   1) திரச சந்தேச, மயூர சந்தேச, அன்தகலுவங்ச.
   2) கிராசந்தேச, செலலிகினி சந்தேச, லொவெடசங்கிராவ.
   3) கவிசிலுமின, சந்தரமரத்னாவலிய, விசுத்திமார்க்கசன்னய.
   4) கோகிலசந்தேச, ஹங்ச சந்தேச, குத்திய காவியம்

18 - 20 வரையான வினாக்களுக்கு படத்தினை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்க.



18) படத்தில் 1, 2, 3, 4 எனும் இலக்கங்களால் காட்டப்பட்டுள்ள விடயங்கள்
   1) கோகர்ன, ஜம்புகோளப்பட்டினம், கொடவாய, களனி.
   2) கோகர்ணன், ஜம்புகோளப்பட்டினம், களனி, மகாதித்த.
   3) தேவநகரம், கொடவாய, களனி, கோகர்ண.
   4) மகாதித்த, காலி, கோகர்ண, தேவநகரம்.

19) பத்தகச்சானா வந்திறங்கிய துறைமுகத்தை குறிக்கும் இலக்கம்
   1) 2 2) 1 3) 4 4) 5

20) மல்வத்து ஓயாவைக் குறிக்கும் எழுத்து
   1) A 2) B 3) C 4) D

21) பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சிக்கு காரணமான ஆக்கிரமிப்பாளன்
   1) ராஜேந்திரசோழன் 2) ராஜராஜ சோழன்
   3) கலிங்கமாகன் 4) சென்ஹோ

22) இலங்கைக்கு வருகை தந்த முதல் மேலைத்தேயத்தவர்
   1) ஒல்லாந்தர் 2) ஆங்கிலேயர்
   3) போர்த்துக்கேயர் 4) அராபியர்

23) பிரான்சியப் புரட்சி நடைபெற்ற ஆண்டு
   1) 1789 2) 1932 3) 1800 4) 1760

24) ஜேர்மனியை ஒன்றுபடுத்திய ஆண்டு
   1) கி.பி. 1805 2) கிபி. 1871
   3) கி.பி.1870 4) கி.பி1873

25) பிரான்சியப் புரட்சியுடன் தொடர்புடைய எண்ணக்கருவை வெளியிட்டவர்,
   1) ரூசோ 2) டோல்ஸ்டோய்
   3) கரிபால்டி 4) ஜோசப் மசினி

26) உலகயுத்தத்தின் முடிவில் உலகில் பலம் வாய்ந்த நாடுகள் இரண்டு
   1) இங்கிலாந்து, பிரான்ஸ்
   2) ஜப்பான், ஜேர்மனி
   3) ஒஸ்திரியா, ஹங்கேரி
   4) ஐக்கிய அமெரிக்க குடியரசு, சோவியத் ரஸ்யா

27) தலதா மாளிகைக்குரிய புனித தந்ததாதுவை இலங்கைக்கு கொண்டு வந்து பிரதிஸ்டை செய்த போதிருந்த ஆட்சியாளன் யார்?
   1) மகாசேனன்
   2) கித்சிரிமேவன்
   3) வலகம்பா
   4) தாதுசேனன்

## பகுதி - II

1) பின்வருவனவற்றோடு தொடர்புடையவர்களை புள்ளிக்கோட்டில் எழுதுக
   அ. இலங்கை தேசிய காங்கிரஸிலிருந்து விலகி தமிழ் மகாசபையை நிறுவியமை (..........................................)
   ஆ. பௌத்த கொடியின் தோற்றம் (..........................................)
   இ. போயா விடுமுறை (..........................................)
   ஈ. ஞானதீபம் சஞ்சிகை வெளியிட்டமை (..........................................)

2) பின்வருவனவற்றுக்கான இந்திய தேசிய காங்கிரஸ் மிதவாதத் தலைவர்களின் பெயரினைக் குறிப்பிடுக
   1. இந்தியாவின் முதுபெருங்கிழவர் (..........................................)
   2. காந்தி என் அரசியல் குரு என்றவர். (..........................................)
   3. வங்காளம் பத்திரிகையின் ஆசிரியர் (..........................................)
   4. உலக அபிமானி என அழைக்கப்பட்டவர் (..........................................)

3) 1. A - கோல்புறூக் அரசியல் யாப்பு
   B - இலங்கை பிரித்தானியரின் குடியேற்ற நாடாகியமை
   C - 2ஆவது சோல்பரி குடியரசு யாப்பு, என்பன இலங்கையில் தாக்கம் செலுத்திய ஆண்டுகள் எவை என A.B.C ஒழுங்கில் தருக?

   2. 1818 இல் நடைபெற்ற கலகத்துக்கு ஏதுவாக இருந்த காரணிகள் நான்கை குறிப்பிடுக?

   3. நிர்வாகம் தொடர்பாக 1833 இல் முன்வைக்கப்பட்ட விதந்துரைகள் இரண்டைக் கூறி அவற்றினை விளக்குக.

   4. ஆங்கிலேயர் காலத்திற்கு பரவிய பெருந்தோட்டப்பயிர்ச் செய்கை காரணமாக மத்திய மலைப்பிரதேசங்களில் ஏற்பட்ட 2 பிரச்சினைகளைத் தெளிவுபடுத்துக?

4) 1. பிரித்தானிய ஆட்சியின் போது இலங்கையின் மலைநாட்டுப் பகுதிகளில் அறிமுகப்படுத்திய பெருந்தோட்டப் பயிர்கள் இரண்டைப் பெயரிடுக?

   2. பெருந்தோட்டப்பயிர் செய்கையின் முன்னேற்றத்திற்கு வழிகோலிய கோல்புறூக் சீர்திருத்தத்தின் இரண்டு சிபார்சுகளை குறிப்பிடுக?

   3. பிரித்தானியர் ஆட்சியின் போது விருத்தி செய்யப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் இலங்கையின் அபிவிருத்திக்கு எவ்வளவுக்கு பங்களிப்புச் செய்துள்ளதென்பதை இரண்டு உதாரணங்கள் கொண்டு விளக்குக?

4. இலவசக் கல்வியின் தந்தை எனக்கருதப்படும் (W.W.கன்னங்கரா அவர்களின் சில ஆலோசனைகள் தற்கால இலங்கைக் கல்வி முறைமையில் இன்னும் செயற்படுத்தப்படுகின்றன நீர் அனுபவிக்கும் கல்வி வாய்ப்புக்கள் இரண்டினூடாக மேற்கூறிய கூற்றை நியாயப்படுத்துக

5) 1. ஒரு நாட்டில் ஜனநாயகம் வெற்றியளிக்க வேண்டுமாயின் இருக்க வேண்டிய விடயங்கள் 2 குறிப்பிடுக?

2. ஜனநாயகம் பற்றி ஆபிரகாம் லிங்கன் கூறிய கூற்று சரியானதா/ பிழையானதா? உமது விடையினை நியாயப்படுத்துக?

3. 1978 ஆம் ஆண்டு 2 ஆவது அரசியல் குடியரசு யாப்பின் குறைபாட்டிற்கு காரணம் சோல்பரி யாப்பிலிருந்த அரசியல் விடயங்களை உள்வாங்கியதே காரணம் ஆகும். இதனை நீர் ஏற்றுக்கொள்வீரா? காரணம் தருக?

6) .அ கீழே 1 இன் கீழ் காட்டப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப்படத்திலும் 2 இன் கீழ் காட்டப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள உலகப்படத்திலும் குறித்து பெயரிடுக.

1. பீதுருதாலகாலமலை, மகாவலிகங்கை, நயினாதீவு, திருகோணமலை, வீரவில, சிங்கராஜவனம், சிகிரியா, கோட்டன், சமவெளி, கம்பளை, மட்டக்களப்பு

2. அவுஸ்ரேலியா, டோக்கியோ, லக்ஸ்ம்பெர்க், இத்தாலி, இஸ்ரேல், கொனஸ்தாந்து, நோபிள், சான்பிரான்ஸ்ஸிக்கோ

ஆ கீழே (A), (B), (C), (D) எனத்தரப்பட்டுள்ள வரலாற்று பிரசித்தி பெற்ற நிகழ்ச்சிகளுடன் தொடர்புபட்டவர்களை குறிகளினுள்ளே தரப்பட்டுள்ள பட்டியலிலிருந்து தெரிந்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக?

A - தலதா மாளிகையில் உள்ள புனிததந்ததாவுக்கு பூசை செய்யும் முறையைப்பற்றிய நூலான தலதாசிறித என்ற நூலை எழுதுவித்தவன்

B - அனுராதபுரகாலத்தில் நிதிநிலைமைகள் பற்றிய கணக்குகளை தயாரிக்கப்படும் நிதித்துறைக்கு பொறுப்பானவரும்

C - இந்தியாவில் கலிங்கயுத்தத்தின் பின்னர் இனி போர் என்பதே வேண்டாம் என கூறிய மொரிய அரசன்

D -இலங்கையில் சோல்பரி யாப்பு வரையப்பட்டுள்ளது

(S.W.R.D) பண்டாரநாயக்கா, 1ஆம் பராக்கிரமபாகு, பண்டகரிக, புரோகிதர், சேர் ஜவர் ஜெனிஸ், 4ஆம் பராக்கிரமபாகு, அசோகன், சந்திரகுப்தன், வில்லியம்மனிங்)

( ........................................................................)
(.........................................................................)
(.........................................................................)
(.........................................................................)

கீழே (A), (B), (C), (D) எனக் குறிப்பிடப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக

A - மிகிந்தலையில் உள்ள அம்பஸ்தல விகாரை யாரால் கட்டப்பட்டுள்ளது ( ...........................)

B - புத்தர் முதன் முதலில் விஜயம் செய்த இடம் (.......................)

C - 2ஆம் உலகமகாயுத்தத்தின் போது தாக்குதலுக்கு உள்ளான பேர்ள் துறைமுகம் அமைந்துள்ள சமுத்திரம் (...........................)

D - 1505 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் முதன்முதலில் கரையிறங்கிய இலங்கைத்துறைமுகம் (...........................)

7) (I) A - தாதுசேனனின் நிர்மாணம்
B - 1ஆம் அக்போ மன்னனின் நிர்மாணம்
C - பண்டுகாபயனின் நிர்மாணம் ஆகியவற்றுடன் தொடர்புடைய நீர்ப்பாசன படைப்பினை அடைப்பினுள் இருந்து தெரிக
(ஐயகங்கை, பராக்கிரமசமுத்திரம், ஆட்டம்பொகுன, பாவக்குளம், மின்னேரியா)

(II) இராஜரட்டை பிரதேசத்தில் ஆரியர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் எவையேனும் நான்கினை அடையாளப்படுத்துக

(III) உலகின் கலாசார சொத்தாக சிகிரியா பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் சிகிரியாவின் தொழில்நுட்ப சிறப்பினை எவையேனும் இருதலைப்பின் ஊடாக விளக்குக

(IV) தேவநம்பியதீச மன்னன் காலமானது இலங்கை கலாசாரத்தினை ஒரு திருப்பு முனையான காலப்பகுதி என்று கூறுமளவுக்கு காணப்பட்டது இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மூன்று விடயங்கள் ஊடாக சுருக்கமாக விளக்குக

8 ) I A - வன்னி அரசன்
B - கலிகாலவ சாகித்ய சர்வக்ஞ பண்டித
C - செம்பகப் பெருமாள் என்ற சிறப்புப் பெயரினை கொண்டு அழைக்கப்பட்ட மன்னர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்து A,B,C ஒழுங்கில் விடை தருக?
(1ஆம் விஜயபாகு, சப்புமல் குமாரய, 3ஆம் விஜயபாகு, 2ஆம் பராக்கிரமாபாகு, அக்கபோ)

(II) கப்பளையை புராதன காலத்தில் தெரிவு செய்தமைக்கு உதவிய காரணிகள் எவையேனும் நான்கு குறிப்பிடுக?

(III) தம்பதெனிய யுகத்தில் 2ஆம் பராக்கிரமபாகு மன்னன் விசேட இடத்தினை பெற்றுன்னள என வரலாறுகள் கூறுகின்றன இதற்கான காரணத்தை இரு விடயங்கள் ஊடாக சுருக்கமாக விளக்குக

(IV) கோட்டை இராச்சிய காலப்பகுதியில் 6ஆம் பராக்கிரமபாகு இலங்கை வரலாற்றில் இறுதியான செழிப்புமிக்க பொற்காலமாக இவன் ஆட்சி விளங்கியது இதனை அரசியல் இலக்கியம், சமயம், என்னும் துறைகளுடன் மதிப்பிடுக

09) I. ஆங்கிலேயர்கள் இலங்கையில் அபிவிருத்தி செய்த எவையேனும் 3 துறைகளினை பெயரிடுக

II. டொனமூர் சீர்திருத்தத்தின் விசேட பண்புகள் எவையேனும் நான்கிளை குறிப்பிடுக

III. கோல்புறூக் சீர்திருத்தத்தினால் இலங்கையில் கிராமிய பொருளாதாரம் மற்றும் நீதித்துறைகள் தொடர்பாக மக்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியமைக்கான காரணங்களை இவ்விரு தலைப்பின் ஊடாக சுருக்கமாக விளக்குக

10) I. இலங்கையில் நீர்ப்பாசன அபிவிருத்திக்கு வித்திட்ட ஆங்கில ஆள்பதிகள் மூவரை கீழுள்ள அடைப்புக்குள் இருந்து தெரிந்து எழுதுக
(பிரக்றித் நோர்த், எட்வட் பாண்ஸ், கேர்குலிஸ்ரொபின்சன், டொரிங்டன், வில்லியம் கிரகரி, வில்மட் கோட்டன்)

II. 1818 ஆம் ஆண்டு கண்டிய போராட்டத்தின் பின் இலங்கையில் தமது பலத்தினை உறுதி செய்து கொள்ள ஆங்கிலேயரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எவையேனும் நான்கிளை குறிப்பிடுக

III. 1848 ஆம் ஆண்டு பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் தோன்றிய கலகமானது ஏன் விவசாயிகள் மத்தியிலிருந்து தோன்றியது என எவையேனும் இரு காரணிகளின் அடிப்படையில் சுருக்கமாக விளக்குக

IV. இலங்கையில் பெருந்தோட்ட பயிர்ச்செய்கை அறிமுகத்தால் சமூகரீதியில் ஏற்பட்ட பிரச்சினைகள் எவையேனும் மூன்றினை அடையாளப்படுத்தி அப்பிரச்சனைகள் பெருந்தோட்டப்பயிர்ச் செய்கை அறிமுகத்தால் எவ்வாறு ஏற்பட்டது என சுருக்கமாக விளக்குக

11) I. இந்திய தேசிய காங்கிரஸில் மிதவாதகொள்கை தலைவர்கள் இருவரையும் தீவிரவாத கொள்ளைத் தலைவர் ஒருவரையும் அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்க
(தடாபாய் ரபபோஜி, லாலா லஜ்பதிராய், கோபால கிருஸ்ண கோகிலே, சுரேந்திரநாத்பாணர்ஜி, முகமது அலிஜின்னா)


II பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் உருவான தேசிய காங்கிரஜின் எதிர்பார்ப்புகள் எவையேனும் நான்கு குறிப்பிடுக

III. யப்பான், டொகுகிவா சோகுன் ஆட்சிக்காலத்தில் தான் அபிவிருத்திப் பாதையில் சென்றது என்பதற்கான இரு ஆதார காரணங்களை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக

IV 1857 ஆம் ஆண்டு இந்திய சிப்பாய் கலகமானது இந்திய சமுதாயத்தினை தேசிய உணர்வு மிக்க ஒரு நிலைக்கு கொண்டு சென்றது என்பதை எவையேனும் மூன்று விடயங்களின் அடிப்படையில் சுருக்கமாக விளக்குக

---

**23.11.2014 ஞாயிற்றுக்கிழமை**

(01).1.சிகிரியா 2. சிங்கம் 3. சிங்கம், சிங்கம் படுத்திருப்பதைபோல 4.ஏறுகின்றோம் 5. தூரத்திலே 6. அகழி (02).புத்தகங்கள், நல்வழி 2.கர்ணன், கும்பகர்ணன் (03). 1.நாட்டார்பாடல் 2. பிரஜைகள் (04).1.கற்றை2. பிடி (05).செய்திகளின் தலைப்ப கவர்ச்சியாக அமைய வேண்டும் 2. நன்றியை பயன்தூக்கி வாழ்தல் நனி இனிது (06).அரி, அறி . கரி, கறி 3.வாலை 4. வாளை (07).1.எனக்கு வீட்டுக்கு போக வேண்டும் 2.வாருங்கள் தேனீர் பருகுங்கள் / குடியுங்கள் (08). 1. பொதூ கன்ன 2. முதர்ர கன்னே கொஹந்தே? (09).1.தயவுசெய்து எனது புத்தகத்தை கொண்டு வருவீர்களா? 2. நான் இலங்கை தேசத்தை நேசிக்கின்றேன் (10). 1. Where are you going 2. This is my book (11).1.2 2.3 3.4 4.1 5.5 (12).1.ஐரோப்பா 2. அம்பலாங்கொடை 3. திக்கோழி (13)1.3 2.1 3.1 4.2 5.2 6:4 7.1 8.4 9.210.3 11.4 12.4 13.2 14.4 15.2 (14) 1.8வயது 2.10100 3.(1)5 (2)3 4,18:30 5.19cm 6  7.108 8.$\frac{50}{100}$ 9.67kg 200g 10.(1) 20 11 712.04 13,75km 14.2 15.3 16.2

---

**24.11.2014 திங்கட்கிழமை**

(01).1.3 2.3 3.2 4.3 5.3 6.1 7.2 8.1 9.3 10.1 11. 3 12.3 13.2 14.2 15.2 16.2 17.2 18.3 19.1 20.3 21.2 22.2 23.1 24.2 25.1 (02). 1. புளி 2.ஆமணக்கு 3.மரவள்ளி 4. வேம்பு (03).05. காகம் 06. சேவல் 07.சரி 08. சரி 09. சரி 10. பிழை 11.சரி 12.பிழை 13.பிழை 14.பிழை (05). 1.கலப்பை 2.கோழி 3. தேசியதுக்கதினம் 4.சிவப்பு 5.வெண்புறா 60. திருகோணமலை 7.புகையிரதம் 8. நிலத்தில்புரண்டு உருளுதல் 9.முஸ்லிம்கள் 10. யாழ்ப்பாணம் 11. உணவு, பானம் மருந்து கிடைத்தல் 12.1 13.2 14.3 15.3 16.1 17.1 18.3 19.1 20.3 (06).01.ஆந்தை 02.சிங்கம் 03.வண்ணத்துப்பூச்சி 04. யானை (07).1.வெண்கட்டி 2. அரிக்கச்சட்டி 3. ஒட்டகம் 4. தாமரை 5. பாம்பு 5. தென்னை (08). 1. இலை 2. பூ 3. தண்டு 4. வேர் (09).1.வாளேந்தியசிங்கம் 2.1948 3. இந்துக்கள் 4. ஆந்தை 5.5 6. கண்டி 7. கோடரி 8. வங்கி 9. திருவள்ளுவர் 10.அல்குர்ஆன்

---

**நேற்று வெளியாகிய வினாக்களின் விடைகள்**

(1).2 (2).2 (3).2 (4).3 (5).1 (6).1 (7).3 (8).3 (9).1 (10).3 (11).3 (12).3 (13).2 (14).3 (15).2 (16).3 (17).3 (18).2 (19).2 (20).3 (21).3 22).2 (23).1 (24).3 (25).1 (26).2 (27).1 (28).2 (29).2 (30).2 (31).3 (32).2 (33).3 (34).2 (35).2 (36).1 37).3 (38).3 (39).1 (40). 1

## சமூகசேவைகள் திணைக்களத்தினால் ஊனமுற்றோருக்கு தொழிற் பயிற்சி

சமூக சேவைகள் அமைச்சின் கீழ் செயற்பட்டு வரும் சமூக சேவைகள் திணைக்களமானது ஊனமுற்றோருக்கு தொழில்பயிற்சிகளை வழங்குவதற்காக சீதுவ, கெட்டவளை, தெலம்புபாய, வத்தேகம, அமுணுகும்புற, ஆகிய இடங்களில் பயற்சி நிலையங்களை அமைத்துள்ளது.

இந்தப் பயிற்சி நிலையங்களின் மூலமாக ஊனமுற்றோர் தமது வாழ்வாதாரத்திற்கு தேவையான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்த ஆண்டில் ஊனமுற்ற இளைஞர்கள் 663 பேர் பயிற்சிகளை பெற்றுள்ளனர்.

இதில் தொழில்சார் பயிற்சிகளை பெற்ற 97 பேருக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

61 பேருக்கு செயற்கைக் கால்கள் வழங்கப்பட்டுள்ளன. சமூகசேவைகள் புரிகின்ற நிறுவனங்கள் 06 இற்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. பயிற்சி முடித்த 82 பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

செவிப்புலனற்ற 229 பேருக்கு விசேட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இவற்றுக்காக 16.7772 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டதாக சமூக சேவைகள் அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (99)

## தொடர்ச்சியான மழை

# கரவெட்டி இராஜகிராமத்தில் 25 குடும்பங்கள் இடப்பெயர்வு



(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இராஜகிராமம் கிராம அலுவலர் பிரிவில் 25 குடும்பங்கள் தொடர்ச்சியான மழையினால் இடம்பெயர்ந்துள்ளதாக கிராம அலுவலரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கிராம அலுவலர் பிரிவில் 82 குடும்பங்கள் வசித்து வருகின்ற நிலையில் 82 குடும்பங்களின் வீடுகளும், வெள்ளத்தால் சேதமடைந்துள்ளதுடன் வெள்ளநீர் உட்புகுந்துள்ளதாகவும் இதில் 25 குடும்பங்கள் இடம்பெயர்ந்து சனசமூக நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.குடாநாட்டில் பரவலாக கனமழை பெய்துவரும் நிலையில் இக்கிராமத்தில் குடியிருப்புக்களுக்குள் வெள்ளநீர் தேங்கிக் காணப்படுவதால் மக்கள் தங்க முடியாது இடம்பெயர்ந்துள்ளதாகவும். இவர்கள் சனசமூக நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள நிலையில் சமைத்த உணவு வழங்கப்படுவதாக கிராம அலுவலர் தெரிவித்தார்.

தொடர்மழை மற்றும் கடும் குளிரினால் குழந்தைகளும் முதியோரும் உடல் உபாதையை எதிர்நோக்கியுள்ளதாகவும் தொடர்ந்து மழை நீடிக்குமாயின் தொற்று நோய்களுக்கு ஆளாக நேரிடும் அபாயம் ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேள்ளை, நெல்லியடிப் பிரதேசத்தில் பல உள்ளக வீதிகளிலும் வெள்ளநீர் தேங்கிக் காணப்படுவதாகவும் இதனால் போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (18)

## சிவ ஆராதனை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இனமத நல்லிணக்கம் ஏற்படுவதற்காக சிவ ஆராதனை நிகழ்வு எதிர்வரும் 3 ஆம் திகதி சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ .சபா.வாசுதேவக்குருக்களின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வு காலை 8 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 4.30 மணிவரை நடைபெறவுள்ளதுடன், இதில திவ்விய அபிஷேக நிகழ்வு, ஓம் நமசிவாய மந்திர உச்சாடனம், சிவலிங்கஜோதி தரிசனம் (1008 கற்பூர தீபாராதனை ஏற்றுதல்) என்பன இடம்பெறவுள்ளன.

இதில் அடியார்களை கலந்து கொள்ளுமாறு ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர்.

## பல்கலை மாணவர்களுக்கு கடன் உதவி வழங்கல்

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையினால் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மேலும் ஒருதொகுதி பல்கலைக் கழக மாணவர்களுக்கான கடன் உதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் கல்வி வளர்ச்சி அறக்கட்டளை வளாகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் திருகோணமலை மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.துரைரட்ணசிங்கம், கிழக்கு மாகாணத் தில் இந்த கடனுதவி திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர்களான இ.கலியுகவரதன், வைத்திய கலாநிதி அருட்குமரன் ஆகியோரும் கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் தலைவர் வைத்திய கலாநிதி த.சத்திய மூர்த்தி, உபதலைவர் அ.பங்கையற்செல்வன், ஆகியோருடன் உறுபபினர்களான வைத்திய கலாநிதி மா. ஜெயராஜா, க.கடம்பசோதி மற்றும் உத்தியோகத்தர்களும் பயன் பெறும் கிழக்கு மாகாண பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொண்டனர். (90)

## உபகரணம் வழங்கல்

குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களுக்கு லண்டன் விக்னேஸ்வரா மன்றத்தினால் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை மண்டபத்தில் உப அதிபர் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் கிராம அலுவலர் சோ.பரமநாதன் கலந்துகொள்ளவுள்ளார்

## மஹா கும்பாபிஷேகம்

(வேலணை)

வேலணை வங்களாவடி அருள்மிகு ஸ்ரீ வள்ளிதேவசேனாசமேத முருகன் ஆலய மஹாகும்பாபிஷேகம் நேற்றுமுன்தினம் வெகு சிறப்பாக இடம்பெற்றது.


கதிரமலைச்சிவன் ஆலய பிரதம குரு முத்தமிழ் மணி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இக் கும்பாபிஷேக நிகழ்வில் ஆசியுரை, நாதஸ்வர இசை, சங்கம நிகழ்வு என்பன இடம்பெற்றன. (05)

## ஜெய்ப்பூர் நிறுவனத்தின் இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச வலுவிழந்தோர் தினத்தை முன்னிட்டு இரத்ததான நிகழ்வொன்று எதிர்வரும் 3 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நிறுவனத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கியின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த இரத்ததானம் இடம்பெறவுள்ளதாகவும், தொடர்ந்து சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் தலைமையில் மாற்றுத் திறனாளிகள் பங்குபற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.



பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலுள்ள பளை மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக வடிகால் வாய் சீர் செய்யப் படாமையால் வெள்ளநீர் தேங்கி காணப்படுகிறது. (37)


## வாழ்க வளமுடன்

பெயர் : ஜீ.பிரஜீத்
முகவரி: ஆதவன் அரிசி ஆலை, அச்சுவேலி.

அகவை 1 இல் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................
முகவரி :- ........................................
பிறந்த ஆண்டு :- ........................................
கூப்பன் ஐந்தும், புகைப்படமும்
........................
பெற்றோர் கையொப்பம்


## மன்னார் உயிலங்குளத்தில் பொலிஸ் நடமாடும் சேவை

வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரின் வழி நடத்தலின் கீழ் பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையில் சிநேக பூர்வமான ஒற்றுமையினை ஏற்படுத்தும் வகையில் பொலிஸ் நடமாடும் சேவை ஒன்று கடந்த புதன் கிழமை காலை மன்னார் உயிலங்குளத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

உயிலங்குளம், வண்ணாமோட்டை ம.வி பாடசாலையில கடந்த புதன்கிழமை குறித்த நடமாடும் சேவை ஆரம்பமாகியது.

மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜந்த ரொட்றிகோ தலைமையில் ஆரம்பமான குறித்த நடமாடும் சேவையில் சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்தன அழகக்கோன, உதவி பொலிஸ அத்தியட்சகர் ஐ.பி.ரி.சுகதபால ஆகியோர் கலந்துகொண்டனர்.

குறித்த நடமாடும் சேவை கடந்த புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளதாக மன்னார் பொலிஸ நிலைய பொறுப்பதிகாரி அஜந்த ரொட்றிகோ தெரிவித்தார்.

குறித்த நடமாடும் சேவையானது பொலிஸ் முறைப்பாடுகளை பதிவு செய்தல், காணிப்பிரசசினைகளை தீர்த்து வைத்தல், பொலிஸ் முறைப்பாட்டு பிரதியை பெற்றுக் கொள்ளுதல் உள்ளிட்ட பல சேவைகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

இதனால் இப்பகுதி மக்கள் எவ்வித பிரச்சினைகளும் இன்றி குறித்த சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கடத்தப்பட்ட 39 இந்தியர்களையும் படுகொலை செய்தது ஐ.எஸ்.ஐ.எஸ்.

ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட 39 இந்தியர்கள் படுகொலை செய்யப்பட்டதாக அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகி உள்ளன.

சிரியாவின் பல பகுதிக்ளைக் கைப்பற்றிய ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் ஈராக் மீதும் போர் தொடுத்தனர்.

இந்தப் போரின் போது ஈராக்கின் 2ஆவது பெரிய நகரமான மொசூல் நகரத்தில் ஜூன் 10ஆம் திகதியன்று 91 வெளிநாட்டவரை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றனர்.

இவர்களில் 40 பேர் இந்தியவர்கள். 51 வங்கதேச நாட்டவர். கடத்தப்பட்ட இந்தியர்களில் பெரும பாலானோர் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்.


இவர்கள் அனைவரையும் மீட்க பஞ்சாப் முதல்வர் பாதல் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்ததுடன் கடத்தப்பட்டோர் குடும்பத்தினருக்கு மாதாந்திர நிதி உதவியையும் அறிவித்திருந்தார்.

இருப்பினும் 40 இந்தியர்களின் நிலை என்ன என்று தெரியாமல் இருந்து வந்தது. இந்நிலையில் குர்திஸ்தானின் ஏர்பில் நகரில் தீவிரவாதிகளிடம் இருந்து தப்பி வந்த வங்கதேசத்தைச் சேர்ந்த ஷபி மற்றும் ஹாசன் ஆகியோர் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்துள்ளனர்.

அந்தப் பேட்டியில் "கடத்தப்பட்ட 40 இந்தியர்களில் ஹர்மீத் என்பவர் தீவிரவ்ாதிகளிடம் இருந்து தப்பி வந்தார். அவர் எங்களிடம் கடந்த யூலை மாதம் 39 இந்தியர்களையும் தீவிரவாதிகள் படுகொலை செய்ததை தாங்கள், நேரில் பார்த்ததாக தெரிவித்தார் என்று கூறியுள்ளனர்.

ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருந்து தப்பி வந்த வங்கதேசத்தவரின் இந்தப் பேட்டி பெரும் அதிர்ச்சீயை ஏற்படுத்தியுள்ளது.

# எச்.ஐ.வி. சோதனையில் சாதனை படைக்க திட்டம்



எத்தியோப்பியாவில் எச்.ஐ.வி. சோதனை நடாத்துவதில் புதிய உலக சாதனை படைப்பதற்கு அந்நாட்டு அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

உலக எயிட்ஸ் தினமான டிசம்பர் முதலாம் திகதி அதிக எண்ணிக்கையிலான எச்.ஐ.வி. சோதனை நடத்துவதன் மூலம் இச்சாதனையை நிகழ்த்துவதற்கு எத்தியோப்பிய சுகாதார அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

2012 நவம்பரில் ஆர்ஜன்ரீனாவில் 1380 பேருக்கு ஒரே நாளில் எச்.ஐ.வி. சோதனை நடத்தப்பட்டமை உலக சாதனையாகவுள்ளது. இச்சாதனையை முறியடிப்பதற்காக 2000 பேருக்கு எச்.ஐ.வி. சோதனை நடத்துவது எத்தியோப்பிய அதிகாரிகளின் திட்டமாக உள்ளது.

எத்தியோப்பியாவின் கம்பெலா பிராந்தியத்தில் இச்சோதனைகள் நடத்தப்படும் என அந்நாட்டு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அப்பிராந்தியத்தில் சுமார் 6.5 சதவீதமானோர் எச்.ஐ.வி. அல்லது எய்ட்ஸ் தாக்கத்துக்குள்ளானவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. 1980களில் இந்நோய் பரவ ஆரம்பித்ததிலிருந்து எத்தியோப்பியாவில் சுமார் 8 இலட்சம் பேர் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என யூ.என்.எய்ட்ஸ் எனும் ஐ.நா. முகவரத்தைச் சேர்ந்த டாக்டர் வெர்ரன் நாமரா தெரிவித்துள்ளார்.

# யுரிபனா சிறையில் 17கைதிகள் மரணம்

வெனிசுலாவின் யுரினா சிறையில் உண்ணாவிரதமிருந்த 17கைதிகள் மரணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெனிசுலாவின் லாரா மாநிலத்தில் யுரிபனா சிறையில் ஏராளமான கைதிகள் அடைக்கப்பட்டு உள்ளனர். இங்குள்ள கைதிகளை, சிறை அதிகாரிகளும், காவலர்களும் காட்டுமிராண்டித்தனமாக தாக்கி துன்புறுத்துவதாக கூறப்படுகிறது.

இதனைக் கண்டித்து கைதிகள் அனைவரும் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.


இந்தநிலையில் உண்ணாவிரதம் இருந்த கைதிகளில் 17 பேர் திடீரென உயிரிழந்துள்ளனர். இதுகுறித்து சிறை அதிகாரிகள் கூறுகையில், கைதிகள் பயன்படுத்திய மருந்துப் பொருளில் விஷம் கலந்திருந்ததால் அவர்கள் இறந்ததாக தெரிவித்துள்ளனர். ஆனால் எவ்வாறு மருந்துப் பொருளில் விஷம் கலந்தது என்பது குறித்த விபரம் உடனடியாக தெரியவில்லை. இதுகுறித்து அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

உலகச் செய்திகள்

# நடுக்கடலில் தத்தளித்த 700 அகதிகள் மீட்பு


சரக்கு கப்பலில் ஏற்பட்ட கோளாறால் நடுக்கடலில் தவித்த சுமார் 700 அகதிகளை கிரீஸ் கடற்படை மீட்டுள்ளது.

77 மீட்டர் நீளமுள்ள சரக்கு கப்பல் கிரீஸ் நாட்டின் லெராபெட்ரா கடற் பகுதியில் தத்தளிப்பதை அந்த நாட்டு கடற்படையினர் கண்டுபிடித்தனர். அந்த கப்பலில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட 700 பேர் இருந்தனர்.



உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டுள்ள சிரியா மற்றும் ஈராக்கைச் சேர்ந்த அவர்கள் ஐரோப்பாவுக்கு சட்டவிரோதமாக குடியேறுவதற்காக சரக்கு கப்பலில் வந்துள்ளனர். அவர்கள் வந்த கப்பலின் என்ஜினில் திடீரென கோளாறு ஏற்பட்டு நடுக்கடலில் நின்றுவிட்டது. இந்தக் கப்பலை கிரீஸ் கடற்படையினர் கண்டுபிடித்து இழுவைக்கப்பல் மூலம் கரைக்கு இழுத்துவந்தனர். அகதிகள் தங்குவதற்காக லெராபெட்ராவில் உள்ள கூடைப்பந்து விளையாட்டு அரங்கில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# எபோலா நோய்க்கு மருந்து கண்டுபிடிப்பு



அமெரிக்காவில் எபோலாவை குணப்படுத்தும் மருந்து கண்டுபிடிக்கப்பட்டு அது நோய் பாதித்த 20 பேருக்கு பரிசோதிக்கப்பட்டு வெற்றியளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.எபோலா என்ற கொடிய வைரஸ நோய் மேற்கு ஆபிரிக்காவில் லைபீரியா, கினியா, சியாரா லியோன் ஆகிய நாடுகளில் கடுமையாகத் தாக்கியுள்ளது. அமெரிக்கா, ஸ்பெயின் உள்ளிட்ட 6 நாடுகளில் பரவலாக உள்ளது.

இந்த உயிர் கொல்லி நோயை குணப்படுத்த இதுவரை மருந்து கண்டு பிடிக்கப்புடவில்லை. எனவே நோயை கட்டுப்படுத்த பல நாடுகள் தாங்கள் கண்டு பிடித்த மருந்துகளை பயன்படுத்தி வருகின்றன.

இந்த நிலையில் அமெரிக்காவில் எபோலாவை குணப்படுத்தும் மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக நோய் பாதிப்பு தெரிந்த 20 பேருக்கு கொடுத்து பரிசோதிக்கப்பட்டது.

அவர்களில் அதிக அளவு நோய் தாக்கி 39 டிகிரி செல்சியஸ் காய்ச்சல் இருந்த 2 நோயாளிகளுக்கு ஒரே நாளில் குணமாகி விட்டது. அதை தொடர்ந்து எபோலா மருந்து சோதனை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மருந்தில் எதிர்ப்பு சக்தியை மேலும் அதிகரித்து எபோலா நோய் அதிகம் பாதித்த மக்களுக்கு வழங்கி பரிசோதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தையை இரத்து செய்திருக்கக் கூடாது இந்தியா

## நவாஸ்ஷெரிப் தெரிவிப்பு



பிரிவினைவாத தலைவர்களுடனான ஆலோசனை என்பது புதிய நடைமுறை இல்லை. அதை காரணம்காட்டி இந்தியா - பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர்கள் இடையிலான பேச்சுவார்த்தையை, இந்திய அரசு இரத்து செய்திருக்கக் கூடாது என பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

நேபாளத்தில் நடைபெற்ற 18ஆவது சார்க் உச்சி மாநாட்டை முடித்துக்கொண்டு இஸ்லாமாபாத் திரும்பியபோது விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது "இந்தியா - பாகிஸ்தான் பேச்சுவார்த்தை நடைபெறும்போதெல்லாம், பாகிஸ்தான் தரப்பில் பிரிவினைவாத தலைவர்களை சந்தித்து ஆலோசனை நடத்துவது வழக்கமானதே. காஷ்மீர் பிரச்சினையில் நேரடியாகத் தொடர்புடையவர்கள் பிரிவினைவாத தலைவர்கள் என்பதாலேயே அவர்களிடம் பாகிஸ்தான் எப்போதும் கருத்து கேட்கிறது. எனவே, பிரிவினைவாத தலைவர்களுடனான ஆலோசனை என்பது புதிய நடைமுறை இல்லை. அதை காரணம்காட்டி இந்தியா - பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர்கள் இடையிலான பேச்சுவார்த்தையை, இந்திய அரசு இரத்து செய்திருக்கக் கூடாது" என்றார்.

கடந்த ஓகஸ்ட் 25ஆம் திகதி, இந்தியா - பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர்களிடையேயான பேச்சுவார்த்தை இஸ்லாமாபாத்தில் நடைபெறுவதாக இருந்தது. ஆனால், "பாகிஸ்தான் தூதர், காஷ்மீர் பிரிவினைவாதத் தலைவர்களை சந்தித்துப் பேசுவது சந்தேகங்களை எழுப்புகிறது. எனவே இந்திய வெளியுறவுச் செயலரின் இஸ்லாமாபாத் பயணம் இரத்து செய்யப்படுகிறது" என இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாசத்தின் வெளிப்பாடு; 25 தீவிரவாதிகள் கொலை

## ஆப்கானிஸ்தானில் சம்பவம்



ஆப்கானிஸ்தானின் பரா மாகாணத்தில் பொலிஸ் அதிகாரியான தனது மகனை சுட்டுக் கொன்ற தலிபான் தீவிரவாதிகளைப் பழி வாங்கும் விதத்தில் அவரது தாய் துப்பாக்கியால் சுட்டு 25 தீவிரவாதிகளை கொன்று குவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் குறிப்பாக மேற்கு மாகாண பகுதிகளில் அரசுக்கு எதிராக தீவிரவாதிகள் சதிச்செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், ஆப்கானிஸ்தானின் மேற்கு பகுதியில் அமைந்த பரா மாகாணத்தில் சோதனைச் சாவடி ஒன்றில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தவர்களை நோக்கி தலிபான் தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதிகாலை 5 மணியளவில் இந்த தாக்குதல் நடந்துள்ளது.

அதனால் எழுந்த சத்தத்தை அடுத்து ரெசா குல் என்ற பெண்மணி தூக்கத்தில் இருந்து விழித்து எழுந்துள்ளார். அவர் கிராம பகுதியில் அமைந்த சோதனைச் சாவடியில் பணியில் ஈடுபட்டிருந்த பகுதிக்கு சென்றபோது அங்கு தனது மகன் துப்பாக்கியால் சுடப்பட்டு பலியாகி கிடப்பதை கண்டுள்ளார்.

இதனால் ஆத்திரமுற்ற குல் அங்கு கிடந்த துப்பாக்கி ஒன்றை கையில் எடுத்து தீவிரவாதிகளை நோக்கி சரமாரியாக சுட்டுள்ளார். அவருடன் சேர்ந்து அவரது கணவர், மகள், இளைய மகன் மற்றும் மருமகள் ஆகியோரும் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். இந்த துப்பாக்கி சூட்டில் 25 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# அபிவிருத்தியில் அக்கறையில்லை சுயநலனில் மட்டும் அதிக கவனம்

## கூட்டமைப்பினர் மீது கண்டனம்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண மக்களுக்கான அபிவிருத்தி மேம்பாட்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது சுகபோக வாழ்வை அனுபவிக்கின்றனர் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற வன்னி மாவட்ட ஆசிரிய உதவியாளர் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் அரசில் இருப்பது கொள்கைக்காகவேயன்றி எமது சுயலாபத்துக்காக அல்ல.

இந்நிலையில், வடமாகாண மக்களின் அபிவிருத்தி மேம்பாட்டு செயற்றிட்டங்களுக்காக மத்திய அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் ஊடாக பல்வேறுபட்ட அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியும்.

இருந்த போதிலும் இவ்வாறு மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிலோ, அபிவிருத்தியிலோ அக்கறையற்றவர்களாகவும் விருப்பமில்லாதவர்களாகவும், திறனற்றவர்களாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இற்றைவரை இருந்து வருகின்றனர்.

அதுமட்டுமன்றி அரசின் நிதியொதுக்கீட்டின் ஊடாக முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்திகளைக் கருத்தில் கொள்ளாமல் தமது சுகபோகங்களுக்காக நிதியினை பயன்படுத்தி வருகின்றமையானது எமது மக்கள் மத்தியில் விசனத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

வாக்களித்து வெற்றிபெறச் செய்த மக்களின் அபிவிருத்திகளை புறந்தள்ளிவிட்டு தமது சுயலாபங்களையும், சுகபோகங்களையும் அனுபவித்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நடவடிக்கைகள் கண்டிக்கப்பட வேண்டியவை என்றும் தெரிவித்தார்.

இருந்தபோதிலும் நாம் அரசுடனான நல்லுறவு மற்றும் இணக்க அரசியல் ஊடாக பல்வேறுபட்ட அபிவிருத்திகளையும், மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான பல்வேறு செயற்றிட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றோம் என்றும் தெரிவித்தார்.

ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு ஆரம்பத்தில் மாதாந்தம் ஆறாயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டு வரும் நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியின் பயனாக கடந்தாண்டு செப்ரெம்பர் முதல் 4,000 ரூபா அதிகரிக்கப்பட்டு தற்போது ஆசிரிய உதவியாளர்கள் மாதாந்தம் 10,000 ரூபா பெற்று வருகின்றனர்.

இவ் ஆசிரிய உதவியாளர்கள் தற்போது கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இரண்டு வருட கற்கைநெறியை மேற்கொண்டு வரும் நிலையில் 2016 ஆம் ஆண்டு கற்கை நெறியினை பூர்த்தி செய்யவுள்ளனர்.

இதனிடையே தமது ஏனைய பிரச்சினைகள் தேவைப்பாடுகள் தொடர்பிலும் அமைச்சர் கவனத்திற்குக் ஆசிரிய உதவியாளர் பிரதிநிதிகள் தெரியப்படுத்தியிருந்தனர்.

இதன்போது அமைச்சரின் ஆலோசகர் சுந்தரம் டிவகலாலா உடனிருந்தார்.

# ஆணைக்குழுவின் பரிந்துரைகள் முழுமையாக அமுலாக்கப்படும்

## மைத்திரி அறிவிப்பு

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகள் முழுமையாக அமுல்படுத்தப்படும் என பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள சகல தேர்தல் பிரசார பதாகைகளையும் அகற்ற பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிவனொளிபாத மலையில் கூட பதாகைகளையும் சுவரொட்டிகளையும் ஒட்டி பிரசாரம் செய்ய முடியும் என்ற போதிலும் தாம் பொலித்தீன் பயன்படுத்தி பிரசாரத்தில் ஈடுபடப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தை விட்டு விலகிய ஏழு நாட்களுக்கு பாரியளவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தற்போது அரசாங்கத்தினால் மேற்கொண்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் எனவும் தற்போதைய செலவை விடவும் மூன்றில் ஒரு மடங்கு குறைந்த செலவில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### கூட்டமைப்பு...

பின் கடந்த 2013 ஆம் ஆண்டு அந்த வெற்றிடத்திற்கு தியாகராஜா நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

### எதிரணியின்...

பட்டுள்ளது. தெளிவு மற்றும் தற்போதைய அரசியல் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொது எதிர்க்கட்சிகளில் இடம்பெற்றுள்ள அரசியல் கட்சிகளின் அடிப்படை கொள்கைகளை உள்ளடக்கியதாகவும் தேர்தல் விஞ்ஞாபனம் காணப்படும். எனினும் எப்போது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவது என தீர்மானிக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

### இரு வாரத்தில்...

தொடர்புடைய 7 பேரும், கத்தியால் வெட்டிய ஒருவருமாக 298 பேரும்,

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் பாரிய குற்றமிழைத்த 2 பேரும், சட்டவிரோத மது விற்ற 5 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 29 பேரும், சந்தேகத்தின் பேரில் 12 பேரும், மதுபோதையில் வாகனம் செலுத்திய 5 பேரும், ஏனைய குற்றங்களுக்காக 61 பேருமாக 109 பேர் கைதுசெய்யப்பட்டதுடன், நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வெடிபொருட்கள் கடத்திவரப்பட்டது ஏன்?

## விசாரணைகள் ஆரம்பம்

சக்திவாய்ந்த வெடிபொருட்களை கடத்திய மூவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பயங்கரவாத புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ. டி.விமலசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் டி.ஐ.ஜியின் விசேட பிரிவினருக்கு கிடைத்த தகவலையடுத்து வெடிபொருட்களுடன் 3 முஸ்லிம்கள் கைதுசெய்யப்பட்டனர். புத்தளத்திலிருந்து கொண்டுவரப்பட்ட இந்த வெடிபொருட்களுள் ஜெலிக்னைட் 285 உருளைகளும், 97 டிக்னேற்றர்களும், 145 மீற்றர் வெடிக்கவைக்கும் திரிகள் என்பன அடங்கியிருந்தன.

ஆரம்ப விசாரணைகளைத் தொடர்ந்து இவை எங்கிருந்து பெறப்பட்டன போன்ற விரிவான விசாரணைக்காக பயங்கரவாத புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# பயணிகள் பஸ்ஸில் கேரள கஞ்சா மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பயணிகள் பஸ்ஸில் 2 கிலோ கேரள கஞ்சா நேற்று கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்று மாலை யாழிலிருந்து புறப்பட்ட சில நிமிட நேரங்களில் யாழ். நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு அருகில் வந்த பஸ் மறிக்கப்பட்டு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

பஸ்ஸின் பின்புறத்தே அநாதரவாகக் காணப்பட்ட 2 கிலோ கேரள கஞ்சாவே நேற்று கைப்பற்றப்பட்டதுடன், பயணிகளும் யாழ். பொலிஸாரால் விசாரணை செய்யப்பட்ட பின்னர் கொழும்பு பயணத்திற்கு பஸ் அனுமதிக்கப்பட்டது.

மேற்படி பஸ் உரிமையாளர் கொழும்பு பிரதேசத்தை சேர்ந்த சிங்களவர் என்பது குறிப்பிடத்தக்கது. (25)

# மாலக்க சில்வாவுக்கு பிணை

(கொழும்பு)

அமைச்சர் மேர்வின் சில்வாவின் புதல்வர் மாலக்க சில்வா இரவு நேர களியாட்ட விடுதிகளுக்கு செல்ல நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஸ்கொட்லாந்து தம்பதியினர் மீதுதாக்குதல் நடத்தியதாக மாலக்க சில்வா உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

ஸ்கொட்லாந்து பிரஜை ஒருவரை தாக்கியதாகவும், அவரது காதலியுடன் தவறாக நடக்க முற்பட்டதாகவும் மாலக்க மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணைகள் பூர்த்தியாகும் வரையில் மாலக்க சில்வா, இரவு நேர களியாட்ட விடுதிகளுக்கு செல்லக்கூடாது என நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

50000 ரூபா ரொக்கப் பிணையிலும், தலா பத்து இலட்சம் ரூபா இரண்டு சரீரப் பிணையிலும் மாலக்க சில்வாவை விடுதலை செய்வதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

### சமயாசமய...

அரசின் கொள்கைத்திட்டங்களுக்கு அமைவாக முன்னெடுத்து வருகின்றோம்.

இதன்மூலமே எதிர்காலத்தை இளைய சமூகத்தினரின் நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் பட்சத்திலேயே சமூகத்தின் பொருளாதாரத்தையும் மேம்படுத்த முடியும்.

எனவே, இருக்கிறதைப் பாதுகாத்துக் கொண்டு அதிலிருந்து முன்னேற்றம் காண வேண்டுமென்பதுடன் எதிர்காலங்களில் மக்கள் சரியான அரசியல் தலைமையை தெரிவுசெய்வதன் மூலம் மேலும் முன்னேற்றத்தைக் காணமுடியும்.

அந்தவகையில், நியமனம் கிடைக்கப் பெறுகின்ற நீங்கள் உங்களதும் நீங்கள் சார்ந்து வாழும் சமூக மேம்பாட்டுக்காகவும், நலனுக்காகவும் உண்மையுடன் உழைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதில் 18 பேருக்கு நியமனப் பத்திரங்கள் வழங்கி வைத்ததுடன் தமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

நியமனம் பெற்றுக் கொண்டவர்கள் யாழ்.மாவட்ட பாடசாலைகளில் சமையலாளர், சுகாதாரத் தொழிலாளர், காவலாளி போன்ற பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

### போர்க்குற்ற..

எனினும் நான் வெற்றி பெற்ற பிறகு, மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பம், பாதுகாப்புச் செயலாளர், அல்லது பயங்கரவாத பிடியில் இருந்து நாட்டை மீட்ட முப்படையினர் உட்பட அனைவரையுடம் புலிகளுடன் சம்பந்தப்பட்ட புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து பாதுகாப்பேன் என்பதை தெளிவாக கூறி உறுதியளிக்கின்றேன் எனவும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

### தேர்தல்...

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் சின்னம் தொடர்பான சர்ச்சைக்கு தீர்வு காணப்படவில்லை.

தேர்தல் ஆணையாளர் நாடு திரும்பியதைத் தொடர்ந்தே, மைத்திரிபால சிறிசேன என்ன சின்னத்தில் போட்டியிடுவார் என்பது உறுதியாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தவிர்க்க முடியாத காரணமொன்றிற்காக. இவ்வாறு தேர்தல் ஆணையாளர் வெளிநாட்டுக்கு விஜயம் செய்ய உள்ளதாக தேர்தல் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளர் வெளிநாட்டு விஜயத்தை மேற்கொண்ட காரணத்தினால் பொது வேட்பாளர் சின்னமொன்று இல்லாமலேயே பிரசாரத்தை மேற்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தனது முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தை பொலன்நறுவையில் நடத்தவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆளும் கட்சி...

ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஏ.எச்.எம். அஸ்வர் தனது இராஜினாமாக் கடிதத்தை ஒப்படைத்துள்ளார்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க சேனாநாயக்க இதனை உறுதி செய்துள்ளார்.

தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான அஸ்வர் கடந்த 2010 ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும், என்ன காரணத்திற்காக பதவி விலகுவதாக அஸ்வர் இதுவரையில் தெளிவுபடுத்தவில்லை.

இதேவேளை, மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பாதுகாப்புச் செயலர் கோத்தாபயவிற்கு வழங்கப்படலாம் என்ற தகவல் கசிந்துள்ளது எனினும் அது உறுதிப்படுத்தப்படவில்லை.

அதேவேளை ஏ.எச்.எம்.அஸ்வரின் ஆசனம், கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீனின் கட்சி உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் றிசாட் தலைமையிலான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளது.

இதன் காரணமாக றிசாட்டின் கட்சி உறுப்பினர் ஒருவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியொன்றை வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கட்சியின் கிழக்கு மாகாண உறுப்பினர் அமீர் அலிக்கு இந்த சந்தர்ப்பம் வழங்கப்படலாம் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# எதிர்காலத்திற்கான பாதையை தெளிவாக காட்டுபவர் டக்ளஸ்

## – அடிக்கல் நாட்டு விழாவில் ஜெகன் தெரிவிப்பு



(தென்மராட்சி)

மீண்டும் ஒருவர் அதிகாரத்திற்கு வருவாரானால் எமது மக்களுக்கான தேவைகளை அவரிடம் நாங்கள் அரிச்சுவடியிலிருந்துதான் தொடங்கவேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்படுவோம்.

ஆனால் இருப்பவரே தொடர்ந்தும் பதவியில் இருந்தால் எமது அபிவிருத்திகளையும் தேவைகளையும் தற்போது இருக்கும் நிலையிலிருந்தே மேலும் மேம்படுத்திக் கொள்ள முடியும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான கே.வி.குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி கரம்பகம் வீரபத்திரர் சனசமூக நிலைய அடிக்கல் நாட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்தகால அழிவுகளிலிருந்து மீண்டும் எதிர்காலத்திற்கான பாதையைத் திறக்க மக்களுக்காக போராடிக் கொண்டிருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது அபிவிருத்தியின் ஒரு அங்கமாகவே இந்த சனசமூக நிலைய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் நடைபெறுகின்றது.

தற்போது எமது மக்கள் ஜனாதிபதித் தேர்தலை எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் இருக்கின்றனர். இந்தக் காலத்தில் தான் தமிழ் மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டியுள்ளது.

மக்களது தேவைகளை பெற்றுக் கொள்ள மக்களுக்கு சேவைசெய்யும் பிரதிநிதியைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த வகையில் தற்போதைய சூழ்நிலையில் மாற்றங்கள் வரலாம். ஆனால் இணக்க அரசியலை மேற்கொண்டு மக்களுக்கான தேவைகளை பெற்றுத்தர அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என்றும் உங்களோடுதான் இருப்பார்.

ஈ.பி.டி.பியின் தென்மராட்சி இணைப்பாளர் அலெக்ஸான்டர் சாள்ஸ், மெடிஸ்கோ, கரம்பைக் குறிச்சி கிராமசேவையாளர் ஞானசேந்தன் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோருடன் அப்பகுதி முக்கியஸ்தர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.



நேபாளம், காத்மண்டுவில் நடைபெற்ற 18 ஆவது சார்க் மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் ஆகியோர் சந்தித்துக் கொண்ட போது...

# எதிர்வரும் 2 ஆம் திகதி சுனாமி ஒத்திகை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினால் சுனாமி ஒத்திகை நிகழ்வொன்று எதிர்வரும் 2 ஆம் திகதி நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பூம்புகார் கிராமத்தில் இடம்பெறவுள்ளது.

இதனை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையமும், யாழ். மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ இணைய அலகும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இவ் ஒத்திகை நிகழ்வு அனர்த்த முகாமைத்துவ உப குழுக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நிகழ்த்தப்படவுள்ளது.

இதில் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவினர், 5 வலயக் கல்விப் பணிப்பளர்கள், 15 பிரதேச செயலர்கள், உள்ளூராட்சி திணைக்கள செயலாளர்கள், வைத்திய அதிகாரிகள், சுகாதார பகுதியினர், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளடங்கலாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அதிகாரிகள் என 900 பேர் இதில் கலந்து கொள்ளவுள்ளதாக யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

# மன்னாரிலும் கனமழை ஐயாயிரம் பேர் பாதிப்பு



மன்னார் மாவூட்டத்தில் தொடர்ந்து பெய்த மழை காரணமாக அயிரத்து 428 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 658 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

இதன்படி மன்னார் பிரதேச செயலக பிரிவில் 758 குடும்பங்களைச் சேர்ந்த 2903பேரும், நானாட்டான் பிரதேச செயலக பிரிவிலிருந்து 12 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேரும், மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் 658 குடும்பங்களை சேர்ந்த 2714 பேரும் இடம் பெயர்ந்த நிலையில் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு தேவையான உலர் உணவு மற்று அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு அனர்த்த முகாமைத்துவ பிரிவு நடவடிககைகளை மேற்கொண்டுள்ளது.

# படகுகளில் சென்ற மூவர் இதுவரை வீடு திரும்பவில்லை

பருத்தித்துறை சக்கோட்டையில் இருந்து மீன் பிடிக்க படகுகளில் சென்ற மூவர் இதுவரை வீடு திரும்பவில்லை. இதனால் குடும்பத்தின் உறவுகள் ஆழ்ந்த துக்கத்தில் இருப்பதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளன தலைவர் அ.எமிலியாம்பிள்ளை கவலை தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் மீன்பிடிக்க சக்கோட்டையில் இருந்து புறப்பட்டவர்கள் நேற்றுக் காலை 8.30 மணிக்க திரும்பியிருக்க வேண்டும். ஆனால் இதுவரை அவர்கள் கடலில் இருந்து மீள வரவில்லையென உறவினர்கள் பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளனர்.

இவ்வாறு நேற்று அதிகாலை முதல் காணாமற்போன மீனவர்களாக செபமாலை றொபேட் கெனடி (வயது - 35), வலன்ரைன் உதயகுமார் லூயிசியஸ் நித்தியசீலன் ஜெயவலன் (வயது - 29), சிரிஷாந் பொன்ராசா (வயது - 31) ஆகியோரே இதுவரை வீடு திரும்பவில்லை. மேற்படி காணாமற் போனவர்கள் குறித்து பொலிஸ் தேடி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (18,01)

# மழையால் பாதிப்படைந்த மக்களுக்கு உதவி



(காரைநகர்)

காரைநகரில் சில தினங்களாக கன மழை பெய்து வருவதனால் அங்குள்ள சில குடும்பங்களின் இயல்புநிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்வையிட்ட காரைநகர் பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் பிரதேசத்திற்கான இணைப்பளருமான வீ.கண்ணன் அப்பகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிந்ததோடு அவர்களுக்குத் தேவையான அத்தியவசிய உதவிகளையும் மேற்கொண்டார்.

அத்துடன் அவர்களது குடியிருப்புப் பகுதிகளில் தேங்கி நிக்கும் வெள்ளத்தை உடனடியாக அப்புறப்படுத்துவதற்காக வேனன அணைக்கட்டின் வான் கதவுகளைத் திறப்பது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு அவர்கள் படும் இன்னல்கள் தொடர்பாக எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்தாலோசித்து உரிய நிவாரணங்கள் மற்றும் இழப்பீடுகள் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேவேளை மக்கள் தமக்கு உடன் உதவுமாறும் அமைப்பாளர் கண்ணனை கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 1545 குடும்பங்களுக்கு யாழ்.அரச அதிபர் உதவி

(யாழ்ப்பாணம்)

கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்துவரும் அடைமழை காரணமாக யாழ்.குடாநாட்டில் 1545 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதகவும், சில குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் அவர்களுக்கான அவசர உதவிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் நேற்று தெரிவித்தார்.

தற்போது பெய்துவரும் அடைமழையினால் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கரவெட்டி, தெல்லிப்பளை, சாவகச்சேரி, சண்டிலிப்பாய், சங்கானை போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இதில் 158 குடும்பங்கள் 5 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பருத்தித்துறையில் 3 நலன்புரி நிலையங்களிலும், கரவெட்டியில் 2 நலன்புரி நிலையங்களிலும் மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கான உடனடித் தேவையான சமைத்த உணவு வழங்கி வருகின்றோம். உணவு வசதிகளுடன் அவர்களுக்கான உலர் உணவுகளை வழங்கவும் பிரதேச செயலாளர்கள் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளோம்.

பாதிப்பு நிலைமைகளை நாம் தொடர்ச்சியாக அவதானித்து வருகின்றோம். நிலைமைக்கு ஏற்ப தமது செயற்பாடுகளை விரிவுபடுத்த தாம் தயாராக இருப்பதாக அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (இ,25)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 நவம்பர் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.